Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

ஒக்ரோபர் 25-31, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 985

## 13 ஆவது சட்ட திருத்தமும் தமிழர்களுக்கான தீர்வும்

## கிழக்கில் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த முருக்கன் தீவு

## மலையகத்தில் மாற்று தொழிற்சங்க சம்மேளனம் சாத்தியமாகுமா?



# நந்தி என்பவர் யார்?

சிலாத முனிவர்- சாரு இலட்சனை தம்பதிக்கு நெடுங்காலமாக புத்திர பாக்கியம் கிட்டவில்லை. அதனால் சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்தார் சிலாதர். அவரது தவத்துக்கு இரங்கிய சிவ பெருமான் மழலை வரம் அருளினார். இறை அருளால் பிறந்த பிள்ளைக்கு நந்தி என பெயர் சூட்டி வளர்த்தனர். ஆனாலும் மகன் பிறந்த மகிழ்ச்சியை அத்தம்பதியார் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. ஏனென்னில் பிள்ளைக்கு ஆயுள் எட்டு வருடங்கள்தான் என்று நிபந்தனை விதித்திருந்தார் சிவபெருமான். அந்தக்காலம் நெருங்க நெருங்க பெற்றோரின் கவலை அதிகரித்தது.

இதை உணர்ந்த சிறுவனான நந்தி காரணம் கேட்க, வேறு வழியின்றி உண்மையைக் கூறினர். 'கவலை வேண்டாம்' என்று அவர்களை ஆறுதல்படுத்திய நந்தி, தனியே சென்று சிவனைக் குறித்து தவம் மேற் கொண்டான். சிவனருளால் பூரண ஆயுள் பலமும், கையிலைக்கே காவலனாகும் பேறும் பெற்றான். அதனால் அதிகார நந்தி எனப் பெயரும் பெற்றான்.

த.பாலி.

ஆன்மீகம்

# சுமைகள் சுகமாவது எப்போது?

வாழ்க்கையிலே ஒவ்வொருவருக்கும் துன்பங்கள் இருக்கும். ஆனால் பெரும்பாலோருக்கு இந்த சுமை மிகவும் சிரமமாகவே இருக்கிறது. நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருக்கும் தாத்தாவை சுற்றி கவலையோடு நிற்கும் உறவுகள், அவர்களை பார்க்கும் தாத்தாவின் முகத்தில் மகிழ்ச்சி. இப்படியிருந்த காலமெல்லாம் மாறிவிட்டது. நிகழ்காலத்தை நினைத்தாலே நெஞ்சம் புதறுகிறது. வலிமை மிக்க பாசமெல்லாம் இப்பொழுது பலமிழந்து தேய்ந்து வருகின்றது. தாத்தாவும் பாட்டியும் ஏன் பெற்றோர்கள்கூட முதியோர் இல்லங்களில் முடங்கி கிடக்கின்றனர். நம்மை சுமையாக கருதாத, கண்ணின் இமையாக, தோள்களில் சுமந்தவர்கள் இன்று நமக்கு சுமையாகிப் போனார்களா?

மனிதனின் வாழ்வு சிறக்க குடும்பத்தில் அன்பும் அரவணைப்பும் அவசியம். நம்முடைய சுமையை மற்றவர்களுக்கு கொடுக்க தயாராக இருக்கும் நாம், பிறரது சுமைகளையும் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். ஆனால், மனிதர்கள் இதுபோல சுமைகளை சுமக்கத் தயாராக இல்லாதபோது, நமக்குப் போக்கிடம் ஏது?

இருக்கிறது. அந்த இடம் வேறெதுவுமில்லை, இயேசுதான். "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்களெல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றும் இயேசு கூறியிருக்கிறார். ஆகவே, இப்போதைய சூழ்நிலையில் மனிதர்களை எதிர்பார்ப்பதைவிட, இயேசு மேல் நம் சுமைகளை இறக்கி வைப்போம். அப்பொழுது, நம் குடும்ப சுமைகளோடு, பொறுப்புணர்வுடன் பிறர் சுமைகளையும் சுமப்பதற்கான மன, உடல் வலு நமக்குக் கிடைத்துவிடும். அதனால், நம் வாழ்வின் உன்னதம் உயரும். உறவுகள் பலமுள்ளதாகும்.

கே.மரியா, ஆனைக்கோட்டை.

# அல்லாஹ்வை துதிப்போம்!

ஒருவரது வாயில் இருந்துவரும் வார்த்தைகள் நல்லதாகவே இருக்கவேண்டும். எதையும் சிந்தித்து பேசவேண்டும் பேசிய பின் சிந்திப்பதில் பயன் இல்லை. எமது பேச்சில் நமக்கோ, பிறருக்கோ பாதிப்பு ஏற்படக்கூடாது. நாளை மறுமையில் நமது பேச்சுக் களுக்கு அல்லாஹ்வின் விசாரணை உண்டென்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

வீண் பேச்சுக்களுக்குப் பதிலாக நல்ல பேச்சுக்களையே நாம் பேசவேண்டும். அப்போதுதான் அல்லாஹ்விடமிருந்து நாளை மறுமையில் நமக்கு நற்கூலி கிடைக்கும். கெட்ட பேச்சுக் களுக்காகச் செலவிடும் நேரத்தை இறைவழியிலும், இறை சிந்தையிலும் செலவிட வேண்டும். நமது நாவினால் விளையும் தீங்குகளோ ஏராளம். இதனால்தான் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தன் வாயினுள் கற்களைப் போட்டுக்கொண்டு பேசாதிருப்பார்களாம்.

ஆகவே நமக்கும் நாவடக்கம் தேவை. 'நா' தானாகவே அடங்கிவிடாது. அதனை நாமே பகுத்தறிவோடு பயன்படுத்த வேண்டும். அல்லாஹ் அவன் சிருஷ்டியான மனிதனுக்கு நாவை படைக்கப்பட்ட நோக்கமறிந்து நாவின் மூலம் அல்லாஹ்வை துதிப்போம் அளவோடு பேசுவோம்.

எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 982



### பாராட்டுக்குரியது

### ஏனோ?

கிளியைக் கொன்று
புசிக்கத் பிறந்தது பூனை
இவையே இயற்கை பகை மறந்து
இணைந்து வாழும்போது
ஆறறிவு படைத்த இந்த
மனித இனம் மட்டும்
ஒன்றையொன்று குத்திக் குதறி
குருதி வெள்ளத்தால் தினமும்
இப் புவியை நனைப்பதுமேனோ?

அ.சந்தியாகோ,
கண்டி.

### பாசத்திற்கேது பசியும் பகையும்

பகை அறியாது
பழகிவிட்டால்
ஆறறிவு மனிதர் மட்டுமா?
ஐயறிவு ஜீவன்களும்
ஒரு கூட்டில் வாழும் எங்க வீட்டு
நாயும், பூனையும்
தாயும்-பிள்ளையும் போல்
தூங்கும் காட்சிகண்டு
வியந்தோர் அநேகர்
ஒன்றாக - நன்றாக - அன்பாக
பழகிவிட்டால்
பறப்பன, நடப்பன
எல்லாமும்
நண்பர்கள் தான்.

V.A.ஜெஹ்னாஸ்,
மட்டக்களப்பு

## கவிதைப் போட்டி இல 985



### எப்போது?

காட்டுப் பிராணி
இவையிரண்டும்
காட்டுமிந்த ஒற்றுமையை
நாட்டு மனிதரிடம்
நாம் காண்பது எப்போது?

S.M.சுந்தரேசன், ஹட்டன்.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.11.2012

கவிதைப் போட்டி இல. 985 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### கிளிமொழி

கிளியை வளர்த்து
பூனையிடம் கொடுப்பதா? இது
அன்றையப்
பழமொழி
கொடுத்தாலும்
பூனை பிடிக்காது!
ஏன் தெரியுமா? அது
ரோசங்கெட்ட
பூனையும் - இது
மானங்கெட்ட
கிளியுமாம் - எனப் புதுமொழி
அதுவுங் கிளிமொழி!

பாண்டியூர் பொன் நவநீதன்.

### அர(வ) அணைப்பு



கள்ளமில்லா உள்ளம் படைத்த
கிளிப்பிள்ளையே- மனதினில்
கபடமுள்ள பூனையாரின்
அர(வ)அணைப்பில்
மயங்கிவிடாதே.

கு.விஜிதன், முல்லைத்தீவு.

### நல்லதொரு பாடம்



உன்னை ஐந்தறிவு
ஜீவன் என்று
எப்படிச் சொல்வது
இப்படி அழகாக
அணைத்துக் கொண்டு
தூங்குகிறாய்
ஆகட்டும்
ஆறறிவுப் பிசாசுகளுக்கு!

ஏ.ஆர்.நவாஸ் - கிண்ணியா

### மனிதாபிமானம்

பூனைக்கெல்லாம்
புத்திவந்து
புரிகிறது - இங்கே
புரியாதது மனிதாங்களே!

எஸ்.பி.பாலமுருகன்,
பதுளை.

# உங்கள் பக்கம்

## அதிகரிக்கும் வாகனங்களால் அவதியுறும் மக்கள்

அண்மைக் காலமாக நாட்டில் அதிகரித்து வருகின்ற வாகனப் போக்குவரத்துக்கள் காரணமாக கொழும்பு போன்ற பகுதிகளில் வாகன நெரிசல் பொதுமக்களின் அன்றாட வாழ்விற்குச் சவால்விடும் வகையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அண்மைக்காலமாக துறை சார்ந்த நிபுணர்களுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்வதில் வழங்கப் பட்டு வருகின்ற சலுகைகள், நாளுக்கு நாள் புதிதாக முளைவிடுகின்ற லீசிங் கம்பனிகளின் போட்டி என்பவற்றினால் சாதாரணமான மக்களும் வாகனங்களைக் கொள்வனவு செய்யக் கூடிய சூழலை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதனால் அதிகரித்துக்கொண்டு செல்கின்ற வாகனங்களின் எண்ணிக் கைக்கு ஏற்றவாறு வீதிகளின் விஸ்தரிப்பு அமையவில்லை என்பது பெரும்பாலானவர்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. அதை விட மேலை நாடுகளைப் போன்று காலத்துக்குக் காலம் பாவனைக்குதவாத வாகனங்களை சேவையில் இருந்து தடைசெய்வதற்கான ஏற்பாடுகளும் எமது நாட்டில் இதுவரை குறிப்பிடத்தக்க வகையில் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்ற வீதி விபத்துக்களும் உயிர்ப்பலிகளும் சர்வசாதாரணமாகிக் கொண்டிருக் கின்றது.

எனவே, இது தொடர்பில் உரிய தரப்பினர் விரைந்து சிந்தித்து ஆரோக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்.கோகுலவாசன்,
வெள்ளவத்தை

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:-
0212220188




### முப்பொழுதும் நீதான்!

வாசல் வந்து வசந்தம்வீச
வாசல்வரை காத்திருப்பேன்.
கால மாற்றமதை கண்ணும்
கருத்துமாய் சிந்தை பிசகாமல்
வாசக நெஞ்சங்களை
நிறைவடைய வைக்கின்றாயே
நேற்று - இன்று - நாளையென
முப்பொழுதும் உன்னை
யாசிக்கத் தவறுவதேயில்லை முரசே.

அ.யானு, யாழ்ப்பாணம்.

# வாசகர் சாலை



### வாழ்த்துக்கள்!

வாரம் ஒரு முறை எப்போது நீ உதயமாவாய் என்று ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு இருப்பேன். நீ அள்ளிவரும் அனைத்தும் அற்புதம். தொடர்கதைகள், பூலான்தேவி லேடீஸ் ஸ்பெஷல், அரசியல் கட்டுரைகள் என்பவை பிரமாதமாக உள்ளது. வலிகளின் சன்மானம் எனும் கதை என் மனதை பெரிதும் தொட்டுள்ளது. நானும் ஒரு வறுமை எழுத்தாளன் என்றவகையில் அதில் கூறப்பட்டுள்ள வலிகளில் சில என்னைத் தொட்டவை. வாழ்த்துக்கள் ரமேஷ்.

எம்.ஆதர்ஷா, வவுனியா.

### நல்வழிகாட்டி

முரசு தொடங்கிய நாள் தொடக்கம் உனது வாசகனாய் ஆகிவிட்டேன். எனது பிரதேசத்திற்கு முரசு ஆரம்பித்த நாள் தொடக்கம் இன்றுவரை வந்து கொண்டிருக்கின்றது. பல உண்மைகள், அறிவு சார்பானவை, சிந்தனைக்கு விருந்தாகுபவை, மனதை நெருட வைப்பவை, மகிழ்ச்சி என எல்லாவற்றையும் உள்ளடக்கி நீ உலகம் சுற்றுகின்றாய். பாப்பா முரசில் வரும் தகவல்கள் குழந்தைகள் மாத்திரமல்ல பெரியவர்களும் அறிவை வளர்த்துக் கொள்ள தேவையாக இருக்கின்றது. அரசியல் ரீதியான கட்டுரைகள் மக்களை நல்வழி கிாட்டி, வழிப்படுத்தி வருகின்றது. அதை நான் வரவேற்கின்றேன்.

எஸ்.சாய்சரண்; அக்கரைப்பற்று.

## கூடாரங்களுக்குள் வெள்ளம்

# வன்னியில் மக்கள் அவலம்

**வன்னியில் தொடர்ந்து பெய்துவரும் பருவ மழையினால் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் பாதிப்படைந்துள்ளனர். கூடாரங்களில் தண்ணீர் நிரம்பி வழிவதால் மக்கள் இடம்பெயர்ந்துவருகின்றனர்.**



வன்னியில் மீள்குடியேற்றம் நடந்த பெரும்பாலான இடங்களில் வீட்டுத்திட்டங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. மக்கள் தொடர்ந்தும் தற்காலிக கூடாரங்களிலேயே வசித்து வருகின்றனர். இந்த தற்காலிக கூடாரங்கள் தறப்பாளினாலும் தகரங்களினாலும் அமைக்கப்பட்டவை.

ஒரு சில மாதங்கள் வசிப்பதற்காக அமைக்கப்பட்ட இந்த கூடாரங்களில் மூன்றாவது ஆண்டு மழைக் காலத்திலும் வன்னி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பும் சுகாதாரமும் இல்லாத இந்தக் கூடாரங்கள் கொடிய நோய்த்தொற்றுக்களை ஏற்படுத்தக் கூடியவையாகவுள்ளன. கடந்த மூன்று வருடங்களாக வீட்டுத் திட்டத்தை வழங்கவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

## மாற்று எரிசக்தி உற்பத்திக்காக விவசாயக் காணிகளை அழிக்கக் கூடாது

### துபாய் எரிசக்தி மாநாட்டில் ஜனாதிபதி



மாற்று எரிசக்தி உற்பத்திக்காக விவசாயக் காணிகள் அழிக்கக் கூடாது என துபாயில் நடைபெறும் உலக எரிசக்தி மாநாட்டில் சகல நாடுகளும் விழிப்பாக செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சர்வதேசத் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள ஜனாதிபதி, எரிசக்தி வளங்களை இணைந்து சமமாகப் பகிர்ந்து கொள்வதே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் எதிர்பார்ப்பாகும் எனவும் இந்த எதிர்பார்ப்பு மற்றும் உரிமை தொடர்பில் சகலரும் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பேசுகையில், பல வருடகாலமாக ஜனநாயக ஆட்சிக்குப் பழக்கப்படாத இலங்கை மக்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையே எதிர்பார்த்துள்ளனர். இதற்கான செயற்திட்டங்களில் எரிசக்திக்கு முக்கிய பங்களிப்பு உள்ளது. மக்களின் எதிர்கால சுபிட்சத்தைக் கருத்திற்கொண்டு செயற்படும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் இதற்கான சவால்கள் விசாலமானது.

நடைமுறையிலுள்ள பொருளாதாரத்திற்கு பாதுகாப்பானதும் இலாபகரமானதுமான எரிசக்தி வளம் முக்கியமானது. அத்தகைய வளத்தைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொள்ள நேரும் சவால்களுக்கு சகல மக்களும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் எரிசக்தி தொடர்பில் அதிகரித்து வரும் கேள்விகள் மற்றும் தேவைகள் சமப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் எதிர்கால பரம்பரைக்காக நிலையான எரிசக்தி பாதுகாப்பு மிகவும் அவசியமானது என்றும் தெரிவித்துள்ளார்.

## நடுவீதியில் சிகிச்சை

அரசாங்க வைத்தியசாலை கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் நடு வீதியில் வைத்து காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளித்த சம்பவமொன்று ஹட்டன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வட்டவளையில் அண்மையில் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது. அச்சந்தர்ப்பத்தில் அவ்வழியே தனிப்பட்ட தேவையின் நிமிர்த்தம் பயணித்த வைத்தியர் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்து தனது மனிதாபிமானத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஹட்டன் கிளங்கன் வைத்திய சாலையில் பணியாற்றும் வைத்தியரே இவ்வாறு மனிதாபிமான பணியில் ஈடுபட்டுள்ளார்.

## நுவரெலியாவில் அரச நியமனம்

நுவரெலியா மாவட்டத்தில் பட்டதாரிகள் 78 பேருக்கான அரசதுறை நியமனங்கள் அரச முகாமைத்துவ அமைச்சர் நவீன் திசாநாயக்கவினால் வழங்கிவைக்கப்பட்டன. மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்திற்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பெரும்பான்மையினர் 26 பேருக்கும் சிறுபான்மையினர் 52 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர், "இன்று உங்களுக்கான வழி காட்டப்பட்டுள்ளது. அதில் உயர்ந்த இடத்திற்கு செல்ல வேண்டியது உங்களுடைய பொறுப்பாகும். கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான நியமனம் வழங்கினால் தமிழர்கள் மிக குறைவாகவே இருந்தனர். ஆனால் இன்று அதிகமானவர்கள் தமிழர்கள். அதற்கு காரணம் உங்களுடைய பெற்றோர் உங்களுக்கு சிறந்த கல்வியை வழங்கியுள்ளனர். எனவே நீங்கள் அனைவரும் எதிர்காலத்தில் இன்னும் நன்றாக கல்வியில் முன்னேறி உயர் பதவிகளுக்கு வர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்" என்றார்.

**சங்கர சிவன்**

# இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வில் கூட்டமைப்புக்கு அக்கறையில்லை

> அறுபது வருடங்களுக்கு மேலாக இவர்களுக்கும் இவர்களின் முன்னோடித் தலைவர்களுமே நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கின்றார்கள். இனப்பிரச்சனையின் தீர்வைப் பொறுத்தவரையில் சிறிதளவாவது முன்னேற்றத்தை இவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. இவர்களால் முடியவில்லையா அல்லது இவர்களுக்கு விருப்பமில்லையா? கிடைத்த சந்தர்ப்பங்களை நிராகரித்ததற்கு வேறு விளக்கம் அளிக்க முடியாது. தமிழரசுக் கட்சியாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும் செயற்பட்ட காலத்தில் அன்றைய தலைவர்கள் சமஷ்டி என்றும் தனிநாடு என்றும் தங்கள் கொள்கைகளைப் பகிரங்கமாக அறிவித்துக்கொண்டே தீர்வுக்கான சந்தர்ப்பங்களை நிராகரீத்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தீர்வுககான கொள்கை இல்லை. தீர்வைத் தவிர்ப்பதற்கான கொள்கையே இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தாங்களே தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் என்று எப்போதும் உரிமை கோருகின்றார்கள். எல்லா தேர்தல்களிலும் இவர்களையே தமிழ் மக்கள் பெரும்பான்மையாகத் தெரிவு செய்வதால் இவ்வாறு உரிமை கோருகின்றார்கள் போலும். அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பதிலும் பார்க்கக் கெட்டித்தனமான ஏமாற்றுக்காரர்கள் என்று உரிமைகோருவது மிகவும் பொருத்தமாக இருக்கும். ஒவ்வொரு தேர்தலின்போதும் தமிழ் மக்களின் இன உணர்வைத் தூண்டிவிடக் கூடிய இனவாத மற்றும் அரச எதிர்ப்புப் பிரசாரத்தின் மூலம் மக்களை உணர்ச்சிவசப்படுத்தி வாககு

களைப் பெறுவதில் இவர்கள் வல்லவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தமிழ் மக்களின் நலன்பேணும் பிரதிநிதிகள் என்று இவர்கள் உரிமை கோருவதுகேள்விக்குரியது.

தமிழ் மக்கள் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூலமாக இருப்பது இனப்பிரச்சினை. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று உரிமை கோரும் இத் தலைவர்கள் எந்தப் பிரச்சினைக்காவது இதுவரையில் தீர்வு கண்டிருக்கிறார்களா என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதில். இனப்பிரச்சினையைத்தான் விடுவோம். மீள்குடியேற்றம், நில ஆக்கிரமிப்பு என்றெல்லாம் பெரிதாகப் பேசுவதோடு ஆர்ப்பாட்டங்களும் செய்கின்றார்கள். ஆனால் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் இம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணஒரு போதும் எந்த முயற்சியும் எடுத்ததில்லை. எந்த அதிகாரியோடும் இம் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசியதில்லை. பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பதில்லை. ஊடாக 'பப்ளிசிற்றி' யோடு ஆர்ப்பாட்டங்கள் செய்வதுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று இவர்கள் நினைக்கின்றார்கள்.

அறுபது வருடங்களுக்கு மேலாக இவர்களுக்கும் இவர்களின் முன்னோடித் தலைவர்களுமே நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருக்கின்றார்கள். இனப்பிரச்சனையின் தீர்வைப் பொறுத்தவரையில் சிறிதளவாவது முன்னேற்றத்தை இவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. இவர்களால் முடியவில்லையா அல்லது இவர்களுக்கு விருப்பமில்லையா? கிடைத்த சந்தர்ப்பங்களை நிராகரித்ததற்கு வேறு விளக்கம் அளிக்க முடியாது. தமிழரசுக் கட்சியாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும் செயற்பட்ட காலத்தில் அன்றைய தலைவர்கள் சமஷ்டி என்றும் தனிநாடு என்றும் தங்கள் கொள்கைகளைப் பகிரங்கமாக அறிவித்துக் கொண்டே தீர்வுக்கான சந்தர்ப்பங்களை நிராகரித்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தீர்வுககான கொள்கை இல்லை. தீர்வைத் தவிர்ப்பதற்கான கொள்கையே இருக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்துபவர்கள் தான் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக இருக்கமுடியும். தாங்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூட்டமைப்பு உரிமை கோருவதை இந்த அடிப்படையிலேயே பார்க்க வேண்டும்.

புலிகள் தனிநாட்டு நிகழ்ச்சிநிரலை ஏற்றுக்கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் அரங்குக்கு வந்தது. கூட்டமைப்பு போட்டியிட்ட முதலாவது தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டதன் மூலம் தங்களுக்கெனச் சுயமாக ஒரு கொள்கையும் இல்லை என்பதையும் புலிகளின் கொள்கையே தங்கள் கொள்கை என்பதையும் வெளிப்படுத்தினார்கள்.

முள்ளிவாய்க்காலில் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து எந்தவொரு கொள்கையும் முன்வைக்க முடியவில்லை. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று கூறுபவர்களும் தனிநாடுதான் எங்கள் லட்சியம் என்று வெளிநாடுகளுக்குச் சென்று பேட்டி அளிப்பவர்களும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதால் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கையொன்றைத் தீர்மானித்து மக்களுக்குத் தெரியப்படுத்த இயலாத நிலையில் இவர்கள் இருக்கின்றார்கள். அதனால் வெவ்வேறு உடனடிப் பிரச்சினைகளை மையப்படுத்தி ஆர்ப்பாட்டங்கள் செய்வதோடு நின்று விடுகின்றார்கள். இனப்பிரச்சினையின் தீர்வுக்காக ஆர்ப்பாட்டம் செய்ய இவர்களால் முடியாது. அப்படியான ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதென்றால் தீர்வுக்கான கொள்கையை முன் வைக்க வேண்டும்.

மிகவும் வெட்கக்கேடான விடயம் என்னவென்றால் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கேட்பதுதான். இது பேரினவாத அரசாங்கம் என்றும் தமிழ் மக்களின் உரிமைகளை மறுதலிப்பதே இந்த அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்றும் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்கின்ற அதே வேளையில் அரசாங்கம் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது இவர்களுடைய வங்குரோத்தின் வெளிப்பாடே ஒழிய வேறொன்று மில்லை. தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து அதன் அடிப்படையில் அரசாங்கத்துடன் பேரம்பேசுவதுதான் உண்மையான தலைமை. ஆனால் கூட்டமைப்புத் தலைவர்களோ எந்தத் தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காமல் அரசாங்கம் தீர்வைத்தர வேண்டும் என்றும் வசதிக்கேற்றபடி மாறி மாறிச் சொல்லி மக்களை ஏமாற்றுகின்றார்கள்.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்)

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

### வாசகர்களுக்கு வணக்கம்!

# ஒற்றுமையைச் சிதைக்கும் வெற்று அரசியல்

வடக்கு மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு மாறாக அதைத் தடுப்பதற்குப் பல்வேறு சக்திகள் முயற்சிக்கின்றன.

பதின் மூன்றாவது திருத்தச் சட்டத்தை இல்லாதுசெய்துவிட வேண்டுமென இனவாத சக்திகள் குரல் கொடுத்துவருகின்றன.

வடக்கு மாகாணத்தில் தீர்மானிக்கும் சக்திகளாக தமிழர்கள்தான் இருக்கப்போகிறார்கள் என்பதை ஜீரணிக்கமுடியாதவர்கள், அப்படியொரு சூழ்நிலை தோற்றம் பெற்றுவிடக் கூடாது என்று விரும்புகின்றனர். மறுபக்கத்தில் இந்திய எதிர்ப்பு வாதம்.

13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது ஒழிப்பதன் ஊடாக மீண்டும் உயிர்விடத் துடிப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆயுத வன்முறை முடிவுக்கு வந்த பின்னர், மீண்டும், பேரின வாத சக்திகள் அல்லது குரல்கள் புத்துயிர் பெற்று வளர்த்து வருவதாக அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர். அது புலிகளை தோற்கடித்த மேலாண்மையிலிருந்து, சிறுபான்மை இனங்கள் மீதான அடக்குமுறை வடிவமாக, தோற்றம் பெற்றிருப்பதையும், அவதானிக்க முடிந்தது.

இதன் உயர்ச்சிப் போக்கானது இலங்கைத் தீவில், எல்லா இனங்களும், கௌரவமாக வாழ முடியுமென்ற நம்பிக்கையை சிதைத்துவிடுமோ என்ற அச்சத்தைத் தோற்றுவித்தது.

இந்தக் கவலைகளை எல்லாம் வலுவடையச் செய்யும் இன்னொரு செய்தியாகவே, 13 ஆவது திருத்தச் சட்டமும் முற்றாக அகற்றப்பட வேண்டுமென்பதும் அது, தேசிய பாதுகாப்புக்குக் குந்தகமானது எனக் கூறப்படுவதுமாகும்.

எனவே, இவ்விவகாரத்தை தனி நபர் கருத்துக்களுக்கு விட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பதில் அர்த்தமில்லை. அரசு இன ஐக்கியம், தேசிய ஒற்றுமை, அரசியல் ஸ்திரத்தன்மை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு, 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான சர்ச்சைக்கு தீர்வைக் காணவேண்டும்.

இல்லாவிட்டால் இவ்விவகாரம் மெல்ல வளர்ச்சியடைந்து யுத்தத்துக்குப் பின் உருவாகி வந்த, அமைதியையும், ஐக்கியத்தையும் சிதைத்துவிடும். அரசியல் சுபலாபங்களுக்காக இவ்விவகாரத்தைக் கையிலெடுத்திருப்போர், தேசிய நலனைக் கருத்திற் கொண்டு ஆரோக்கியமாகச் சிந்திக்க வேண்டும். 13அவது திருத்தச் சட்டத்தின் பிரசவமாய், இலங்கை மக்களுக்குக் கிடைத்த மாகாண் சபை முறையை வடக்கு, கிழக்கு மக்களும் அனுபவிக்க வாய்ப்பு வழங்கப்படுதல் அவசியமாகும்.

அதற்குத் தடை ஏற்படுத்தப்படுமாயின் அது உரிமை மறுப்பாகவும், அடக்குமுறை அதிகாரப் பிரயோகமுமாகவுமே அடையாளப்படும். அத்தகையதொரு சூழல் பயங்கரவாதத்திடமிருந்து மீட்கப்பட்ட இலங்கைக்கு அபகீர்த்தியைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# 13ஆவது சட்டதிருத்தமும் தமிழர்களுக்கான தீர்வும்

**"தமிழ் மக்கள் மத்தியில் உருவாகியிருந்த பிரிவினைவாதக் கோரிக்கைக்கு மாற்றீடாக முன்வைக்கப்பட்டு இன்று பல்வேறு தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாண சபை முறை இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில் அரசியல் தீர்வு பற்றிய எதிர்பார்ப்புடன் இருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள்."**

இலங்கையில் மூவினங்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட 13ஆது திருத்தச்சட்டத்தை உடனடியாக இல்லாது ஒழிக்க வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்து பல்வேறுபட்ட அதிர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

ஒற்றையாட்சி முறைமையின் கீழ் அதிகாரங்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் குவிந்திருப்பதால் வழங்கப்படுகின்ற வாய்ப்புக்களும் வரப் பிரசாதங்களும் பகிர்ந்தளிக்கப்படுவதில் பாகுபாடு காண்பிக்கப்படுவதாக கரு-திய வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் இளைஞர்கள் அதற்கெதிராகக் குரல் கொடுத்தனர்.

அந்தக் கோரிக்கையை உரிய முறையில் கவனத்தில் கொள்ளப்படாததினால் அவை பரிணாம வளர்ச்சியடைந்து பிரிவினைவாதம் கோரிய ஆயுதப் போராட்டம் வரை சென்றிருந்தது.

பிரிவினைவாத கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியாத அதேவேளை, ஆயுதப் போராட்டத்திற்கான அடிப்படைக் காரணங்களில் காணப்பட்ட நியாயங்களைக் கருத்திற் கொண்டு அதிகாரங்களைப் பரவலாக்கும் நோக்குடன் முன்வைக்கப்பட்டதே இந்த மாகாண சபை அமைப்பு முறைமையாகும்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஈடு செய்துகொள்ளும் வகையில் அமையவில்லை என்று இதனைப் புலிகள் கடுமையாக எதிர்த்தனர். - புலிகளின் காலத்தில் கூட்டமைப்பினரும் எள்ளிநகையாடினர்.

ஆனால், புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் 13ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு பற்றிப் பரிசீலிப்பதற்கு கூட்டமைப்பு உட்பட்ட அனைத்துச் சிறுபான்மைக் கட்சிகளும் தயாராகவே இருந்து வருகின்றனர்.

13 ஆவது திருத்தம் என்பது ஒரு பொன்னான வாய்ப்பு எனவும் அதனை சரிவரப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்துவதன் ஊடக கௌரமான தீர்வை எட்டமுடியும் என்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியுடன் நீண்ட பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே சட்டவரைபில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தத்திலிருந்து ஆரம்பிப்பது நடைமுறைச் சாத்தியமானது என்பது அவரின் வாதம்.

அதுமட்டுமன்றி, இந்தியா உட்பட்ட சர்வதேச நாடுகளும் 13அவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் தொடர்ந்தும் அக்கறை காட்டி வருவதாகவே தெரிகின்றது.

இது உணரப்பட்ட நிலையிலேயே அரசியல் தீர்வு தொடர்பாக தன்னிடம் கருத்தறிய முற்படு கின்ற சர்வதேச இராஜதந்திரிகளிடமும், சர்வதேச ஊடகங்களிடமும் 13பிளஸ் என்ற வார்த்தைப் பிரயோகத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடிக்கடி வலியுறுத்தி வந்ததாக அரசியல் ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

மறுபுறத்தில், 13 ஆவ்து திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் பொருட்டு காணி, பொலிஸ் உட்பட்ட முக்கியமான அதிகாரங்களை மாகாண-சபைகளிடம் ஒப்படைக்காமல் ஒரு இழுபறி நிலை காணப்படுகின்றது. இதற்குப் பல்வேறுபட்ட அரசியல் காரணங்களும் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே மாகாண சபைகளிடம் இருந்த நிதிகளைக் கையாளும் அதிகாரத்தையும் இல்லாமல் செய்யும் வகையில் 'திவிநெகும' சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாக காரசமான விமர்சனங்களும் வந்துகொண்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் மிஞ்சும் வகையில் இப்பொழுது 13 ஆவது திருத்த சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதுதொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கின்ற பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ மக்களுக்கு சேவை செய்வதற்குத் தடையாக இருக்கின்ற எந்தவொரு சட்டமூலத்தையும் இல்லாதொழிக்கத் தயாராக இருப்பதாகவும் தேவையேற்படின் சர்வசன வாக்கெடுப்பிற்குச் செல்லவும் தயங்கப்போவதில்லை என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கின்றார்.

எனினும் இதற்கு அரசாங்கத்துக்குள்ளேயே முழுமையான ஆதரவு இல்லையென்றே தெரிகின்றது. அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, போன்ற முற்போக்குவாதிகள் குறித்த சட்டம் இல்லாது அழிக்கப்படுவதானது மோசமான விளைவுகளுக்கு வித்திடும் என்று தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற சிறுபான்மைக் கட்சிகளுக்கு இதில் சம்மதம் இருக்காது என்பதே அரசியல் ஆர்வலர்களின் கருத்தாக இருக்கின்றது.

இதனைச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக் கின்றது.

பொதுவாகத் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகியிருந்த பிரிவினைவாதக் கோரிக்கைக்கு மாற்றீடாக முன்வைக்கப்பட்டு இன்று பல்வேறு தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாண சபை முறை இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில் அரசியல் தீர்வு பற்றிய எதிர்பார்ப்புடன் இருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள்.

கடந்த கால யுத்தங்களினால் இனங்களுக்கிடையே திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருந்த இடைவெளிகள் குறைவடைந்து சகஜமாக ஒவ்வொருவரும் வாழுகின்ற மகத்தான சூழல் உருவாகுவதற்கு ஒருபோதும் இவ்வாறான தீர்மானங்கள் உதவப்போவதில்லை.

இதுபற்றி கருத்துரைத்திருக்கின்ற இலங்கை - இந்திய உறவு குறித்து கவனம் செலுத்தி வரும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் சகாதேவன் "இறையாண்மை பெற்ற ஒரு நாடு என்ற வகையில் எந்த ஒரு சட்டத்தையும் நிறைவேற்றும் உரிமை இலங்கைக்கு உண்டு. எனவே, இச்சட்டத்தை ரத்துச் செய்வது என்பது சட்டப்படி சாத்தியமானதாகும். எனினும் அரசியல் ரீதியில் ஒரு தவறான நடவடிக்கையாகவே இருக்கும்." என்று கூறியிருக்கின்றார்.

இதுபோன்றே 13 ஆவது திருத்தச்சட்டம் ஏற்படுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்களையும் இத்திருத்தத்தின் மூலம் நாட்டில் ஏற்படுத்த முயன்ற மாற்றங்கள், எதிர்பார்ப்புக்கள் பற்றியும் நன்கறிந்திருந்த பலரும் ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

பல்லின மக்களும் வாழுகின்ற நாட்டில் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பதற்கும் தாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்ற உணர்ந்தவர்களுக்கும் ஒவ்வொரு நாடும் தத்தமது தேவைக்கேற்ற வகையில் அரசியல் அமைப்பின் ஊடாகப் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்தியிருக்கின்றன. அவ்வாறு இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மையின மக்களும் தங்களுடைய இருப்பையும் உரிமைகளையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஒற்றுமையாக வாழமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் எந்தவொரு தரப்பையும் பாதிக்காத வகையில் உருவாக்கப்பட்ட மாகாண-சபை அடிப்படையிலான இந்த அதிகாரப் பரவலாக்கல் முறையே சிறந்ததும் அவசியமானதும் என்பதே அனைவரினதும் விருப்பமாக இருக்கின்றது.

அதேவேளை, இந்த மாகாண சபை உருவாகுவதற்கு காரண-மாக இருந்த வடக்கு, கிழக்கு மக்கள் இன்னும் இதனை முழுமையாக அனுபவிக்கவில்லை:

தற்போது கிழக்கு மக்களுக்கு அந்த வாய்ப்பு ஓரளவிற்கு கிடைத்துள்ள நிலையில் விரைவில் வடக்கு மக்களுக்கும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கையில் குறித்த கருத்து வெளியாகியிக்கின்றது. இது பலருக்கும் ஏமாற்றம் அளிப்பதாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.





# புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

ரிஷி

14

ஜெனிவா ஐ.நா. அலுவலகத்தில் திலகருக்கு தொடர்புகள் இருந்ததை கடந்த வாரம் கூறியிருந்தோம். அந்த தொடர்புகளைப் பயன்படுத்தி, கிட்டு சுவிட்சலாந்து செல்வதற்கான ட்ரவல்டொக்குமென்ட் (இதனை வழங்கிய நாட்டுக்கு ஒருவழி பயணம் மட்டும் செய்யக்கூடிய, நாடற்றவர்களுக்கான, பாஸ்போர்ட் போன்ற சமாச்சாரம் இது.)

இப்படியான ட்ரவல் டொக்குமென்ட் ஒன்றை வைத்துக் கொண்டு சுவிட்சலாந்தில் சுதந்திரமாக, நடமாடுவது கொஞ்சம் சிரமமானது.

அவ்வப்போது பொலிஸ் சோதனைகளின்போது, இந்த ஆவணம் வைத்திருப்பவர்களை சற்று கூடுதலாகவே குடைவார்கள். அது மாத்திரமல்ல, அவருடன் கூட இருப்பவர்களையும் அதிக விசாரணைகளுக்கு உட்படுத்துவார்கள்.

### உளவுத்துறைகள் மோப்பம்

இந்த இடத்தில் சுவிஸ் காவல்துறை பற்றிய ஒரு விபரம் சொல்லவேண்டும். கிட்டு, புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவர் சுவிஸ் பெடரல் பொலிஸின் சிறப்பு பிரிவு ஒன்றின் கண்காணிப்பில் இருந்தார்.

சுவிஸ் பொலிஸில் உள்ள இந்த சிறப்புப் பிரிவு, தீவிரவாதம் மற்றும் வெளிநாட்டு பணப் பரிமாற்றங்களை கண்காணிக்கும் ரகசிய அமைப்பு. இப்படியொரு இரகசிய டிவிஷனே கிடையாது என்று கூறிக்கொண்டிருந்த சுவிட்சலாந்து அரசு, 2009ஆம் ஆண்டுதான், இந்தப் பிரிவு இயங்குவது உண்மைதான் என ஒப்புக் கொண்டது.

சுவிட்சலாந்தில் கிட்டுவோடு நெருக்கமாக இருந்தவர்கள் சிலர், இந்தப் சிறப்பு பிரிவின் கண்காணிப்புக்குள்ளும் வந்து, விசாரணை களிலும் சிக்கிக் கொண்டனர். அதையடுத்து, சுவிட்சலாந்திலும் கிட்டுவை விட்டு விலகத் தொடங் கினார்கள் சில சுவிஸ் புலி முக்கி யஸ்தர்கள்.

கிட்டு, புலிகளின் யாழ்ப்பாண தளபதியாக இருந்த போது, முழு யாழ்ப்பாணத்தின் சட்டம் ஒழுங்கு நடைமுறைகள் அவ்ரது கண்ணசைவிலேயே நடந்தன. அப்படி பழக்கப்பட்டுவிட்ட ஒருவரை, சுவிஸ் பொலிஸின் இந்த கண்காணிப்பும் விசாரணைகளும் அதிர வைத்தன. அவரது வாழ்வில் அதுவரை தன்னைச் சுற்றி பலரை வைத்து அதிகாரத்துடன் இருந்த அவருக்கு, தன்னிடம் நெருங் காமல் ஆட்கள் விலகி விலகிச் செல்வது திகைக்க வைத்தது.

கிட்டு சுவிட்சலாந்து செல்வதற்கு திலகர் ஏற்பாடு செய்தது போல, மெக்சிக்கோ செல்லும் ஏற்பாடுகளை அமெரிக்காவில் இருந்தபடி கவனித்

# பந்தாடப்பட்டார் கிட்டர்

தவர், பேராசிரியர் செல்வகுமார். கிட்டுவை மெக்சிக்கோவுக்கு புறப்பட்டு வருமாறு கூறியவரும் செல்வ குமார்தான். கிட்டுவுக்கு துணையாக மெக்சிக்கோ சென்றவர் நாதன். மெக்சிக் கோவில் சில நாட்கள் தங்கிவிட்டு நாதன் திரும்பிவிட, மெக் சிக்கோவில் தனித்துப் போனார் கிட்டு.

அமெரிக்காவில் பணிபுரிந்து கொண்டிருந்த செல்வகுமார், கிட்டு வுடன் மெக்சிக்கோவில் தங்கியிருப்பது சாத்தியமில்லை.

இப்படியாக ஈழத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிடைத்த அனுபவத்தால் வெறுத்துப் போயிருந்த கிட்டுவுக்கு, ஒரு கட்டத்தில் எந்தவொரு மேற்கு ஐரோப்பிய நாடும் விசா கொடுக்கத் தயாராக இல்லை என்பது நன்றாகவே புரிந்தது. அப்படியான நிலையில் அவர் உடனடியாக செல்லக்கூடிய ஒரே நாடு உக்ரேன்தான். கிட்டுவும் உக்ரேன் செல்வதையே விரும்பினார்.

அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

### உக்ரேனில் கிட்டு

கிட்டுவுக்கு வெளிநாடு செல்லும் முன்பே, அவர் புலிகளின் சார்பில் ஒருவரை உக்ரேனுக்கு அனுப்பி வைத்திருந்தார். ரஷ்யா உடைந்து, உக்ரேன் உருவாகிய போது, உக்ரேனில் தங்கிவிட்ட ரஷ்ய ஆயுதங்கள் வெளிச் சந்தைக்கு வரும் என்ற ஊகம் பரவலாக அடிபட்டுக் கொண்டிருந்தது. அப்படியான நிலையில், புலிகள் இயக்கத்தில் இருந்து ஒருவரை தேர்ந்தெடுத்து, அவரை உக்ரேன் சென்றுதங்கி, அங்குள்ள நிலைமைகளை ஆராயுமாறு அனுப்பி வைத்திருந்தார் கிட்டு. அப்படி கிட்டுவால் முன்பே உக்ரேனுக்கு அனுப் பப்பட்ட நபர், நரேன்.

கிட்டு தாமும் வெளிநாடு செல்வோம் என்றே நினைத்திராத காலத்தில் கிட்டுவால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட இந்த நரேன், அப்போதும் உக்ரேனில் தங்கியிருந்தார். இதனால்தான், உக்ரேன் செல்ல விரும்பினார் கிட்டு.

கிட்டு உக்ரேனுக்கு செல்லும் ஏற்பாடுகளை கே.பி. செய்து கொடுக்க, உக்ரேன் சென்று நரேனுடன் சேர்ந்து கொண்டார் கிட்டு. தலைநகர் கிவ்வில் தங்கிக் கொண்டார்.

ஈழத் தமிழர்கள் அதிகம் வசிக்காத நாடு உக்ரேன். எப்படியாவது அங் கிருந்தும் கிளம்பி, இலங்கைக்கு செல்வதே கிட்டுவுக்கு விருப்பமாக இருந்தது. ஆனால், இலங்கைக்கு சும்மா திரும்ப அவர் விரும்பவில்லை. திரும்பிச் செல்வதற்கு முன் புலிகள் இயக்கத்துக்காக எதையாவது சாதித்துவிட்டு, புகழுடன் நாடு திரும்ப விரும்பினார் அவர். கிட்டுவை நன்கு அறிந்தவர்களுக்கு அவரது இந்த மென் டாலிடி நன்றாக தெரிந்திருக்கும்.



கிட்டு உக்ரேனுக்கு சென்ற அந்தக் காலப் பகுதியில் உக்ரேன் கிட்டத்தட்ட ஒரு ஆயுத கறுப்பு சந்தை யாக இருந்தது. ரஷ்யா உடைந்தபின் உக்ரேனுக்கு கிடைத்த பல ஆயுதங்கள், திருட்டுத்தனமாக சுடச் சுட விற்பனையாகிக் கொண்டிருந்தன. அதனால், அனைத்து நாடுகளின் உளவுத் துறைகளும் உக்ரேனுக்குள் வட்டமடித்துக் கொண்டிருந்தன.

உக்ரேனுக்குள் இருந்துகொண்டு கிட்டு, இரண்டு காரியங்களில் ஈடுபட்டார். முதலாவது, உக்ரேனில் இருந்த சில ஆயுத வர்த்தகர்களிடம் தொடர்பை ஏற்படுத்தி, புலிகள் இயக்கத்துக்காக ஆயுதங்களை பெற்றுக் கொள்ளும் முயற்சி.

இரண்டாவது, உக்ரேனில் ராணுவம் தொடர்பான பயிற்சிநெறி ஒன்றை செய்ய முயன்றார். உக்ரேனில் Sevastopol என்ற இடத்தில், இராணுவக் கல்வி கற்பிக்கும் மையம் ஒன்று இருந்தது. அதன் பெயர் Nakhimov. உக்ரேன் இராணுவ அதிகாரிகள் தமது வாரிசுகளை இராணுவ கல்வி கற்க சேர்த்துவிடும் இடம் இது. அதில் இணைந்து கொள்வதற்கான முயற்சிகளை செய்து கொண்டிருந்தார் கிட்டு.

உக்ரேனில் ஆயுதத் தரகர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் கிட்டுவின் முயற்சிகள் ஓரளவுக்கு கைகூடும் நிலையை அடையத் தொடங்கின. உக்ரேனுக்குள் கிவ் புறநகரப் பகுதியில் இருந்து ரகசியமாக இயங்கிய ஆயுத வியாபாரி ஒருவரையே கிட்டு தேர்ந்தெடுத்து அவருடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றார். இந்த நபரின் பெயர், லியோனிட் மினின். இவர் மர வர்த்தகம் செய்வதாக வெளியே காட்டிக்கொண்டு, இரகசியமாக ஆயுத வியாபாரம் செய்த நபர். 1990களின் துவக்கத்தில் சுவிட்சலாந்து சுக் நகரில் தனது மர வர்த்தக நிறுவனத்தை பதிவு செய்துகொண்டு, மர ஏற்றுமதி செய்யும் போர்வையில், உக்ரேனில் இருந்து ஆயுதங்களை அனுப்பிக் கொண்டிருந்தவர். 1992இல் இவர் ஆயுத வர்த்தகம் செய்வதை தெரிந்து கொண்டு, உளவு அமைப்புகள் இவரை கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வந்திருந்தன.

அதாவது கிட்டு, உக்ரேன் போய் இறங்கிய அதே 1992ஆம் ஆண்டு, இந்த லியோனிட் மினினை உளவு அமைப்புகள் கண்காணிக்கத் தொடங்கின. இப்படியான நிலையில் உக்ரேனில் கிட்டு, ஒரு பக்கமாக இந்த நபருடன் ஆயுத வர்த்தக தொடர்பை ஏற்படுத்த முயன்றபடி, மறு பக்கமாக ராணுவ கல்லூரியில் அனுமதி எடுக்கும் முயற்சிகளிலும் ஈடுபட, உளவுத்துறைகளின் பார்வை இவர்மீதும் விழுந்தது. உக்ரேன் ராணுவ உளவுத்துறை டி.ஐ.யு. கிட்டுவை வட்டமிடத் தொடங்கியது.

இந்த நிலையில் கிட்டுவை உக்ரேனுக்குள் விட்டுவைப்பது ஆபத்து என்று உணர்ந்து கொண்ட கே.பி., நிலைமை இறுகுவதற்குமுன் கிட்டுவை உக்ரேனில் இருந்து போலந்துக்கு நகர்த்துமாறு நரேனுக்கு தகவல் அனுப்பினார்.

நரேன், கிட்டுவை போலந்துக்கு கொண்டுவரும்போது, அங்கே கிட்டுவை வரவேற்று, தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு, அவருடன் தங்கியிருப்பதற்கு லண்டனில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டவர், சேகர். சிறிது நாட்களே கிட்டுவுடன் போலந்தில் தங்கியிருந்த சேகர், அடிக்கடி கிட்டுவை தனியே விட்டுவிட்டு லண்டன் சென்று விடுவார். அவருக்கும் ஆயிரம் சோலி.

(தொடரும்...)

# மதுரைக்கு வந்தது சோதனை

தமிழக அரசு ஒருவழியாக மதுரை மூத்த, இளைய ஆதீனங்கள் மீது பார்வையை திருப்பியுள்ளது. சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழக அரசு, "நித்தியானந்தா இளைய மடாதிபதியாக செயல்பட தகுதியற்றவர்" என்று தெரிவித்தது ஒருபுறம் இருக்க, மதுரை நீதிமன்றத்தில், "மதுரை ஆதீன மடத்தையே அரசிடம் ஒப்படைக்க வேண்டும்" என்று மனுத்தாக்கல் செய்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்து அறநிலையத் துறை சார்பில் மதுரை நீதிமன்றத்தில், "மதுரை ஆதீன மடத்தின் சொத்துக்களை அரசு விதிகளை . மீறி குறைந்த விலைக்கு விற்பனை செய்துள்ளது உள்ளிட்ட, பல்வேறு வழிகளில் முறைகேடு நடந்துள்ளதால், மடத்தை அரசிடம் ஒப்படைக்க வேண்டும்" என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மதுரை ஆதீனத்தின் மடாபதிபதி அருணகிரிநாதரும், அவரால் இளைய ஆதீன்மாக நியமிக்கப்பட்டதாக கூறப்படும் நித்தியானந்தாவும் சேர்ந்து 23.4.2012ல் மதுரை ஆதீன சொத்துக்களை நிர்வகிக்க ஒரு அறக்கட்டளையை உருவாக்கினர்.

ஆதீன சொத்துக்களை விற்பனைசெய்வது, குத்தகைக்கு விடுவதற்கு முன்பு இந்து அறநிலையத் துறையிடம் முறையாக அனுமதி பெறவேண்டும். அப்படி அனுமதி பெறாமல் எந்த சொத்தையும் விற்கக்கூடாது. ஆனால், அதைப் பற்றியெல்லாம் இந்த இரு சாமியார்களும் கவலைப்படவே இல்லை.

நித்தி சுவாமிகள் காட்சிக்குள்வரும் முன்னரே திருவிளையாடல்கள் ஆரம்பமாகிவிட்டன. அதாவது, ஆல்-இன்-ஆல் ஆதீனமாக அருணகிரிநாதர் இருக்கும் போதே பல ஆண்டுகளாக இந்து அறநிலையத் துறையிடம் அனுமதி பெறாமலேயே ஏராளமான சொத்துக்களை விற்பனை செய்துள்ளார். 1995ஆம் ஆண்டில் 7.3 ஏக்கர் நிலத்தை குறைந்த விலைக்கு விற்றுள்ளார். 1999ஆம் ஆண்டில் ஆதீனத்திற்கு சொந்தமான மேலும் ஒரு சொத்தை விற்றுள்ளார்.

அவர் இளைய மடாதிபதியாக நித்தியானந்தாவை நியமித்ததும், சட்டத்திற்குப் புறம்பான செயல். இவர்கள் இருவரும் அடித்த திருக்கூத்துகளால், ஆதீன மடம் சார்பில் மீனாட்சி கோயிலில் நடக்கும் பூஜைகள்கூட நடக்கவில்லை. அந்தளவுக்கு இருவரும் வெளி வேலைகளில் பிசி.

இந்து சமய அறநிலையத் துறை தாக்கல் செய்துள்ள மனுவில், "அரசு விதிகளுக்கு முரணாக செயல்பட்டதன் மூலம் மடாதிபதியாக இருக்க அருணகிரிநாதர் தகுதி அற்றவர்.



சுயவிளம்பரத்திற்காகவும் ஆதீன மடத்தின் வருவாயை அருணகிரிநாதர் பயன்படுத்தியது தெரிய வந்துள்ளது. ஆதீன மடத்தின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட அறக் கட்டளையின் பதிவை செல்லாது என அறிவிக்க வேண்டும். ஆதீன மடத்தை அரசிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மதுரை ஆதீனத்தில் இருந்த நித்தி சுவாமிக்கு கல்தா கொடுக்கப்பட்டதுடன், மதுரை மடத்தில் குந்திக் கொண்டிருந்த நித்தி சீடர்களும், ஒவ்வொருவராக இடத்தை காலி செய்கின்றனர். தற்போது வெறும் இரண்டே இரண்டு நித்தி சீடர்கள் மட்டுமே மதுரை மடத்தில் தங்கியிருப்பதாக தெரிகிறது.

(06ஆம் பக்கம் பார்க்க...)

# நிலமெல்லாம் இரத்தம் 24

**பா.ராகவன்**

முஹம்மதுவுக்கு முன்பு இறைத் தூதர்களாக இவ்வுலகில் அறியப்பட்டவர்கள் மொத்தம் இருப்பத்தைந்து பேர். அவர்களுள், முதல் மனிதர் ஆதாம் தொடங்கி, இயேசு வரையிலான பதினேழு பேரைப் பற்றிய விரிவான அறிமுகங்கள் இன்று நமக்குக் கிடைக்கின்றன. இறைவனுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பேசியவர்கள், இறைவனாலேயே நல்வழி காட்டப்பட்டவர்கள் ஒருவகை. இறைவனிடமிருந்து மக்களுக்குத் வேதத்தைப் பெற்று அளித்தவர்கள் இன்னொரு வகை.

முஹம்மதுவுக்கு முன்னர் இப்படி வேதம் அருளப்பட்ட சம்பவம் மட்டும் மூன்று முறை நடந்திருக்கிறது., முதலாவது, மோஸ‌ஸ்க்கு அருளப்பட்ட 'தோரா'. அடுத்தது, தாவீத் என்கிற டேவிட்டுக்கு அருளப்பட்ட 'சங்கீதம்'. மூன்றாவதாக, இயேசுவுக்கு அருளப்பட்ட 'இன்ஜீல்' எனப்படும் Gospal.

இயேசுவுக்குச் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்குப் பிறகு 'இறைத்தூதர்' (நபி) என்று அடையாளம் காட்டப்பட்டவர், முஹம்மது.

முஹம்மதுவுக்கும் மற்ற இறை தூதர்களுக்குமான வித்தியாசங்கள் பல. வேதம் அருளப்பட்ட விதத்தால் மட்டுமல்ல தாம் ஓர் இறைதூதர் என்பதை உணர்ந்தவகையிலேயே முஹம்மது மிகவும் வித்தியாசமானவர். மற்ற தூதர்கள் அனைவரும் எதிர்பாராத ஒரு கணத்தில் ஆசீர் வதிக்கப்பட்டதன் பேரில் தம்மைத் தாமே இனம் கண்டுகொண்டு விட்டார்கள். முஹம்மது மட்டும், வருடக்கணக்கில் போராடி, உள்ளும் புறமும் ஏராளமான வேதனைகளை அனுபவித்து, ஆன்மிகச் சாதனை முயற்சிகளின் விளைவாக எத்தனையோ உடல் மற்றும் மன உபாதைகளை அனுபவித்து, போராடிப் போராடி, இறுதியில் தான் – தாம் 'அனுப்பப்பட்டிருப்பதன்' காரணத்தைக் கண்டறிந்தார்.

இந்த ஆன்மிகக் காரணங்கள் மட்டுமல்ல, மற்ற இறைத்தூதர்கள் அனைவரும் ஆன்மிகவாதிகளாக மட்டுமே அடையாளம் காணப்பட்ட நிலையில், முஹம்மது ஒருவர்தாம் மக்கள் தலைவராகவும், மத்திய ஆசியாவின் தன்னிகரற்ற அரசியல் வடிவமைப்பாளராகவும் இருந்திருக்கிறார். அராபியர்களின் வாழ்வில் சுபீட்சம் என்பது முதல் முதலாக எட்டிப் பார்க்கத் தொடங்கியதே முஹம்மதுவும் அவரது தோழர்களும் வரிசையாக ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து ஆளத் தொடங்கிய பிறகுதான்.

அராபியர்களின் சரித்திரத்தில் முஹம்மது ஓர் அத்தியாயம் அல்ல. மாறாக அவர்களது சரித்திரத்தின் மையப்புள்ளியே அவர்தான். முஹம்மதுவை மையமாக வைத்துத் தான் – அவருக்கு முன், பின் என்று நம்மால் அரபுகளின் சரித்திரத்தை ஆய்வு செய்யமுடியும்.

இருபத்தைந்து வயதில் முஹம்மதுவுக்குத் திருமணமானது. அவரைக் காட்டிலும் வயதில் மிகுந்த அவரைக் காட்டிலும் பொருளாதார அந்தஸ்தில் உயர்ந்த, கதீஜா என்ற விதவைப் பெண்மணி அவ்ரை விரும்பி மணந்துகொண்டார். முஹம் மதுவின் நேர்மையும் கண்ணியமும் அவரைக் கவர்ந்து, அப்படியொரு முடிவுக்கு வரத்தூண்டியது.

திருமணத்துக்குப் பின், ஒரு கணவராகத் தம் கடமைகள் எதிலிருந்து விலகாமல், அதேசமயம், ஆன்மிக சாதனைகளில் நாட்டம் மிகுந்தவராக அடிக்கடி தனிமை நாடிப் போகக்கூடியவராகவும் இருந்திருக்கிறார் முஹம்மது. மெக்கா நகரிலிருந்து சிறிது தொலைவில் இருந்த ஹீரா என்கிற குன்றுப் பகுதிக்குத்தான் அவர் தியானத்தின் பொருட்டு அடிக்கடி செல்வது வழக்கம். ஒருநாள், இருநாளல்ல, வாரக்கணக்கில், மாதக்கணக்கில்கூட அவர் அங்கே தன்னிலை மறந்து தியானத்தில் இருப்பது வழக்கம்.

கிளம்பும்போது கொஞ்சம் உணவுப் பொருள்களை மட்டும் எடுத்துச் செல்வார். குடிக்கக் கொஞ்சம் தண்ணீர், அவருக்கு உடைமை என்று வேறு ஏதும் கிடையாது. தியானத்தில் உட்கார்ந்தால், எப்போது எழுவார், எப்போது எடுத்துச் சென்ற உணவைச் சாப்பிடுவார் என்பதற்கெல்லாம் கூட உத்தரவாதமில்லை. சில–சமயம் சாப்பிடுவார். சாப்பிடாமலே வாரக்கணக்கில் கண்மூடிக் கிடந்ததும் உண்டு. பல சமயங்களில் வெளியே போன கணவர் நாட்கணக்கில் திரும்பி வராததைக் கண்டு கதீஜா, ஆட்களை அனுப்பித் தேடி அழைத்து வரச்சொன்னதும் உண்டு.

ஆனால் முஹம்மதுவின் ஆன்மிகச்சாதகங்களுக்கு கதீஜாவின் பூரண ஒத்துழைப்பு இருந்திருக்கிறது. செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, வசதியான வாழ்க்கை படைத்தவராக இருந்தபோதிலும், தம் கணவரின் ஆன்மிக நாட்டத்தைப் புரிந்துகொள்ளக்கூடியவராக அவர் இருந்திருக்கிறார். அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது என்கிற எண்ணம் அவருக்கு இருந்திருக்கிறது. முஹம்மதுவின் வாழ்க்கையில் இது மிக முக்கியமானதொரு கட்டம்.

எப்போதும் ஹீரா மலைப் பகுதி குகைகளின் இருளுக்குள் கரைந்து தியானத்தில் லயித்திருக்கும் முஹம்மதுவுக்கு, எப்போதாவது ஒரு பிரம்மாண்டமான ஆகிருதி படைத்த ஒளியுருவம் கண்ணெதிரே தோன்றும். யாரென்று அடையாளம் தெரியாது. பார்த்த கணத்தில் உடல் தூக்கிப் போட்டு, பதற்றம் மிகுந்து, பேச்சற்று சமைந்துவிடுவார். அந்த உருவம் யார் என்று அவரால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்ததில்லை. அது தன்னை ஏன் நெருங்கி வருகிறது என்றும் புரிந்ததில்லை. முதலில் கொஞ்சம் பயந்தார். இன்னார் என்று இனம்காண முடியாததால் ஏற்பட்ட பயம்.

பல நாட்கள் இந்தப் போராட்டம் அவருக்குத் தொடர்ந்தது. உடலும் மனமும் மிகவும் களைப்புற்று, பதற்றம் மேலேங்கியவராக இருந்தவரை, அவரது மனைவியான கதீஜாதான் அவ்வப்போது தேற்றி, தியானத்தில் உற்சாகம் கொள்ளச்செய்து வந்திருக்கிறார்.

மிக நீண்ட போராட்டத்துக்குப் பிறகுதான், தன்னை நோக்கிவந்த அந்த ஒளியுருவத்தை முஹம்மதால் இனம் கண்டுகொள்ள முடிந் திருக்கிறது.

அந்த மாபெரும் உருவம், ஒரு வானவருடையது. வானவர் என்றால் தேவர் என்று கொள்ளலாம். இறைவனின் தலைமைத் தளபதி என்று வைத்துக்கொள்ளலாமா? தவறில்லை. அவரது பெயர் ஜிப்ரீல்.

முந்தைய 'இறைத் தூதர்கள்' அனைவருக்குமேகூட இந்த ஜிப்ரீலின் மூலம்தான் தன்செய்தியை இறைவன் சொல்லி அனுப்பினார் என்பது இஸ்லாமியரின் நம்பிக்கை.

தன்னை வருத்தி, தியானத்தில் தோய்ந்து, ஆன்மீக சாதனைகளின் உச்சத்தை முஹம்மது தொட்டு விட்டிருந்த நேரம் அது. அவ்ரை தூர இருந்து அவருக்கு அச்சமூட்டிக் கொண்டிருந்த ஜிப்ரீல், அப்போது நெருங்கிவந்து ஆரத் தழுவினார்.

'ஓதுவீராக!' என்று முதல் முதலாக ஓர் இறை கட்டளையை வெளிப்படுத்தினார்.

ஆனால் முஹம்மதுவுக்கு என்ன பதில் சொல்வது என்று விளங்கவில்லை. அவர் எழுதப்படிக்கத் தெரியாதவர். பள்ளிக்கூடங்களுக்குச் சென்றவரல்லர். நல்லவர், நேர்மை யாளர், ஏழைகளுக்காக மனமிரங்குப வர், ஒட்டுமொத்த மெக்கா நகரவாசி களின் நல்லபிப்பிராயத்துக்குப் பாத்திரமானவர் என்றாலும் படித்த வரல்லர். அரபியில் ஓர் அட்சரம்கூட அவருக்குத் தெரியாது. சுயமாக அல்ல, எதையும் படித்துக்கூட அவரால் ஓதமுடியாது!

ஆனால் ஜிப்ரீல் தொடர்ந்து வற்புறுத்தினார். 'ஓதுவீராக'.

நான் எப்படி ஓதுவேன் என்று திரும்பவும் கேட்டார் முஹம்மது. மூன்றாவது முறையாக 'ஓதுவீராக' என்று உத்தரவிட்ட ஜிப்ரீல், முஹம் மதுவை இறுக்கக் கட்டிப்பிடித்து, விடுவித்துப் பிறகு சொன்னார்;

"உம்மைப் படைத்த இறைவனின் திருநாமத்தால் ஓதுவீராக. அவனே மனிதனை இரத்தக்கட்டியிலிருந்து படைத்தான். ஓதுவீராக இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுதுகோலைக் கொண்டுவந்து கற்றுக் கொடுத்தான். மனிதன் அறியாதவற்றைக் கற்றுத்தருபவனும் அவனே".

ஜிப்ரீல் சொல்லச் சொல்ல, தன் வசமிழந்த முஹம்மது இவ் வசனங்களைக் கேட்டு கூடவே சொல்லிக் கொண்டு வந்தார். பின்னாளில் இச்சம்பவத்தை நினைவு கூர்ந்தவர், 'அந்தச் சொற்கள் உச்சரிக்கப்பட்டதாக அல்ல; என் இதயத்தின்மீது எழுதப்பட்டதாக உணர்ந்தேன்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

விடைபெறும் தருணத்தில்தான் ஜிப்ரீல் தன் வருகையின் நோக்கத்தை அவருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். "ஓ, முஹம்மது! நீ அல்லாஹ்வின் தூதராவீர். நானே ஜிப்ரீல்."

இப்படியொரு சம்பவம் நடந்தது என்று சொன்னால் யார் நம்புவார்கள்? அதுவும் "காட்டரபிகளின்" சமூகத்தில்?

ஆனால், முஹம்மதுவின் அனுபவத்தை அவரது மனைவி கதீஜா முழுமையாக நம்பினார். நம்பமுடியாத அளவுக்கு வியப்பூட்டும் பெண்மணியாகத் திகழ்ந்தவர் அவர். தமது கணவர் ஓர் இறைதூதர் என்பதை நம்புவதில் அவருக்குச் சிறு தயக்கம்கூட இருக்கவில்லை. அவரது அந்த ஆழமான நம்பிக்கை, இன்னும் ஆழமாக வேரூன்றும் விதத்தில் ஒரு சம்பவம் நடந்தது.

கதீஜாவின் ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் இருந்தார். மிகவும் வயதான அவரது பெயர் வரகாஹ் என்பது. ஹீரா குகையில் தியானத்தில் இருந்த தம் கணவருக்கு ஜிப்ரீல் தரிசனமாகி, அவரை ஓர் இறைதூதர் என்று அறிவித்துப் போனதை வரகாஹ்விடம் கதீஜா சொன்னபோது, "சந்தேகமே வேண்டாம். முஹம்மது ஒரு நபிதான். அவருடன் வந்துபேசியது ஜிப்ரீல் என்கிற வானவர்தாம்" என்று கூடுதல் நம்பிக்கை அளித்தார் அவர். கண்தெரியாத, பல வேதங்களில் பாண்டித்தியம் பெற்ற ஒரு கிருத்தவர் அவர்.

ஜிப்ரீல் என்கிற வானவரின் வழியாக முஹம்மதுவுக்கு இறைவன் அளித்த குர்ஆன் ஒரே நாளில், ஒரே பொழுதில் மொத்தமாக அளிக்கப்பட்ட வேதமல்ல.

**(தொடரும்...)**

# பேபால் என்றால் என்ன?

சென்றவாரத் தொடர்ச்சி....

நீங்கள் இணையம் மூலம் பொருட்களை வாங்கும்போது விற் பனையாளர்களுக்கு (Dealer) நீங்கள் உங்கள் வங்கிக் கணக்கைப் பற்றி விபரங்களைக் கொடுக்க வேண்டிய தில்லை.



credit card number, Bank account number, போன்ற அதி முக்கியத் தகவல்களை விற்பனையாளருக்கோ, அத்தளத் திற்கோ கொடுக்க வேண்டிய அவசியமேற்படாது. இதனால் உங்கள் தகவல்கள் பாதுகாக்கப்படுகிறது. உங்களுடைய personal data பாதுகாக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல் money transaction மிகப் பாதுகாப்பாக நடைபெறுகிறது. எனவே எதற்கும் நாம் பயப்படவேண்டிய அவசியம் இல்லாமல் பேஉ ாகிறது.

இனி என்ன? நீங்களும் உங்களுக்கான பேபால் எக்க வுண்டை கிரியேட் செய்துகொள்ள வேண்டியதுதானே?

பேபால் எக்கவுண்ட் கிரியேட் (தொடங்க) செய்ய: www.paypal.com செல்லவும்.

(முற்றும்)

# செயற்கை பெற்றோல்

இங்கிலாந்தில், ஏ.எப்.எஸ் என்னும் நிறுவனத்தில் பணி-புரியும் பொறியாளர்கள் காற்று மற்றும் நீரிலிருந்து பெற்றோல் தயாரித்து சாதனை படைத்துள்ளனர்: கடந்த மூன்று மாதங்களில் காற்று மற்றும் நீரிலிருந்து, அவர்கள் சுமார் ஐந்து லீற்றர் அளவுக்கு பெற்றோல் தயாரித்துள்ளனர்.

காற்றிலிருந்து காபனையும், நீரிலிருந்து ஹைட்ரஜனையும் பிரித்தெடுத்த அவர்கள், காபன், ஹைட்ரஜனை உலையில் இட்டு, மெத்தனோல் தயாரித்துள்ளனர். பின்னர் மெத்தனோல் இருந்து பெற்றோல் தயாரித்துள்ளனர்.

இது செயற்கை முறை என்பதால் இவ்வகையில் தயாரிக்கப்படும் பெற்றோல் தூய்மையாக இருக்கும் எனவும், இதனால் காற்று மாசுபடுவதை தடுக்கமுடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இவ்வகை பெற்றோலின் விலை சாதாரண விலையை விட அதிகமாக இருக்கும் எனவும் பொறியியலாளர்கள் கூறினர். அடுத்த இரண்டு வருடங்களில் இதற்காக ஆலை ஒன்றை நிறுவப் போவதாகவும், அதன்மூலம் ஒரு நாளைக்கு 1200 லீற்றர் அளவுக்கு பெற்றோல் தயாரிக்கப் போவதாகவும் அவர்கள் கூறினர்.

எனினும் இவ்வகையில் தயாரிக்கப்படும் பெற்றோலின் விலை உயர்வாக இருக்கும் என்பதால், பெற்றோல் தட்டுப்பாடாக இருக்கும் காலங்களில் இத்தகைய முறையை பயன்படுத்த இயலுமே தவிர, பெற்றோல் விலையைக் குறைக்க இது எவ்வகை யிலும் உதவாது.

(05ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# மதுரைக்கு வந்தது...

நித்தி சுவாமிகள், மதுரை மடத்தில் இருந்து திருவண்ணாமலை சென்றபோது, தனது உதவியாளர் ஞானசொரூபானந்தாவை மதுரையில் விட்டுவிட்டுதான் சென்றார். இந்த ஞா.சொ.தான், நித்திக்காக அருணகிரி நாதரை உளவு பார்த்துக் கொண்டிருந்த சாமி.

அருணகிரிநாதர் நித்தியை டிஸ்மிஸ் செய்த அறிவிப்பை வெளியிட்ட போது, ஞானசொரூபானந்தா கிறுகிறுத்துப் போனார். காரணம், அருணகிரி நாதரை இரவுபகலாக கவனித்துக்கொண்டிருந்த இவருக்கே தெரியாமல் அப்படியொரு டிஸ்மிஸ் ஓர்டர் தயாராகியிருக்கிறது. உடனே அருணகிரி நாதரை நேருக்குநேர் பிடித்துக்கொண்ட ஞானசொரூபானந்தா, "நாட்டாமை.. தீர்ப்பை மாத்து" என்று 'செல்ல மிரட்டல்' விடுத்தார்.

அதற்கு பெரிய சாமி மசியவில்லை.

அதன்பின்னரே, திருவண்ணாமலைக்கு போன் போட்டு, நித்தியிடம் விடயத்தை சொன்னார் ஞானசொரூபானந்தா. பதறிப்போன நித்தி, உடனடியாக அருணகிரிநாதரை அவரது செல்போனில் அழைத்திருக்கி றார். பதில் இல்லை. ஞானசொரூபானந்தாவின் செல்போனில் அருணகிரி நாதருடன் பேசமுயன்றதும் பலிக்கவில்லை.

"சுவாமி லைனில் இருக்கிறார்" என்று அருணகிரிநாதரின் கைகளில் செல்போனை ஞானசொரூபானந்தா திணிக்க, அருணகிரிநாதரோ, தீண்டத்தகாத வஸ்துவைப்போல செல்போனை தூக்கிப்போட, அதை மீண்டும் எடுத்துக்கொடுக்க, இவர் விருட்டென்று எழ, மற்றொரு அசம்பா விதம் நடந்துவிட்டது.

நம்ம சிஷ்யர் ஞானசொரூபானந்தா, சாந்தசொரூபானந்தா அல்ல. அவருக்கு லேசாக கோபம் வருவது வழக்கம். அப்படியொரு கோபம் வந்ததில், அருணகிரிநாதரின் கையை அழுத்திப்பிடித்து, செல்போனை அதில் திணித்திருக்கிறார் ஞானசொரூபானந்தா.

அந்தப் பிடி, கை கண்டிப்போகும் அளவுக்கு கொஞ்சம் அழுத்தமான பிடி என்கிறார்கள். அப்படியிருந்தும், நித்தியுடன் பேசமறுத்துவிட்ட அருணகிரிநாதர், ஞானசொரூபானந்தா உட்பட, நித்தியின் ஆட்கள் அனைவருக்கும் 'கெட்–அவுட்' சொல்லிவிட்டார்.

ஞானசொரூபானந்தா கொடுத்த 'கை–பிடி பிரசாதம்' ஏற்படுத்திய வலி காரணமாகதான், நித்தியானந்தா சீடர்களால் தனது உயிருக்கு ஆபத்து வரலாம் என்று பொலிஸில் அருணகிரிநாதர் புகார் கொடுத்தார்.

அருணகிரிநாதர் கரம் வலியேற்பட பிரசாதம் கொடுத்த ஞானசொரூபானந்தா, மடத்தில் இருந்து புறப்பட்டு, திருவண்ணாமலை சென்றுவிட்டார். அவருடன், பெரும்பாலான நித்தி சிஷ்யர்கள் சென்று விட்டனர். தற்போது இரண்டே இரண்டுபேர்தான் மீதமுள்ளனர்.

அவர்கள் மடத்தில் இருந்து கிளம்புமுன் அருணகிரியாருக்கு திருச்சாத்து சாத்தலாம் என்ற அச்சத்தில், மடத்துக்குக் காவலாக மதுரை பொலிஸ் நிற்கிறது.

# கிழக்குக் கரையில் நிகழும் விசித்திரங்கள்!

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

கிழக்குக் கரை நெடுகிலும் குறிப்பாக, மட்டக்களப்பின் காத்தான்குடி கடற்கரையில் ஆயிரக்கணக்கான கடல் வாழ் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதும் அல்லது கரையொதுங்கி இறப்பதும் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இடம்பெற்று வருகின்றது.

இந்த நிகழ்வு ஒருபுறத்தில் இயற்கை நிகழ்வுகள் தொடர்பான அச்சத்தையும் இன்னொரு புறத்தில் மீன் பிரியர்களுக்கு அதாவது மீனின் விலையேற்றத்தால் நொந்து போயிருந்த மக்களுக்கு சந்தோசத்தையும் கொடுத்திருக்கின்றது. காசு கொடுக்காமல் கடற்கரைக்கு வந்து துடிதுடிக்க மீனை அள்ளிக் கொண்டு போவதிலுள்ள மகிழ்ச்சியை முகங்களில் காணமுடிகிறது.

மீன்கள் இவ்வாறு கடல் அலைகளால் அள்ளுண்டு வந்து கரையில் வீசப்படும் வேளையில் அவை துடிதுடித்து மீண்டும் அடுத்த அலை வந்து அவற்றை கடலுக்குள் இழுத்துச் செல்வதற்கிடையில் மக்கள் பிடித்து தமது கோணிப்பைகளுக்குள் போட்டு நிரப்பிக் கொள்கின்றார்கள்.

சிறார்களும் பெரியவர்களும் இப்பொழுது கடற்கரையை நாடி வந்து சிறிய பெரிய மீன்களையும் மற்றும் நல்ல விலை கொடுத்து சந்தையில் வாங்க வேண்டிய மீன்களையும் இலவசமாகவே அள்ளி எடுத்துக் கொண்டு போகின்றார்கள்.

மீன்கள் மட்டுமல்ல பலபல கடல் வாழ் உயிரினங்களும் கரைக்கு அள்ளுண்டு வந்து இறந்து போகின்றன. சில உயிரினங்கள் ஏற்கெனவே இறந்து கரைக்கு வந்துசேர்கின்றன.

ஆரம்பத்தில் சிறிய மீன்களே மிகவும் அதிகமாக கரையை நோக்கி அலைகளால் வீசப்பட்டபோதும், இப்பொழுது பெரிய மீன்களும் இன்னபிற கடல் வாழ் உயிரினங்களான கடலாமை, டொல்பின், கடற்பாம்புகள், சிப்பிகள், சங்குகள், நண்டுகள் போன்றவையும் கடற்கரைக்கு வந்து இறந்து கிடப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இது குறித்து தெளிவில்லாத ஒரு நிலையில் மக்கள் இந்த மீன்களை தொடர்ந்தும் உணவாக உட்கொண்டு வருகின்றார்கள்.

கடலக வளங்கள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட துறையைச் சார்ந்தவர்கள் தமது அறிவுக்கெட்டிய வரையில் இந்த நிகழ்வுகள் குறித்து ஆளுக்கொரு கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். ஆயினும் அவை நம்பகத்தன்மையாகவும் அறிவுசார்ந்தவையாகவும் இல்லை என்பது நிகழ்வுகளை உற்றுக் கவனிப்போரின் உள்ளக்கிடக்கையாக உள்ளது.

குளிர் நீர் கரைக்கு வந்ததால் மீன்கள் இவ்வாறு கரைக்கு வந்து செத்து மடிகின்றன என்று ஒரு சிலரும், காலநிலை மாற்றமே இதற்குக் காரணம் என்று இன்னொரு சிலரும் தம் இஷ்டப்படி எதையெதையோ கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

போதாக் குறைக்கு கரையில் ஒதுங்கும் இந்த மீன்களை மக்கள் உண்ணலாம். அதனால் எந்த ஆரோக்கியக் கெடுதலும் ஏற்படாது என்று கடல் வளத்துடன் தொடர்புபட்ட அதிகாரிகள் கூறியதை அடுத்து மக்கள் இந்த மீன்களை கேள்வி கணக்கின்றி உண்கிறார்கள். ஆயினும் இந்த கருத்துக்களெல்லாம் அறிவுடைமையானதல்ல. இவற்றை ஆராய்ந்தறியாமல் முடிவெடுக்க முடியாது என்று பரவலான குரல்கள் விசனத்துடன் ஓங்கி ஒலிக்கின்றன.

இந்தக் குழப்பங்களை ஓரளவு நிவர்த்திக்கின்ற வகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறை விரிவுரையாளர் ஏ.எம். றியாஸ் அகமட், அவர்கள் தினமுரசுக்காக ஒரு ஆய்வு அறிக்கையைத் தந்துள்ளார்.

அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதற்கு அல்லது கரையொதுங்கி இறப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நோய்த் தொற்று, காலநிலை மாற்றம், பிழையான அல்லது டைனமைட், சயனைட் போன்ற சட்டவிரோதமான மீன்பிடிமுறைகள், மீன்பிடி இயந்திரப் படகுகளால் உண்டாகும் பாதகமான விளைவுகள், கப்பல்களிலிருந்து தவறுதலாகவோ அல்லது திட்டமிட்ட நோக்கமாகவோ கொட்டிவிடப்படும் இரசாயனப்பொருட்கள், கடலின் அடித்தளத்தில் புதைக்கப்படும் இரசாயன அணுக்கழிவுகள் மற்றும் இன்ன பிற இரசாயனக் கழிவுகள், கடலில் ஆயுதங்களைப் பாவித்தல் அல்லது பரீட்சித்துப் பார்த்தல் போன்றவைகளைக் கூறலாம்.

காத்தான்குடி நிகழ்வைப் பொறுத்த வரை இதில் எந்தக் காரணம் மிகப் பொருத்தமானதாக இருக்கும் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. நோய் காரணமென்றால், அதற்குரிய அறிகுறிகள் உயிரினங்களில் இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி நோய்க்கான அறிகுறிகள் எதுவும் தென்பட்டிருக்கவில்லை.

காலநிலை மாற்றம் காரணமென்றால், காலநிலை மாற்றம்தான் காரணம் என்ற இரு சொற்களை சொல்லிவிட்டு இலகுவாக இந்த நிகழ்வுக்குத் திரை போட்டுவிட்டு ஒதுங்கிவிட முடியாது.

சுமாராக 10 சதவீதமான நீர் சமுத்திரங்களின் மேற்பரப்பு நீரோட்டத்திற்கு உட்படுகின்றது. மிகுதியாயுள்ள 90 சதவீதம் நீர் கீழிருந்து மேற்பக்கமான நீரோட்டத்திற்கு உட்படுகின்றது. சமுத்திரங்களின் வெப்பநிலையை மாற்றுவதில் செல்வாக்கு செலுத்துவதும், மீன்களுக்கு அதிக போஷணைப் பொருட்கள், உணவுகள் போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு வந்து மீன்பிடியை அதிகரிக்கச் செய்வதும் இத்தகைய நீரோட்டங்கள்தான்.

இந்த நீரோட்டங்களை உருவாக்கும் சூரிய வெப்பம், காற்று, புவியீர்ப்பு விசை, கொரியோலிஸ் விளைவு போன்றவைகளை வைத்துக் கொண்டு அதனால் சமுத்திரத்தின் வெப்பநிலை சில வேளை கூடிக்குறையலாம். உவர்த்தன்மை, அதனுடன் விலங்கு அலையுயிரின் அடர்த்தி, ஒட்சிசனின் அடர்த்தி, கடலின் அடியில், நடுப்பகுதியில், மேற்பகுதியில் உள்ள உயிரினங்கள் சமுத்திரத்தின் வாழும் பகுதிகள் மற்றும் அதன் உணவு முறைகள் போன்றவைகளைத் தொடர்புபடுத்தி இவற்றுக்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

இதனைத் தவிர மற்றையவைகளுக்கும் சாத்தியம் இல்லையென்று எதனையும் நிராகரிக்கவும் முடியாது.

காத்தான்குடி கரைகளில் கடல் உயிரினங்கள் கரையொதுங்குவது போன்ற நிகழ்வுகள் இங்கு மட்டும் நடைபெறும் ஒன்றல்ல. கடந்த காலங்களில் அவ்வப் போதும், அண்மைய வருடங்களாக அடிக்கடியும் உலகின் பலபாகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் ஜனவரி, மார்ச் மாதங்களில் அமெரிக்காவின் அர்கன்சாஸ் மாநிலம், ஜனவரியில் அமெரிக்காவின் மேரிலான்ட் மாநிலம், இங்கிலாந்தின் தனஸ் பகுதி மற்றும் பிறேசில், நியூசிலாந்து, சுவீடன் போன்ற நாடுகளில் கடல் உயிரினங்கள் ஆயிரக்கணக்கில் இறந்து கரையொதுங்கியும் அல்லது கரையொதுங்கி இறந்துமுள்ளன.

இதற்கு நோய்கள் காரணமாக இருக்கக் கூடும். வெப்பநிலை கூடியிருக்கலாம் அல்லது குறைந்திருக்கலாம். மிதமிஞ்சிய குளிர்நீரின் தாக்கமாகவும் இருக்கலாம். அபாயகரமான நச்சுக் கழிவுகள் கடல் அடித்தளங்களில் புதைக்கப்பட்டதன் விளைவாகவும் இருக்கலாம். தவறுதலாக கடலில் கலந்த இரசாயனக் கழிவுகளின் பாதிப்பாகவும் இருக்கலாம் போன்ற உறுதிப்படுத்தப்படாத காரணங்களே முடிவுகளாக முன்வைக்கப்பட்டன.

எனினும், இது போன்ற நிகழ்வுகளுக்கு தெளிவான உறுதிப்படுத்தப்பட்ட காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை. உறுதியான முடிவுகளும் இல்லை. இவைகள் எப்போதும் மர்மமாகவே இருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஊகங்களும், அனுமானங்களும், கொள்கைகளுமே முன்வைக்கப்படுகின்றன.

எனவே இந்த நேரத்தில் நாம் செய்யக்கூடியது, அவதானம், கருதுகோள், பரிசோதனை, கொள்கை போன்ற படிமுறைகளினூடாக மக்களுக்குத் தகுந்த ஆதாரமான தெளிவுகளை முன்வைக்க வேண்டும்.

இதன் நிமித்தம் கிழக்குப் பல்கலைக்கழக ஆய்வாளர் பேராசிரியை ஸ்ரான்லி தேவதாசன் அவர்களுடன் ஆய்வாளர்களான நாமும் இணைந்து மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுக்குட்படுத்தி வருகின்றோம்.

இறுதியாக ஒருவிடயம், விலங்குகளின் அசாதாரண நடத்தைக்கும், இயற்கை இடர்களின் முன்னறிவிப்பிற்கும் எப்போதும் தொடர்பு இல்லை அல்லது எப்போதும் தொடர்பு இல்லாமலும் இல்லை. ஆனால் எல்லா அசாதாரண நடத்தைகளும் இடர்களுக்கான முன்னறிவிப்பு என்று கொள்ளமுடியாது. அசாதாரண நடத்தைகளை விலங்குகள் காட்டினாலும் (உயிரியல்), மற்றைய துறைகளான வானிலையியல், காலநிலை யியல், பௌதிகவியல், இரசாயனவி யல், புவியியல் போன்ற துறைகளுடன் சேர்ந்த ஆய்வுகளின் மூலமே அதனை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.


ஆனால், கடல் வள மற்றும் சமுத்திரம் சம்பந்தப்பட்ட ஆய்வுமுறைகள் இலங்கையில் இன்னும் வளரவில்லை. அவை சீனா போன்ற நாடுகளில் வளர்ந்திருக்கின்றன.

இந்த அசாதாரண நிகழ்வு, சமீப காலங்களில் உலகில் நடக்கும் சாதாரண நிகழ்வுகளில் ஒன்று என்று கருதிக்கொள்வதுதான் தற்போதைக்கு நம்மிடமுள்ள பதிலாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஆழ்கடல் பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டு வரைபடங்களைத் தயாரிப்பதற்கும் மீன் வளம் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டு அது குறித்துச் சரியான தகவல்களை மீனவர்களுக்கு வழங்குவதற்கும் கடல் பயணத்திற்குத் தேவையான விடயங்களையும் கடற்றொழில் சட்டக் கண்காணிப்பு, கடல் மாசடைதல் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கும் ஏற்றதான கப்பலொன்று கடந்த 19.10.2012 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டிருந்தது. ஹம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் இது தொடர்பான வைபவம் இடம்பெற்றது.

சமுத்திரிக்கா எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த ஆய்வுக் கப்பலுக்குள் ஒரே தடவையில் ஏழு விஞ்ஞானிகள் கூடியிருந்து ஆய்வில் ஈடுபட முடியும். உயர்மட்டத் தொழிநுட்ப உபகரணங்கள் மற்றும் ஆய்வுகளுக்கான அத்தியாவசியத் தேவைகளையும் ஈடு செய்யக்கூடியதாக இது அமைந்துள்ளது. 25 மீற்றர் நீளமும் 6.5 மீற்றர் அகலமும் கொண்ட இந்தக் கப்பலின் பெறுமதி 300 மில்லியன்களாகும். ●

> "கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதற்கு அல்லது கரையொதுங்கி இறப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நோய்த் தொற்று, காலநிலை மாற்றம், பிழையான அல்லது டைனமைட், சயனைட் போன்ற சட்டவிரோதமான மீன்பிடிமுறைகள், மீன்பிடி இயந்திரப் படகுகளால் உண்டாகும் பாதகமான விளைவுகள், கப்பல்களிலிருந்து தவறுதலாகவோ அல்லது திட்டமிட்ட நோக்கமாகவோ கொட்டிவிடப்படும் இரசாயனப்பொருட்கள், கடலின் அடித்தளத்தில் புதைக்கப்படும் இரசாயன அணுக்கழிவுகள் மற்றும் இன்னபிற இரசாயனக் கழிவுகள், கடலில் ஆயுதங்களைப் பாவித்தல் அல்லது பரீட்சித்துப் பார்த்தல் போன்றவைகளைக் கூறலாம். விலங்குகளின் அசாதாரண நடத்தைக்கும், இயற்கை இடர்களின் முன்னறிவிப்பிற்கும் எப்போதும் தொடர்பு இல்லை அல்லது எப்போதும் தொடர்பு இல்லாமலும் இல்லை. ஆனால் எல்லா அசாதாரண நடத்தைகளும் இடர்களுக்கான முன்னறிவிப்பு என்று கொள்ளமுடியாது."



# முடிவின்றி தொடரும் பட்டதாரிகளின் பிரச்சினை

**கிழக்கில்** மாத்திரமல்ல முழு இலங்கையிலுமே நடைபெற்ற பட்டதாரிப் பயிலுநர் நியமனங்களுக்குள் சுமார் 45 ஆயிரம் பட்டதாரிகள் பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் தற்போது, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தமது அமைச்சுக்குள் உள்ளீர்க்கும் வேலைகளை ஆரம்பித்திருக்கிறது.

இந்த நிலையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள்,. பட்டதாரிகளின் எதிர்காலச் செயற்பாடுகள் தற்போதைய குழப்பகரமான சூழல் போன்ற விவகாரங்கள் குறித்து இந்த கட்டுரை பேச இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் யூன் மாதத்தில் பட்டதாரிப் பயிலுனர்களின் நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு யூலை மாத இறுதிப்பகுதியில் இவர்களுக்கான பயிலுநர் நியமனங்கள் எந்த விதமான பேதப்பிரிப்பும், திணைக்களப்பிரிப்புகளும் இல்லாத நிலையில் வழங்கப்பட்டிருந்தன.

இதற்கான நியமனங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அரசியல்-பேதங்கள் காட்டப்படுகின்றன. அரசியல்வாதிகளின் அதிகாரம் பிரயோகிக்கப்படுகிறது. என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் வெளிவந்த வண்ணமே இருந்தன.

ஆனாலும் அந்த நிலைமைகளைத் தாண்டி பட்டதாரிகளுக்கான பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதனையடுத்து இரண்டு, மூன்று வாரங்களிலேயே பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தமது அமைச்சுக்கு என ஆட்களைத் தெரிவு செய்வதற்காக நேர்முகப்பரீட்சைகளை நடத்தி ஆட்களைத் தேர்வுசெய்து பணிகளில் ஈடுபடுத்தியிருந்தது. இருப்பினும், சுமார் மூன்று மாதங்கள் நிறைவடைகின்ற நிலையில் கடந்த வாரம் முதல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தமது அமைச்சுக்குள் உள்வாங்கப்பட்டவர்களுக்காக பயிலுனர் நியமனங்களை வழங்கி வருகிறது.

இந்த நேரத்தில், பட்டதாரிகளுக்கான நிரந்தர அரச வேலைவாய்ப்பு நியமனத்தில் அரசியல் தலையீடுகள் இடம்பெறுவதாகவும் அரசியல் தலையீடுகள் இல்லாமல் வேலை வாய்ப்பு வழங்கிய அனைத்து பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் மட்டக்களப்பில், ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

இதேநேரம், பட்டதாரி பயிலுனர் நியமனத்தில் அரசியல் பாகுபாடு இல்லை. ஆனால், பொருளாதார அபிவிருத்த அமைச்சு என்பது நாட்டின் முக்கியமான அமைச்சு என்பதுடன், அதில் உள்வாங்கப்படுபவர்கள் அரசாங்கத்தின் அனைத்து முக்கிய திட்டங்களையும் நடைமுறைப்படுத்துபவர்களாக இருப்பார்கள். அந்த வகையில், அவர்கள் அரசாங்கத்திற்கு விசுவாசமானவர்களாக இருக்க வேண்டும் என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சரும் மட்டக்கப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவருமான எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா தெரிவித்திருக்கிறார்.

பட்டதாரிப் பயிலுனர் நியமனங்கள் வழங்கும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வார ஆரம்பத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. மொத்தமாக 454 பயிலுனர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குள் உள்வாங்கப்பட்டு வருகின்றனர். இதுவரையில் சுமார் 150 வரையான பயிலுனர்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இந்த நியமனங்களை வழங்கியிருக்கிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குள் உள்வாங்கப்பட்ட மண்முனை பிரதேச செயலக பிரிவிலுள்ள பட்டதாரி பயிலுனர்கள் சிலருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி .வைக்கும் வைபவத்தில் உரையாற்றிய பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பட்டதாரி பயிலுனர்களை ஆட்சேர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக இன்று சில ப்பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு அவர்கள் பொருளாதார அமைச்சின் கீழ் உள்வாங்கப்படுகின்றனர்.

இதேபோன்று ஏனைய பட்டதாரி பயிலுனர்களும் அடுத்தடுத்த கட்டங்களில் ஒவ்வொரு அமைச்சின் கீழும் உள்வாங்கப்பட்டு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இதையிட்டு எந்தவொரு பட்டதாரி பயிலுனரும் கவலையடையத் தேவையில்லை.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, தொழில் அமைச்சு, எனது சிறுவர் மகளிர் விவகார அமைச்சு என இவ்வாறு பல அமைச்சின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டதாரி பயிலுனர்கள் அனைவருமே உள்வாங்கப்பட்டு அவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அதில் முதற்கட்டமாகவே பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த பட்டதாரி பயிலுனர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழ்ங்கப்பட்டு வருகின்றன.

நிரந்தர நியமனம் பெறும் பட்டதாரிகள் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களையும் அபிவிருத்தி நடவடிக்கைகளை சரிவர செய்கின்றவர்களாக இருக்க வேண்டுமே தவிர அரசாங்க வேலைத்திட்டங்களை விமர்சிக்கின்றவர்களாக இருக்கக்கூடாது எனத் தெரிவித்தார்.

ஆனாலும் அரசாங்கத்தின் சார்பில் மட்டக்களப்பில் இருக்கும் அரசியல்வாதிகளால் எடுக்கப்படும் சில நடவடிக்கைகளும் வெட்டுக்குத்துக்களுமே பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நியமனங்களில் தற்போது பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறது என்பது மாத்திரம் வெளிப்படையானதாக இருக்கிறது.

இப்போது வழங்கப்பட்டு வரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நியமனங்கள் நிரந்தர நியமனங்கள் என்று பொதுவாக பட்டதாரிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் குழப்பகரமான நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. இதில் குழப்பங்கள் நிறையவும் இருக்கின்றன.

இருப்பினும் இது பயிலுனர் நியமனங்களே என்பது மட்டுமே முழுமையானதாகும். இவர்களுக்கு வழங்கப்படும் நியமனங்கள் பயிலுனர் பயிற்சிக் காலத்தின் பின்னரே நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்பது உண்மையானது.

ஆனால் பட்டதாரி பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்ட சில வாரங்களில் ஆறு மாத கால பயிற்சியின் பின் பட்டதாரிகளின் நிலையானது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. ஆறு மாதகால பயிற்சி பெற்ற அனைவரிற்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுமா என்பது பற்றி இதுவரை எந்த உறுதிப்பாடும் வழங்கப்படவில்லை. இந்நிரந்தர நியமனம் தொடர்பாக மிக விரைவில் அரசு பட்டதாரி பயிலுனர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்பதோடு அவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் அது எவ்வித முறைகேடோ, அரசியல் தலையீடோ இன்றி ஆண்டடிப்படையில் வழங்கப்பட வேண்டும் எனப் பட்டதாரிகள் எதிர்பார்க்கின்றனர் என வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தம்மிக்க முனசிங்க தெரிவித்திருந்தார். அது தொடர்பில் அவர் ஒரு ஊடக அறிக்கையினையே விடுத்திருந்தார் என்பது . இந்த இடத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்று ஏனைய மாவட்டங்களிலும் இது போன்ற பிரச்சினைகள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. ஆனால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பது மிகுந்த வேலைப் பழுவுடையது, எனவே இந்த அமைச்சுக்குள் நாம் இணையக் கூடாது என்றிருந்த பட்டதாரிகள் இறுதி நேரத்தில் தாம் இந்த அமைச்சுக்குள் இணைந்து கொள்ள பல்வேறு பிரயத்தனங்களை எடுத்துவருகிறார்கள் என்பது உண்மையானதாகும்.

ஆனாலும், அரசாங்கத்தின் கட்சிக்குத் தேர்தலை நடத்துவதற்காக இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு ஆரம்பத்தில் வைக்கப்பட்டே வந்த நிலையில் தற்போது, பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குள் உள்வாங்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் அமைச்சுக்குள் உள்வாங்கப்படும் நியமனங்கள் வழங்கப்படும் போது ஒதுக்கப்படும் நிலை உருவாவதை அதற்குப் பயன்படுத்த பட்டதாரிகள் தயங்கவில்லை.

அரசின் திட்டங்களான புறநெகும, மகநெகும, திவிநெகும, மீள் எழுச்சித்திட்டம், கமநெகும என அனைத்து திட்டங்களையும்,

*பிரகஸ்பதி*

நடைமுறைப்படுத்துவதற்காக மகிந்த சிந்தனையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் உள்வாங்கப்படும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான பட்டதாரிகள் முக்கியமானவர்களாகவே கொள்ளப்படுகிறார்கள்.

இருந்தாலும் 6 மாத நிறைவில் பட்டதாரி பயிலுனர்களில் நிலை என்ன என்று கேள்வி கேட்டவர்களுக்கு பதிலை இன்னும் இரு மாதங்களில் வழங்கவிருக்கும் பொருளாதார அமைச்சு பட்டதாரிகளின் சந்தேகத் தன்மையைக் குறைக்கவே வழி செய்கிறது. இந்த அமைச்சினால் உள்வாங்கப்படாது விடப்படுபவர்கள் ஏனைய அமைச்சுகளுக்குள் உள்வாங்கப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படவே இருக்கிறது.

இதனைப் புரிந்து கொள்பவர்களாக பட்டதாரி பயிலுனர்கள் இருக்க வேண்டும் என்றே அரசாங்கமும் விருப்புக் கொண்டுள்ளது. இந்த விருப்பத்தினை பயிலுனர்கள் விளங்கிக் கொள்வதே தற்போதைய தேவையாகவும் இருக்கிறது.

இந்தப் பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்ட ஆரம்பத்தில், பட்டதாரி பயிலுனர் நியமனம் வெற்றியளிக்குமா என்ற கேள்விகள் எழுந்திருந்தன. அது குறித்து நாமும் எழுதியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கான பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் வகையில் வழங்கப்பட்ட இந்த நியமனங்களில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு அனைத்து பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டு நிறைவடையும் போதே கிடைக்கும் என்பதால் தற்போது ஏற்பட்டிருக்கும பிரச்சினை யார் முந்தி நீயா நானா என்பது போன்றதாகவே இருக்கும். அதுவரையில் பொறுத்திருப்போம்.

# மலையகத்தில் மாற்று தொழிற்சங்க சம்மேளனம் சாத்தியமாகுமா?

**மலையகத்தில்** அவ்வப்போது பிரச்சினைகள் ஏற்படுவதும் பின்னர் அது அங்குள்ள மக்களுக்கு பாதிப்பு வந்தாலும்கூட மறக்கப்படுவதும் இயல்பான விடயங்களாக மாறியுள்ளன.

இதற்கு அங்குள்ள தலைமைத்துவங்களின் குறிப்பாக அரசியல் தலைமைத்துவங்களின் திறனற்ற தன்மையே காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்டுவருகிறது.

இதற்கு ஒரு உதாரணமாக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வந்துசெல்லும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம். இலங்கையில் ஏனைய தொழிலாளர் வர்க்கத்தினருக்கு வருடாவருடம் வாழ்க்கை செலவுப் புள்ளிக்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும் நிலை கடைப்பிடிக்கப்படுகிறது.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாயினும் அப்போதுள்ள வாழ்க்கை செலவுப்புள்ளிக்கேற்ற முறையிலேயே அந்த தொழிலாளர்களின் சம்பளங்கள் தீர்மானிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

எனினும் இந்த தோட்டத்தொழிலாளர்களுக்கு மாத்திரம் இந்த நிலைமை மாறி வாழ்க்கை . செலவுப்புள்ளியை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் சம்பள உயர்வுக்கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன.

மாறாக, அவர்களுக்கு முதலாளிமார் சம்மேளனம் என்று கூறப்படும் தோட்டத்துறை உரிமையாளர்களும் தோட்டத்தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறிக் கொள்ளும் தொழிற்சங்கங்களும் இணைந்து பேசி சம்பளங்களை தீர்மானிக்கின்றன. இதனடிப்படையில் கூட்டு உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படவுள்ளது.

இந்தத் தீர்மானம் இதுவரை காலத்தில் தோட்டத்தொழிலாளர்களை திருப்திப்படுத்தும் சம்பள உயர்வாக இருந்தது என்பதற்கு சான்றுகள் இல்லை எனலாம். எனினும் அவ்வாறான வேளையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்கள் மூலம் தமது எதிர்ப்பை வெளியிடுகின்ற போதும் அவர்கள் நாட்சம்பளத்துக்கு உட்பட்டவர்கள் என்பதால், அந்தப் போராட்டங்கள் பெரிதாக நின்றுப் பிடிப்பதில்லை. இந்தநிலையில் முதலாளிமார் சம்மேளனத்துடன் தொழிலாளர் சார்பில் கூட்டு உடன்படிக்கையை செய்து கொள்ளும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளாக தற்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம்( ஐக்கிய தேசியக்கட்சியின் உடையது) என்பன செயற்பட்டு வருகின்றன. எனினும் இந்த தொழிற்சங்கங்களுக்கு அப்பால், பல தொழிற்சங்கங்கள், உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் இருந்து வருகின்றன. ஆனால் அந்த தொழிற்சங்கங்கள், கணிசமான தொகை தொழிலாளர்களை தமது உறுப்பினர்களாக கொண்டிருக்கின்றன.

எனவே அந்த தொழிற்சங்கங்கள் பேரம் பேசும் சக்தியை கொண்டிருக்கின்றன என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவையும் சிலவேளைகளில் தொழிலாளர்கள் சார்பாக நடந்து கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறது.

குறிப்பாக இவ்வாறான தொழிற்சங்கங்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாமை காரணமாகவே, இந்தக் குற்றச்சாட்டுக்கு வழியேற் படுகிறது.

ஏற்கனவே இந்த தொழிற்சங்கங்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரத்தின் (தேசிய தொழிலாளர் சங்கம்,) மனோ கணேசனின்

**அமலன்**

( ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்) மாகாணசபை உறுப்பினர் எஸ்.சதாசிவத்தின்( இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி) சாந்தினி சந்திரசேகரனின் ( மலையக மக்கள் முன்னணி) முன்னாள் பிரதி நீதியமைச்சர் வீ.புத்திரசிகாமணியின் தொழிற்சங்கம் போன்றவை இணைந்து, கூட்டு தொழிற்சங்க சம்மேளனத்தை அமைத்திருந்தன.

எனினும் அது உரியமுறையில் செயற்படவில்லை. இதன்காரணமாககூட்டு உடன்படிக்கை செய்துக் கொள்ளும் தொழிற்சங்கங்களே தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என்ற நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தநிலையில் தற்போது மீண்டும் ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம், கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள், தொழிற்சங்கங்கள் சம்மேளனம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

இதற்கு மனோ கணேசன் உள்ளிட்டவர்களிடம் இருந்து சாதகமான பதிலும் கிடைத்துள்ளது.

அதேநேரம் ஏற்கனவே அமைக்கப்பட்டு செயற்படாமல் உள்ள சம்மேளனத்தின் ஏற்பாட்டாளராக இருக்கும் முன்னாள் பிரதி நீதியமைச்சர் வீ.புத்திரசிகாமணி பழைய சம்மேளனம் மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும் என்று யோசனையை முன்வைத்துள்ளார்.

எனவே மீண்டும் தோட்டத் தொழிலாளர் சார்பில் கூட்டு தொழிற்சங்க சம்மேளனம் உருவாக்கப்படுமா? அது தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக பாடுபடுமா? என்பதற்கு காலமே பதில்சொல்ல வேண்டும்.

# கிழக்கில் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த முருக்கன் தீவு

மனித வரலாற்றைக் கட்டியெழுப்ப உதவும் சாதனங்களில் வரலாறு, தொல்லியல் போன்ற துறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் வரலாற்று நூல்கள் எழுதிய ஆசிரியரின் மனோபாவத்திற்கேற்ப திரித்தும் மாறுபட்டும் எழுதப்படலாம்.

ஆனால் தொல்லியற் சான்றுகள் அவ்வாறன்று. அவை உண்மைய்யை உள்ளபடி கண்டறிய உதவும். இதன் மூலம் ஏனையவற்றைவிட மனித வரலாற்றை அறியும் ஆய்வில் இவை தனித்துவமான இடத்தை வகிக்கின்றன எனலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே கோரளைப்பற்று தெற்குப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமமே முருக்கன் தீவு. பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் கிண்ணையடி எனும் பழம்பெரும் ஊரினூடாகச்சென்று கிண்ணையடி ஆற்றைக் கடந்து சென்றால் முருக்கன் தீவு அமைந்துள்ளது.

பழைமை வாய்ந்த இவ்வூரின் தொல்லியற் தடயங்களைக் கண்டறியும் ஆய்வு முயற்சியொன்று கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. அம்முயற்சியின் பயனாக அவ்வூரின் தொன்மையை வெளிப்படுத்தும் வகையிலான சான்றுகள் கிடைத்தன.

முருக்கன்தீவு பிரதேசத்தில் ஏறத்தாழ 50 குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்கள் சேனைப் பயிர்ச் செய்கை, மாடு மேய்ப்பு, விவசாயம், மீன்பிடி போன்றவற்றை தமது வாழ்வாதாரத் தொழில்களாக மேற்கொள்கின்றனர். இம்மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் படி 1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வூரில் ஐந்தாறு குடும்பங்கள் வாழ்ந்ததாகவும், பின்னர் பல குடும்பங்கள் கிண்ணையடி முதலான ஊர்களிலிருந்து வந்து வாழத் தொடங்கியதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு முருகனாலயம் ஒன்று அமைந்துள்ளது. மக்கள் நீண்ட காலத்திற்கு முன்னரே இவ்விடத்தில் வேல் வைத்து முருகனை வழிபடத் தொடங்கியுள்ளனர். ஆயினும் கோயிற்கட்டடம் 1986 ஆம் ஆண்டளவிலே தான் கட்டப்பட்டுள்ளது.

இந்த முருகன் கோயிலின் முன்றலில் படிக்கற்களாக இரு கற்துண்டுகள் போடப்பட்டுள்ளன. ஏறத்தாழ 6 அடி நீளமானவையாக இவை காணப்படுகின்றன. செம்மையாக வெட்டப்பட்ட இக்கற்களை தற்செயலாக நோக்கிய போது மேலிருந்த கல்லில் சில எழுத்துக்களை அவதானிகக் முடிந்தது. அதனைச் சுத்தம் செய்து பார்த்தபோது அவை தமிழ் எழுத்துக்களின் ஆரம்ப வரி வடிவமாகிய தமிழ் பிராமி எழுத்துக்கள் என்பதை அறியமுடிந்தது.

தமிழ் பிராமிச் சாசனங்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை. இவை தமிழ் மொழியில் எழுதப்பட்டவை. அளவிற் சிறிய இச்சாசனங்கள் பெரும்பாலும் தான சாசனங்களாகவே அமைகின்றன.

இலங்கையில் ஏறத்தாழ 2000 இற்கு மேலான பிராமிச்சாசனங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் பிராகிருதச் சொற்கள், தமிழ் மொழிச் சொற்கள் என்பன காணப்படுகின்றன. கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகளில் இலங்கை யில் தமிழ் ஒரு பேச்சு மொழியாக விளங்கியமைக்கு ஆதாரமாய் பிராமிச் சாசனங்கள் அமைகின்றன என பேராசிரியர் சி. பத்மநாதன் தமது இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

முருக்கன் தீவில் கிடைத்த சாசனத்தை வாசிக்க முற்பட்ட போது அதனை முழுவதுமாக எம்மால் வாசிக்க முடியவில்லை. மேல்வருமாறு அவற்றை அடையாளம் காண முடிந்தது.

இவ்வெழுத்துக்கள் ஓரளவு தெளிவாகத் தெரிந்தன. அதிலும் குறிப்பாக (மருதம) எனும்சொல்லை மற்றைய எழுத்துக்களை விடத் தெளிவாக வாசிக்க முடிந்தது. கற்சாசனங்களில் மெய்யெழுத்துக்களின் பயன்பாடு அரிதாகையால் இச்சொல்லை மருதம் எனக் கொள்ளமுடியும்.

நன்றி: இணையம் (தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 33 துன்பியல் தொடர்

அதாவது மனிதர்களை எவ்வாறு வெறுக்கப் பழகுவது என்பதுதான் அது.

ஒரு புலி உறுப்பினன் புதிதாகச் சேர்க்கப்பட்டதும் அவனுக்கு முதலில் ஊட்டப்படுவது அரச எதிர்ப்பும் சிங்கள இன எதிர்ப்பும்தான். ( சில சந்தர்ப்பங்களில் முஸ்லீம் – மலையக மக்கள் எதிர்ப்பும்) பின்னர் குடும்பப் பாசத்திலிருந்து விடுதலையும் எதிர்ப்பும். அவன் படிப்படியாக தாய், தந்தை, சகோதரர், உற்றம் சுற்றம் என்ற பாசத்தளைகளிலிருந்து விடுவிக்கப்படுவதுடன், அவர்களை அந்நியர்களாகப் பார்க்கும் நிலைக்கும் தள்ளப்படுவான். தேவையானால் அவன் அவர்களுக்கு எதிராகவும் செயற்படுவதற்குத் தயார்ப்படுத்தப்படுவான்.

இதற்கு அடுத்தகட்டமாக, தனது சொந்த இனமான தமிழ் மக்களையே வெறுக்கும் ஒருவனாக மாற்றப்பட்டு, பின்னர் பொதுவாக மனித இனத்தையே வெறுப்பவனாக, அவர்களை சந்தேகிப்பவனாக உருமாற்றப்படுவான். இயக்கத்திலிருக்கும் சக தோழனை சந்தேகிப்பதும், அவனை வேவு பார்ப்பதும்கூட அவனுக்கு வழங்கப்படும் பயிற்சி முறைகளில் உள்ளடங்கியவை. பொதுமக்களுக்கு மேல் அதிகாரம் செலுத்துவதற்காகவே அவன் படைக்கப்பட்டதாக ஒரு பிம்பம் அவனது மனதை நிறைக்கும் வகையில், அவன் புதிய வார்ப்பில் இடப்படுவான். அவன் மதிக்கும் வணங்கும் நேசிக்கும் ஒரேயொரு நபர் அவனது தலைவன் (பிரபாகரன்) மட்டுமே. இவ்வாறுதான் ஒரு சாதாரண தமிழ் சிறுவன், புலிப் பொசிஸ்ட்டாக உருவாக்கப்படுகிறான்.

இந்த வகையில் வளர்க்கப்பட்ட புலிகளின் புலனாய்வுப் பிரிவினரின் கைகளிலேயே நான் இப்பொழுது அகப்பட்டிருக்கிறேன். இவர்களிடம் மனிதநேயம், இரக்கம், வயதுக்குரிய மரியாதை, பண்பாடு எதையும் எதிர்பார்க்க முடியாது என்பது எனக்குத் தெரியும். இவர்களின் கைகளில் சிக்கிச் சிதைவடைந்து போகாமல் தவிர்ப்பதே, எனது இப்போதைய ஒரே கவலை. அவர்களைத் திசைதிருப்பவும், நம்ப வைக்கவும் வேண்டுமானால், சிலநேரங்களில் உண்மை பேச வேண்டும். அதன் மூலம் அவர்களின் என்மீதான நம்பகத் தன்மையைப் பயன்படுத்தி, சில விடயங்களில் பொய் சொல்ல வேண்டும். சிலவேளைகளில் அப்பாவியாகவும், சமயங்களில் அதி பிரசங்கித்தனமாகவும் கூட வேஷம் கட்ட வேண்டும்.

இப்போதைக்கு இந்த தயாபரன் என்ற பையன் (எனது விசாரணையாளன்) ஓரளவு பண்பானவன் போலத் தோன்றுகிறது. ஆனால் புலிகளின் வரலாற்றில் எதையும் நம்ப முடியாது. கூடப் படுத்திருந்தவனையே நள்ளிரவில் சுட்டுக் கொன்றவனை தலைவனாகக் கொண்ட ஓர் இயக்கமல்லவா இது? ஆனாலும் ஏதோவொரு காரணத்துக்காக 'தென்னம்பாளை' வசீகரனை மாற்றிவிட்டு, காந்தி இந்த தயாபரனைப் போட்டது சற்று நிம்மதியைக் கொடுத்தது.

தயாபரன் என்னிடம் கேட்ட முதல் கேள்வி, "உங்களை ஏன் பிடிச்சது எண்டு தெரியுமா?" என்பதே. உண்மையில் எனக்கு அதற்கான பதில் என்னவென்று தெரியாது. வேண்டுமானால் 'நான் அவர்களின் அரசியல் எதிரி' எனப் பொதுவான ஒரு காரணத்தைப் பதிலாகக் கூறலாம். ஏனெனில் அவர்களது பார்வையில், குறிப்பான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை மட்டுமின்றி, தம்முடன் கருத்து முரண்பாடு கொண்டிருந்தவர்களையும் அவர்கள் கைதுசெய்த காலமது. என்னைச் கைதுசெய்ததற்கான காரணம் எனக்குத் தெரியாவிட்டாலும், இந்தத் தயாபரனுக்கும் அவனது தலைவர்களுக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும்.

இன்னும் சொல்லப்போனால், எமது தமிழ் மகாஜனங்களுக்கும் கூட அது தெரிந்திருக்கும். ஏனெனில் அவர்கள்தான், புலிகள் யாரையாவது கைது செய்தால் அல்லது கொலை செய்தால், "பொடியள் காரணமில்லாமல் ஒரு நாளும் அப்பிடிச் செய்யமாட்டாங்கள். இவர் என்னவோ அவங்களுக்கெதிராக வில்லங்கமான வேலை செய்திருக்கோனும்" என அன்றிலிருந்து இன்று வரை நற்சாட்சிப் பத்திரம் வழங்கி வருபவர்கள்.


"எனக்குத் தெரியேல்லை" எனப் பதிலளித்தேன். அவனது முகத்தில் நக்கல் நளினம் எதையும் காணவில்லை. உண்மையில் ஏதோ பாரதூரமாக யோசிப்பது போலத் தோன்றினான். பின்னர் "நீங்கள் உங்களைப் பிடிக்க வந்த ஆட்களிட்டைக் கேட்கல்லையா?" என வினவினான்.

அதற்கு நான் "கேட்டனான், ஆனால் ஒரு சின்ன விசாரணை எண்டுதான் சொல்லிச்சினம். நான் திரும்பவும் கேட்டபோது, 'உங்களை விசாரிக்கிற ஆட்கள் சொல்லுவினம்' எண்டு சொல்லிச்சினம்" என தயாபரனுக்கு பதிலளித்தேன். உண்மையில் என்னைக் கைதுசெய்த போது காரணம் எதுவும் சொல்லாததையிட்டு அவன் ஆச்சரியப்படுகிறானா அல்லது அவர்களது நடைமுறை (காரணம் சொல்லாத) தெரிந்திருந்தும் நடிக்கிறானா எனத் தெரியவில்லை.

"என்ன மச்சான் என்ரை ஆளை நீ பிடிச்சிட்டாய் போலை கிடக்கு" என்ற குரல் திடீரென எனக்குப் பின்னால் கேட்கத் திரும்பிப் பார்த்தேன். எனக்குப் பின்னால் வசீகரன் ஒரு விசமச் சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான். வழமைபோலவே அவனது கையில் காய்ந்த தென்னம்பாளையொன்று இருந்தது.

**புலிகளின் முகாம்கள் இருந்த இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்வது அவசியம்!**

வசீகரனிடமிருந்து மீண்டும் விபரீதம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை. 'ஐயா தப்பீட்டியள்' எனச் சொல்லிவிட்டு அவன் அங்கிருந்து அகன்றுவிட்டான். தயாபரனின் விசாரணை தொடர்ந்தது.



ஆனாலும் உண்மையான விசாரணை இன்னமும் ஆரம்பமாகவில்லை. அங்கு சென்றபின்னர்தான் புலிகளின் விசாரணை முறைகளை அறிந்துகொள்ள முடிந்தது. முதலில் அவர்கள் ஒருவரின் குடும்பப் பின்னணிய்ய முழுமையாக அறிந்துகொள்ள முயற்சிக்கின்றனர்.

அதாவது என்னுடைய பெயர், தாய் தந்தையரின் பெயர்கள், சகோதரர்களின் பெயர்கள், அவர்களின் துணைவர்கள் மற்றும் பிள்ளைகளின் பெயர்கள், பிள்ளைகள் திருமணம் செய்திருந்தால் அந்த விபரங்கள், தாய் தந்தையரின் சகோதரர்களின் பெயர்கள், அவர்களது துணைவர்கள் பிள்ளைகளின் பெயர்கள் என அது நீண்டுகொண்டே போகும்.

அதுமாத்திரமின்றி, நான் பிறந்ததிலிருந்து வாழ்ந்த இடங்கள், படித்த இடங்கள், செய்த வேலைகள், நெருங்கிய நண்பர்கள், திருமணம் செய்திருந்தால் மனைவியின் பிள்ளைகளின் பெயர் மற்றும் விபரங்கள், மனைவியின் குடும்ப அங்கத்தவர்களின் விபரங்கள் என்பனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட வேண்டும்.

மேலும் ஏதாவது அரசியல் கட்சிகள் அல்லது இயக்கங்களில் அங்கம் வகித்திருந்தால் அந்த விபரங்கள், வேறு பொது விடயங்களிலான ஈடுபாடுகள் எனப் பல விடயங்களைப் புலிகளின் விசாரணையாளர்கள் ஒவ்வொரு கைதியிடமும் முழுமையாக விசாரித்துப் பதிவு செய்து கொள்வர். அதன்படி என்னிடமும் பூரண விபரங்கள் பெறப்பட்டன. இந்த விசாரணையே இரண்டு மூன்று தினங்கள் நீடித்தன.

விசாரணைகளின்போது தயாபரன் என்னிடம் ஓரளவு கண்ணியமாக நடந்து கொண்டான். முதல்நாள் விசாரணை நடந்து நான் சிறைச்சாலைக்குள் சென்ற போது, இரவு குற்றுயிரும் குறையுயிருமாக இரவு தூக்கிச் செல்லப்பட்ட அந்த புளொட் இயக்க வாலிபன் மரணமடைந்துவிட்டதாக சக கைதிகள் குசுகுசுத்ததை அவதானித்தேன். அவரது உடல் அந்த முகாம் இருந்த வளவுக்குள்ளேயே புதைக்கப்பட்டுவிட்டதாகவும் அவர்கள் பேசிக்கொண்டனர். அவ்வாறு முன்பும் விசாரணைகளின்போது கொல்லப்பட்ட பலரின் உடல்கள் அந்த வளவுக்குள்ளேயே புதைக்கப்பட்டுள்ளதாகக் கைதிகள் கூறினர்.

இந்தக் தகவல்களில் எவ்வளவு தூரம் உண்மையுள்ளது என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும், விசாரணைகளின்போது பலர் இறப்பது அடிக்கடி நிகழ்ந்து வந்திருக்கிறது என்பது மட்டும் உண்மை. உதாரணமாக நான் அங்கு ஒரு கைதியாகச் சென்றபின்னர் கூட, பளைப் பகுதியிலுள்ள சின்னத்தாளையடி என்ற கிராமத்தில் நடந்த ஒரு இளம் ஆசிரியையின் கொலை சம்பந்தமாக சிலர் புலிகளால் கைதுசெய்யப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். விசாரணையின் முடிவில் இருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே, அவர்களில் ஒருவரான எனக்கு நன்கு தெரிந்த இயக்கச்சி மல்வில் கிராமத்தைச் சேர்ந்த மகேந்திரம் என்ற நெடிய திடகாத்திரமான இளைஞர் விசாரணைகளின் போதே அடித்துக் கொல்லப்பட்டார்!

புலிகளின் கைதிகளாக இருப்பவர்களில் பலா இவ்வாறு சட்டத்துக்குப் புறம்பாக, மிலேச்சத்தனமான முறையில் கொல்லப்பட்டு வந்துள்ளதை, அவர்களின் பல சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய கைதிகள் அறிவர்.

அவர்கள் கூறுவதுபோல, அவ்வாறு கொல்லப்பட்ட பலரின் உடல்கள் அந்த முகாம் வளவுகளுக்குள்ளேயே புதைக்கட்டுமிருக்கலாம். இதுபற்றி அரசாங்கம் எவ்வளவு அக்கறையுடன் ஆய்வுகளை மேற்கொள்கின்றதோ தெரியவில்லை.

பொதுவாகவே அரச இராணுவத்தினர் ஒரு பகுதியிலிருந்து புலிகளை விரட்டியபின்னர், அங்கிருந்த புலிகளின் முகாம் கட்டடங்களைத் தகர்ப்பதிலேயே கவனம் செலுத்தி வந்துள்ளதை அறியமுடிகிறது. உதாரணமாக இங்கு இரண்டொன்றைக் குறிப்பிடலாம்.

1995 ஒக்டோபர் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளை இராணுவம் விரட்டிய பின்னர், எம்மைப் புலிகள் தடுத்து வைத்திருந்த ஆனைக்கோட்டையிலிருந்த Tank 2 என்ற முகாம் பகுதியை நானும், என்னுடன் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒரு ஓய்வுபெற்ற அதிபரும் சென்று பார்வையிட்டோம். ஆனால் அங்கு முகாம் ஒன்று இருந்ததிற்கான அடையாளமே தெரியாதபடி, இராணுவத்தினர் அந்தக் கட்டடத்தைத் தகர்த்து வெறும் கற்குவியலாக்கியிருந்தனர்.

அதேபோல வரணி எருவன் பகுதியிலிருந்த 'மேல்வீடு' எனப் புலிகளால் அழைக்கப்பட்ட பகுதியையும் சென்று பார்வையிட்டோம். அதுவும் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது.

**(துன்பியல்கள் தொடரும்...)**



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



### ஈகை

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

பொருள்களின் குறைபாட்டை நிரப்புவதற்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தனியராய் உண்பது.

குறள்:229

# இயற்கைப் பாடங்கள்



உயர வேண்டும் தம்மைப் போல
உணர்த்தி நிற்கும் மலைகள்!
உழைக்க வேண்டும் சோம்பலின்றி
ஊர்ந்திடும் எறும்பு சொல்லும்!

விழிக்க வேண்டும் விடியலில்
கூவிச் சொல்லும் சேவல்!
முயல வேண்டும் தொடர்ச்சியாக
முழங்கிச் சொல்லும் அலைகள்!

கரைய வேண்டும் கருணையோடு
பொழிந்து சொல்லும் மேகம்!
விரைய வேண்டும் இலக்கை நோக்கி
நதிகள் நமக்குச் சொல்லும்!

வளைய வேண்டும் வெல்வதற்கு
வணங்கிச் சொல்லும் நாணல்!
பேச்சில் இனிமை வேண்டும்
கூவிச் சொல்லும் குயில்கள்!

நினைவில் நிற்க திரும்பச்சொல்
கூண்டுக் கிளிகள் சொல்லும்!
புகழ்மணம் வீச வாழ வேண்டும்
சிரிக்கும் மலர்கள் சொல்லும்!

இயற்கையிடம் பாடம் கற்றுக்கொள் - நீ
இணையில்லாமல் உயர்ந்து நில்!

# ஒற்றுமை



பெரிய பண்ணை வீடு. நடுவில் வீடு அமைந்திருந்தது. வீட்டை சுற்றி மரம் செடி, கொடிகள் வளர்க்கப் பட்டன. மா, கொய்யா, மாதுளை, நெல்லி போன்ற பழமரங்களும் அதில் நின்றன.

வீட்டையும், தோட்டத்தையும், காவல் காக்க நாய் ஒன்றை வளர்த்து வந்தார் வீட்டுக்காரர். மரங்களில் விளையும் காய்கனிகளை அணில் களும், பறவைகளும் சாப்பிடும். சில அணில்கள் அங்குள்ள மரப் பொந்தில் வாழ்ந்து வந்தன. அவை காய்கள் நன்றாக பழுக்கும் முன்பாக செம்பழமாக இருக்கும் பொழுதே கடித்து உண்ணும். சில சமயம்பழுத்து கீழே விழும் பழங்களை எடுத்து தின்ன அணில்கள் கீழே இறங்கும்.

மரத்தைவிட்டு இறங்கும் அணில் களை நாய் பிடித்து தின்றுவிட ஆசைப்படும். ஆனால் அணில்கள் நாயின் பிடியில் சிக்குவதேஇல்லை.

நாய் ஓடிவருவதை அறிந்த உடனே அணில்கள் சுவற்றிலோ, மரத்திலோ ஏறிக்கொள்ளும். அன்றும் அப்படித் தான் நாய், ஒரு அணிலை கவ்விப் பிடிக்க முயன்றது. அந்த அணில் சுவற்றில் ஏறித் தப்பிவிட்டது.

அணில் அகப்படாததால் ஏமாற்றம் அடையும் நாய், "ஏய், பயந்தாங் கொள்ளி பயலே, சுவர் மீது ஏறி தப்பிச்சுட்டியா? கீழே இறங்கிவாடா, ஒழிச்சிக் கட்டிடறேன்" என்று குரைக்கும்.

"யாரைப் பார்த்து பயந்தாங் கொள்ளின்னு சொல்றே. நீ மேலே ஏறி வா, உன் பல்லை உடைச்சி கையில் கொடுக்குறேன்" என்று நாயிடம் அணில் சொல்லும்.

இப்படியாக நாயும், அணிலும் தினம் தினம் வாய் வலிக்க சண்டை போட்டுக் கொண்டிருந்தன.

ஒரு நாள், அணில் நன்கு கனிந்த பழத்தை ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

இடையே நாயைப் பார்த்து கேலிசெய்து கொண்டே, வாலை இப்படியும் அப்படி யும் ஆட்டி குறும்பு கள்செய்து கொண்டே பழத்தை தின்றது.

பழத்தின் சுவை யிலும், நாயைக் கிண்டல் செய்வது மாக மெய்மறந்து நின்ற அணிலை, ஒரு பருந்து பறந்து வந்து பிடிக்கப் பார்த்தது. பருந்தின் நகங்கள் அணிலின் முதுகில் கீறிவிட் டது. இதைப் பார்த்துவிட்ட நாய், "லொள் லொள்" என்று குரைத்துக் கொண்டே பருந்தைப் பிடிப்பதுபோல் தாவிக் குதித்தது. உடனே பயந்துபோன பருந்து அணிலை விட்டுவிட்டு உயரமாக பறந்து வட்டமடித்தது. சுதாரித்துக் கொண்ட அணிலும் அவசரமாக ஓடி பொந்துக்குள் மறைந்து கொண்டது.

சிறிதுநேரம் கழித்து வெளியே வந்த அணில் நாய்க்கு நன்றி சொன்னது. "என்னுடன் அடிக் கடி சண்டைபோட்டாலும் ஆபத் தில் இருந்து என்னை காப்பாற்றி விட்டீர்கள், உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகி றேனோ?" என்றது அணில்.

"தம்பி, நமக்குள் போட்டி, பொறாமை, கருத்து வேறுபாடு இருந்தாலும் வேற்று ஆள் வந்து தாக்கினால் அனுமதிக்க முடியுமா? அப்படி ஒருவருக்கு ஒருவர் உதவாமல் இருந்தால் நாளை என்னையும் யாராவது வந்து தாக்கி அழித்துவிடுவார்கள். நாம் ஒரே இடத்தில் வாழும் வரை நமக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் பிரச்சினை என்று வரும்போது ஒற்றுமையாக செயற்பட வேண்டும். எதிரிக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது?" என்றது நாய்.

"அண்ணே அதனால்தான் உங்களை நன்றியுள்ள ஜீவன் என்று அனைவரும் கொண்டாடு கின்றனர்" என்றன அணில்களின் கூட்டம்.

## விடுகதைகள்

1. அக்காள் வீட்டுக்குள் தங்கை போகலாம். தங்கை வீட்டுக்குள் அக்காள் போக முடியாது – அது என்ன?
2. அச்சு இல்லாத சக்கரம், அழகுகூட்டும் சக்கரம் – அது என்ன?
3. அடிக்கடி தாவுவான் அரசியல்வாதியல்ல – அவன் யார்?
4. அரிசி போல் பூப்பூக்கும், அம்மாடி என்னும் அளவுக்கு காய் காய்க்கும் – அது என்ன?
5. வழிதோறும் அடி வாங்குகிறான், வீடு சேர்ந்ததும் கிழி வாங்குகிறான் – அவன் யார்?
6. கறுப்பன் கல்லைத்தான் அடித்தான், துடைத்தான், கடித்தான் – அது என்ன?

### விடைகள்

1. படி, உழக்கு.
2. வளையல்.
3. குரங்கு.
4. மிளகாய்.
5. தபால்.
6. மாங்காய்.

## ஒட்டகச்சிவிங்கி




ஒட்டகச்சிவிங்கி தலையை திருப்பாமலே பின்புறம் வருபவர்களை பார்க்கும் திறன் உடையது. அதன் கண்கள் அந்த அளவு சுழலும். மிருகங்களிலேயே இரத்த ஓட்ட வேகம் அதிகமுள்ள பிராணி இது. எனவே சிங்கத்தைக்கூட காலால் உதைத்தே தூரத்திவிடும். ஒட்டகச் சிவிங்கியால் ஒலியெழுப்ப முடியாது. இவை தினமும் அரைமணி நேரத்துக்கு குறைவாகவே தூங்குகின்றன.

## தேசியப் பறவை



1960ஆம் ஆண்டில் பறவையினங்கள் அழிந்துபோகாமல் தடுப்பதற்காக டோக்கியோ நகரில் பறவை பாதுகாப்புக்கான சர்வதேச கவுன்சில் கூட்டம் நடந்தது. அப்போது ஒவ்வொரு தேசமும் ஒவ்வொரு பறவையை தனது தேசியப் பறவையாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி தான் மயில் இந்தியாவின் தேசியப்பறவை ஆயிற்று.

## கண்டுபிடியுங்கள்




இங்குள்ள அப்பிள்களில் இரண்டு ஒரே அளவுள்ளவை. அந்த இரண்டு அப்பிள்கள் எவை என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## திருடனைப் பிடித்த குரங்கு

ஒரிசா மாநிலத்தில் குர்தா பகுதியைச் சேர்ந்தவர் முன்னா. இவர் ராணி என்று பெயரிட்ட குரங்கு ஒன்றை பழக்கி வைத்து வித்தை காட்டி பிழைத்து வந்தார்.

ஒரு நாள் குர்தா ரயில் நிலையத்தில் குரங்கு வித்தை காட்டி பணம் வசூலித்துக் கொண்டு இருந்தார். அப்போது ஒரு பயணிகள் ரெயில் அந்த நிலையத்திற்கு வந்தது.

ரயிலில் இருந்து ஒரு வாலிபர் சூட்கேஸ் ஒன்றுடன் வேகமாக இறங்கி ஓடினார். அவரைப்பின்தொடர்ந்து இரண்டு பேர் திருடன்... திருடன்... பிடியுங்கள்... என்று சத்தம் போட்டபடி துரத்தினார்கள். உடனே முன்னா திருடனை பிடிக்க குரங்கை ஏவினார். தாவிச் சென்ற குரங்கு அந்த திருடன் மீது பாய்ந்து விழத்தியது. பொலிஸார் வரும் வரை அந்த திருடன் நகரவிடாமல் பார்த்துக் கொண்டது.



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 05.11.2012

வர்ணம் தீட்டும் போட்டி இல. 963
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 961**

பரிசுக்குரியவர்:
எஸ்.ஷபா, ஜின்னா நகர்,
திருகோணமலை

பாராட்டுக்குரியவர்கள்

01. ரா.தேனுயா, தாளையடி வடக்கு, தாளையடி
02. அ.சுவிஜா, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
03. க.சுகன்யா, மெல்லிகொட லேன், கம்பளை.
04. த.சர்மி, கௌடான புரோட்வே, தெஹிவளை.
05. எம்.சபீனா, மருதானை, கொழும்பு -10.
06. ச.சங்கவி, வங்காலை, மன்னார்.
07. யோ.சுபாஷினி,சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
08. ரா.உஷாந்தினி,யா /ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங் கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

128

**தன்** குழுவில் நம்பிக்கையான வர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று பாபா கூறியிருந்தார்.

பாபா முஸ்தக்குவீம் என்ற பெயரைக் கேட்டாலே உத்தரப் பிரதேசத்தில் உள்ள கொள்ளைக் கோஷ்டிகளுக்கு சிம்மசொப்பனம்.

பயங்கரமான கொள்ளைக் கோஷ்டித் தலைவன் என்று வர்ணிக்கப்பட்ட பாபாவிடம் உள்ள குணங்கள்தான் ஏனைய

> **“ பயங்கரமான கொள்ளைக் கோஷ்டித் தலைவன் என்று வர்ணிக்கப்பட்ட பாபாவிடம் உள்ள குணங்கள்தான் ஏனைய கொள்ளைக் கோஷ்டிகளில் இருந்து அவரை வேறுபடுத்திக் காட்டியது. கொடுத்த வாக்கை மீறுவதில்லை. பெண்கள் விஷயத்தில் அத்துமீறி நடப்பதில்லை. ஏழைகளிடம் கொள்ளையடிப்பதில்லை. ஏனைய கோஷ்டிகள் தம்முடன் வம்பிழுக்க வந்தால் மட்டும் பதிலடி கொடுப்பது என்ற கொள்கைகளை பாபா என்றும் கைவிட்டதில்லை. ”**

கொள்ளைக் கோஷ்டிகளில் இருந்து அவரை வேறு படுத்திக் காட்டியது.

கொடுத்த வாக்கை மீறுவதில்லை. பெண்கள் விஷயத்தில் அத்துமீறி நடப்பதில்லை. ஏழைகளிடம் கொள்ளையடிப்பதில்லை. ஏனைய கோஷ்டிகள் தம்முடன் வம்பிழுக்க வந்தால் மட்டும் பதிலடி கொடுப்பது என்ற கொள்கைகளை பாபா என்றும் கைவிட்டதில்லை.

விக்ரம் மல்லாவும் தன்னைப் போன்ற கொள்கைகளுடன் இருந்ததால்தான் அவன் மீது அன்பு கொண்டிருந்தார் பாபா.

பூலானுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற மறுநாளே ஒரு காரியம் செய்தார்.

பாபா அழைப்பதாகவும், அவளுக்காகக் காத்திருப்பதாகவும் மான்சிங் வந்து பூலானிடம் தெரிவித்தான்.

அன்று காலையிலேயே எழுந்து குளித்து முடித்த அவளுக்காக மான்சிங் கொடுத்த புதிய காக்கிச் சீருடையை அணிந்து பளிச்சென்று இருந்தாள் பூலான்.

பழைய தெம்பு மறுபடி அவளிடம் வந்துவிட்டது. அவள் முகத்திலும், நின்ற தோரணையிலும் கம்பீரம் குடி கொண்டிருந்தது. தலைக்கு சிவப்புத் துணியை மடித்துக் குறுக்காகக் கட்டியிருந்தாள். கூந்தல் பறந்துகொண்டிருந்தது. சீருடை அவளுக்குப் பொருந்தியிருந்தது. புதிய பூட்சுகளும் வழங்கப்பட்டிருந்தன.

பூலானின் புதிய தோற்றத்தைப் பார்த்ததும் மான்சிங் பிரமித்தான். சீருடையை மீறிவிடுவது போல திமிறிக்கொண்டிருந்த எழில்கள் மான்சிங்கின் கண்கள் அவனை அறியாமலே தாவிச்சென்றன.

அங்கிருந்த தன் கண்களை மீட்க மான்சிங் சிரமப்பட்டான். பூலானைக் கண்டதில் இருந்து தன் மனம் அவள் மீது ஈர்க்கப்படுவதும், அவளைக் காணும் போதெல்லாம் தன் இதயம் வேகமாய் துடிப்பதுபோல உணர்வதும் மான்சிங்குக்கு விநோதமான அனுபவமாக இருந்தது.

பாபா அழைப்பதாகச் சொன்ன உடன் தன் ரைபிளையும் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள் பூலான்.

பாபா ஒரு மரத்தடியில் தனியாக அமர்ந்திருந்தார். கால்களை நீட்டிக் கொண்டு ஓய்வாக இருந்தார்.

பூலானையும், மான்சிங்கையும் கண்டதும் தன் எதிரே அமரும்படி சைகை செய்தார்.

பூலானை நோக்கிய பாபாவின் விழிகளில் சின்னதாக ஒரு வியப்புத்தோன்றி மறைந்தது. தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பாபா பேசினார்.

"ஸ்ரீராம் உன்னைக் கிராமம் கிராமமாக இழுத்துப் போனாய் என்று சொன்னாய் அல்லவா?"



என்று கேட்டுவிட்டு நிறுத்தினார்.

பூலான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். ரைபிளைத் தன் மடியில் ஒரு குழந்தை போல வைத்திருந்தாள். பாபா அடுத்துச் சொன்ன சேதி பூலானுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"அந்தக் கிராமங்களில் ஒன்றில் இன்றிரவு உன் தலைமையில் கொள்ளை நடக்கும். உன் எதிரிகளை நீ ஒழித்துக் கட்டலாம். மான்சிங் உனக்குத் துணையாக இருப்பான். என் ஆட்களில் இருபது பேர்கூட வருவார்கள்!"

தான் சொன்னதைக் கேட்டதும் பூலானின் கண்களில் தெரிந்த உணர்ச்சிகளை பாபா கவனிக்கத் தவறவில்லை.

"என் குழுவில் இருந்து உனக்கு நம்பிக்கையான ஆட்களைத் தெரிவுசெய்ய இவ்வாறான சந்தர்ப்பங்கள் உதவும்." என்றார் பாபா.

அடுத்து மான்சிங்கை நோக்கின பாபாவின் விழிகள்.

"பூலானுக்கு இன்றுமுதல் நீதான் தளபதி. பூலான்தேவியின் கட்டளைகளுக்கு நீ மதிப்புக் கொடுக்க வேண்டும் பூலான்! மான்சிங்கை நீ நம்பலாம். எதிரிகளுக்குத்தான் மான்சிங் பயங்கரமானவன். நம்பிக்கை வைத்தவர்களுக்கு இவனைப் போல ஒரு தோழன் வேறெங்கும் கிடைக்கமாட்டான்."

தன்னைப் பற்றிய பாபாவின் புகழ்ச்சியால் இருந்த இடத்திலேயே சங்கடமாக அசைந்தான் மான்சிங்.

அன்று மாலையே புறப்பட ஆயத்தமானவர்கள். புறப்பட முன்னர் அனைவரையும் அழைத்து பாபா விளக்கம் கொடுத்தார். பூலானின் ஆணைப்படி நடக்குமாறு கட்டளையிட்டார்.

"பூலான் தேவிக்கு ஜே என்று அனைவரும் தங்கள் துப்பாக்கிகளைத் தலைக்கு மேல் உயர்த்திக் கோஷமிட்டனர்.

ரைபிள் தோட்டாக்கள் அடங்கிய பட்டியை பூலானிடம் கொடுத்தார் பாபா. அதனை வாங்கித் தன் சீருடைக்கு மேலாகக் கட்டிக்கொண்டாள் பூலான்.

கைத்துப்பாக்கி ஒன்றையும் பூலானுக்குக் கொடுத்தார் பாபா. அதனை இடுப்பில் அணியக் கூடியதாக உறை ஒன்றும் வழங்கப்பட்டது.

பூலானை திருப்தியாகப் பார்த்த பாபா "போர்க்கோலம் பூண்டுவிட்டாள் பூலான்தேவி" என்றார்.

பாபாவின் உற்சாகமும், அங்கிருந்த சூழ்நிலையும் பூலானுக்குத் தன் உயிர் அணுக்கள் ஒவ்வொன்றும் உத்வேகம் கொண்டுவிட்டதைப் போல இருந்தன.

அனைவரும் புறப்பட்டனர். பாபாவின் பாதங்களைத் தொட்ட பூலானை, அவள் தலையில் தொட்டு ஆசீர்வதித்தார் பாபா முஸ்தக்குவீம்.

அன்றிரவே அவர்கள் குறிவைத்த கிராமத்துக்குச் சென்றுவிட்டார்கள்.

மல்லா இறந்ததும் பூலானை ஸ்ரீராம் கோஷ்டியினர் கொண்டு வந்த கிராமம் அதுதான்.

தன்னை அடைத்து வைத்திருந்த குடிசையைப் பூலான் தேடிச் சென்றாள். அவள் பின்னால் மான்சிங்கும், மற்றவர்களும் தொடர்ந்தனர்.

இருளில் நாய் ஒன்றைக் கோஷ்டியில் உள்ள யாரோ மிதித்துவிட, அது வீல் என்று அலறிக் கொண்டு ஓடி, குரைக்கத் தொடங்கியது.

தொடர்ந்து நாய்கள் குரைக்கத் தொடங்க, அந்தக் கிராமத்தில் நடக்கப் போகும் விபரீதத்தை முன்னறிவிப்புச் செய்வது போல இருந்தது.

**திருப்பங்கள் தொடரும்...**

## மருத்துவம்


**ஒரு** மனிதன், தான் வாழும் இந்த ஜென்மத்தில் செய்யக்கூடிய மிக மிக உயர்ந்த காரியம் என்ன தெரியுமா? உடல் உறுப்புதானம்யூ ஆனால் போதிய விழிப்புணர்வு இல்லாமல், இந்த புண்ணிய காரியத்தை பலரும் செய்வதில்லை.

மரணம் அனைவருக்கும் பொதுவானது. எல்லோரும் இறுதியில் அந்தப் பாதையில் பயணித்துதான் ஆகவேண்டும். அப்போது, பொன்போல் உடலில் பாதுகாத்து வைத்திருக்கும் முக்கிய உறுப்புகளை மண்ணுக்குள் புதைக்காமல், ஆஸ்பத்திரிகளில் சில உறுப்புகளின் செயலிழப்பால் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு வழங்கி, அவர்கள் மூலம் நிலைத்து வாழ்வது. உடல் உறுப்பு தானத்தின் உன்னதம்.

ஒவ்வொரு நாளும் விபத்தில் சிக்கியோ, நோயால் பாதித்தோ ஆயிரக்கணக்கான மனிதர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் நல்ல உறுப்புகளோடு மூளைச்சாவு நிலைக்கு போய் மரணத்தை தழுவுகிறார்கள். அந்த நல்ல உறுப்புகளை, பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடுகிறவர்களுக்கு சரியான நேரத்தில் வழங்கினால் (மரணமடைகிறவர்களின் உறுப்புகளால்) உயிருக்கு போராடுகிறவர்கள் பிழைத்துக்கொள்வார்கள். வெகுகாலம் வாழவும் செய்வார்கள்.

பிரியமான ஒருவர் மூளைச்சாவு அடைந்து, மரணத்தை தழுவிக் கொண்டிருக்கும் நேரத்தில், அவரது குடும்பத்தினரிடம் போய் உடல் உறுப்பு தானம் பற்றி பேசுவது மிகக் கஷ்டமான அனுபவமாக இருக்கும் என்பது உண்மைதான். ஆனால் அதைப்பற்றி பேசி, உண்மையை புரியவைத்து, சரியான நேரத்தில் அவரது உறுப்பை தானமாக பெற்றுவிட்டால், மரணமடையப்போகும் அவரைப்பற்றி தலைமுறை தலைமுறையாக பெருமையாக பேசிக் கொண்டிருக்கலாமே அவர் இறந்த பின்பும் பலரிடம் உறுப்புகள் மூலம் வாழ்ந்து, இறவாப் புகழ் பெற்றிருப்பதை நினைத்து காலங்காலமாக மகிழலாமே அதனால்தான் மூளைச்சாவு அடைந்தவர்களின் உறுப்புகளை தானம் செய்யும் குடும்ப உறுப்பினர்கள் அதிகரித்து வருகிறார்கள். அந்த உறுப்புகள் பொருத்தப்பட்டு பலர் உயிர் பிழைக்கிறார்கள். ஒருவரிடமிருந்து உடல் உறுப்புகளை தானமாகப் பெற அவர் மூளைச்சாவு அடைந்திருக்கவேண்டும் என்கிறது சட்டம்.

# உடல் உறுப்புத்தானம் ஏன்? எதற்கு? எப்படி?



### மூளைச்சாவு என்பது என்ன?

✤ மூளைச்சாவு அடைந்தவர்கள் உடலில் சலனமே இருக்காது. மிக பயங்கரமான வலியைக்கூட அவர்களால் உணரமுடியாது. முழுமையாக தசை அசைவற்ற நிலையில் காணப்படுவார்கள்.

✤ கண்களில் பார்வைத்திறன், அசைவுத்திறன், செயல்திறன் போன்றவை முழுமையாக முடங்கிப்போயிருக்கும்.

✤ அவர்களால் இயற்கையாக சுவாசிக்க முடியாது. அதனால் செயற்கை சுவாசத்தில் இயங்கிக் கொண்டிருப்பார்கள்.

ஒருவர் மூளைச்சாவு அடைந்துவிட்டார் என்பதை உறுதிசெய்ய நிறைய விதிமுறைகள் உள்ளன. அவர் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிக்கு வெளியே உள்ள நான்கு டாக்டர்கள் அடங்கிய குழு அவரை பரிசோதிக்கும். அந்த குழுவில் நரம்பியல் நிபுணரும், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரும் இருக்கவேண்டும். நோயாளியிடம் எட்டுவிதமான பரிசோதனைகளை இரண்டு கட்டமாக நடத்தி அவர் மூளைச்சாவு அடைந்திருப்பதை உறுதி செய்வார்கள்.

மூளைச்சாவு அடைந்த ஒருவரிடம் இருந்து 10 விதமான உறுப்புகளை எடுத்து, மற்றவர்களுக்கு பயன்படுத்தலாம். அவை கண்கள் (கார்ணியா), நுரையீரல், இதயம் மற்றும் வால்வுகள், ஈரல், கிட்னிகள், குடல், சருமம், எலும்பு போன்றவை.

ஒருவர் மூளைச்சாவு அடைந்தாலும் அவரது இதயம் தனது செயற்பாட்டை நிறுத்தாது. அதனால் இரத்த ஓட்டம் இருந்து கொண்டே இருக்கும். ஆகவே உடல் உறுப்புகளில் பாதிப்பு ஏற்படாது. அந்த சூழலில்தான் அவரது உறுப்புகளை, சட்ட முறைப்படி, இரத்த சம்பந்தமுள்ள உறவினர்களின் ஒப்புதலோடு எடுக்கிறார்கள். எடுப்பதும், தேவைப்படுகிறவருக்கு பொருத்துவதும் மிக நுட்பமான, முக்கியத்துவம் வாய்ந்த சேவையாகும்.

மாற்று அறுவைச் சிகிச்சைக்குத் தேவைப்படும் உறுப்புக்கள் கிடைக்காமல் இறப்பவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது.

ஒருசில உறுப்புகளின் செயற்பாடு சரி இல்லாமல் மரணமடையும் நோயாளிகளின் எண்ணிக்கையை வெகுவாக குறைத்துவிடலாம்.

மூளைச்சாவை எட்டியவர்களிடம் இருந்து மட்டுமே உறுப்புகள் தானம் பெறமுடியும் என்பதில்லை. உயிரோடு இருப்பவர்களும் கிட்னி, ஈரல் போன்ற குறிப்பிட்ட உறுப்புகளை தானம் செய்யலாம். அப்படி தானம் செய்யும்போது தனது ஆரோக்கியம் பாதிக்கப்படும் என்றும், வாழும் மீதிகாலம் முழுவதும் மருந்து சாப்பிடவேண்டும் என்றும் தானம் செய்பவர்கள் நினைப்பது சரியில்லை. அவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஓய்வும், குறிப்பிட்ட காலத்திற்கு பரிசோதனைகளும் மட்டுமே அவசியமாகும்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி)



அன்னம்



புத்தகம்



# ஏழுமலையானுக்கு அழகு தமிழில் திருப் பாடல்


திருப்பதிக்கு அதிக எண்ணிக்கையில் வருகை தரும் தமிழக பக்தர்களை கௌரவிக்கும்விதமாக திருப்பதி தேவஸ்தானம் அமைப்பு பிரம்மோஸ்தவப் பாடல்களை அழகு தமிழில் வெளியிட்டுள்ளது. இந்நிலையில் திரை யுலகின் மூத்த கவிஞர் வாலி எழுதிய முத்தான பத்து பக்திப் பரவசமூட்டும் பாடல்களுக்கு அற்புதமாக இசையமைத்திருக்கிறார் வித்யாசாகர்.

திருப்பதி தேவஸ்தான அமைப்பின் தலைவர் ஆனந்த குமார் ரெட்டி தலைமையிலான உறுப்பினர்களின் முயற்சியில் உருவான பிரமாண்ட நாயகனின் பிரம்மோஸ்தவம் என்கிற தமிழ்ப் பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டினைத் தமிழக ஆளுநர் கே.ரோசையா சென்னை தியாகராய நகரில் அமைந்துள்ள திருப்பதி கோவிலில் வைத்து வெளியிட்டார்.

# மரணம்

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

த்ரிஷா சினிமாவில் நடிக்க தொடங்கியதும், மிஸ் சென்னை பட்டம் பெற்றதும், பின்னர் பிரபல நடிகை யா-னதும் இவர்கள் வாழ்க்கை தனித்தனி என்றானது. கிருஷ்ணன் சென்னையில் உள்ள ஹோட்டல்களில் வேலை பார்த்து அங்கே தங்கியிருந்து வந்தார். சில ஆண்டுகளுக்கு முன்புதான் ஐதராபாத்துக்கு சென்று பணியாற்றினார். பிறந்த நாளுக்கு அப்பாவிடம் வாழ்த்து பெறுவதும், எப்போதாவது அவரை சென்று சந்திப்பதும்தான் அப்பா மகளுக்குமான உறவாக இருந்தது. த்ரிஷா நடிகையாகி பெரிய கோடீஸ் வரி ஆன பின்னரும்கூட கிருஷ் ணன் மாதசம்பளத்தில் பணியாற்றி தன் சொந்த உழைப்பிலேயே வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



அஜந்தா

# பிடித்த கதைகளில் நடிக்கும் நம்பீஷன்

குள்ளநரிக்கூட்டம் நாயகி ரம்யா நம்பீசன், தமிழில் சுவாரஷ்யமான கதைகளில் நடிக்க விரும்புவதாக கூறியுள்ளார்.

சுவாரஷ்யமான கதைகளில், என் நடிப்பு திறமைக்கு தீனிபோடுகிற கதாபாத்திரங்களில் நடிக்க விரும்பினேன். இயக்குநர் கார்த்திக் சுப்பாராஜ் சொன்ன கதை, திரைக்கதை பிடித்ததால் 'பீட்சா'வில் நான் நடித்தேன். இதில் கொமெடி, அக்சன், த்ரில், ரொமான்ஸ் எல்லாம் இருக்கும் என்கிறார் 'பீட்சா' நாயகி ரம்யா நம்பீஷன்.

# ஷங்கருக்கு பிடித்த பவர் ஸ்டார்

இயக்குனர் ஷங்கர் தன்னுடைய ரசிகர் என்றும் தன் படங்களை விரும்பிப் பார்ப்பார் எனவும் பவர் ஸ்டார் சீனவாசன் கூறியுள்ளார்.

தமிழில் 'கண்ணா லட்டு தின்ன ஆசையா' படத்தில் காமெடி ஸ்டார் சந்தானத்துடன் டொக்டர் சீனிவாசன் நடிக்கிறார். பிரமாண்ட பட இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம், எமி, சந்தானம் ஆகியோருடன் 'ஐ' படத்திலும் நடிக்கிறார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது, இயக்குநர் ஷங்கர் என்னோட பெரிய ரசிகர். என் படங்களை அவர் விரும்பி ரசித்துள்ளார். இந்த 'ஐ' படத்தில் நானும் சந்தானமும் இணைந்து காமெடி பண்றோம்.

படப்பிடிப்பில் ஷங்கர் எனக்கு உதவி செய்து, உற்சாகப்படுத்தினார். அடுத்தகட்ட படப்பிடிப்பில் ஷங்கர் சாரின் 'ஐ' படக்குழுவுடன் இணைகிறேன் என்று டொக்டர் சீனிவாசன் கூறியுள்ளார்.


# பழையய...
# விரு...

JFW Divas of S...
விழா சென்னை ...
நடைபெற்றது. இவ்விழா...
தொகுத்து வழங்கினர். ...
சந்திராவின் நடனம் ரசி...
இவ்விழாவில் 1980 ...
மணிரத்னம், நதியா, ரே...
விருதுகள் வழங்கி கெ...
விருதினை வழங்கிய இ...
புன்னகை மன்னன் பட...
குறித்து வெகுவாக பார...
முன்னணி கதாநாயகி...
சிம்ரனுக்கு விருதினை ...
அனுபவங்களை பகிர்ந்த...
இதேபோன்று திரையு...
நயன்தாரா, சினேகா, ஸ்...
மோத்வானி, அஞ்சலி ம...
வழங்கப்பட்டது.

# ரஜினி ரூபத்தி...

ரஜினி ரூபத்தில் விஜய்யை பார்க்கிறேன் என்று மனம் நெகிழ்ந்து போயுள்ளார் தயாரிப்பாளர் எஸ்.தா... பிரமாண்டங்களுக்கு முதலில் பேசப்படும் பெயர் தயா... எஸ்.தாணு. யார் படத்தில் தொடங்கி இப்போ... வெளிவர இருக்கும் துப்பாக்கி வரை ... பிரமாண்டம் தொடர்கிறது.

ஆனால் இவருக்கும் இடையில்... சறுக்கல்கள் வந்தன. இருந்தும் ... எல்லாம் முறியடித்து இப்போது... இடைவெளிக்கு பிறகு துப்பா... மூலம் களம் இறங்கி இருக்கி... துப்பாக்கி படத்தை பற்றி ... செய்திகள் வந்தாலும், ... நடித்த விஜய் ... அவர் செய்த ... உதவியை ... தான் இன்றை... கோடம்பாக்கம்... முழுவதும் ஒலி... கொண்டு இருக்கிற...



புவனக்காடு









# முட்டி மோதின நட்சத்திரங்கள்

இந்தியின் முன்னணி நடிகைகளான பிரியங்கா, கத்ரினாவுக்கு இடையே திடீரென மோதல் ஏற்பட்டுள்ளது. அலி அப்பாஸ் ஜாபர் இயக்கும் இந்தி படம் குண்டே. அர்ஜுன் கபூர், ரன்வீர் சிங் கதாநாயகர்களாக நடிக்கின்றனர்.

இதில் கதாநாயகியாக நடிப்பது யார் என்பதில் போட்டி ஏற்பட்டது. முதலில் இக்கதையை கத்ரினாவிடம் இயக்குநர் சொன்னார்.

கதை கேட்டு பிடித்துவிடவே கால்ஷீட் பற்றி பிறகு பேசலாம் என்று கத்ரினா கூறி இருந்தார். குறிப்பிட்ட மாதங்களில் கால்ஷீட் வேண்டும் என்று இயக்குநர் கேட்டார்.

ஆனால் அப்போது ஹிருத்திக் ரோஷன் படத்திற்காக கால்ஷீட் ஒதுக்கி கொடுத்திருப்பதாக கத்ரினா கூறவே, மௌனமாக திரும்பிய அலி அப்பாஸ் நேராக பிரியங்கா சோப்ராவிடம் சென்று கதை கூறினார்.

அவருக்கு கதை பிடித்துவிடவே உடனடியாக கால்ஷீட்டையும் கொடுத்துவிட்டார். அத்துடன், இப்படத்தில் நடிக்க முதலில் என்னைத்தான் இயக்குனர் கேட்டிருந்தார். ஆனால் கால்ஷீட் பிரச்சினை இருந்ததால் உடனடியாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. தற்போது அதை சரி செய்துவிட்டேன் என்று கூறினார் பிரியங்கா.

இதைக்கேட்டு கோபம் அடைந்த கத்ரினா, குண்டே படத்தில் நடிக்க முதலில் என்னிடம் தான் இயக்குநர் கேட்டார். என்னால் கால்ஷீட் ஒதுக்கித்தர முடியாததால் அதில் நடிக்கவில்லை. ஆனால் தன்னிடம் தான் முதலில் கதையை சொன்னது போல் வேறு கதாநாயகி (பிரியங்கா) சொல்கிறார். அதை ஏற்க முடியாது என பதிலடி தந்துள்ளார்.



## நிபந்தனைகளை நிரைப்படுத்தும் நடிகை ஓவியா

நடிகர் விமலுக்கு ஜோடியாக களவாணி படத்தில் அறிமுகமான ஓவியா, பள்ளி மாணவி வேடம் ஏற்றிருந்தார். இதையடுத்து சில்லுனு ஒரு சந்திப்பு என்ற படத்தில் மீண்டும் விமல் ஜோடியாகவும், பள்ளி மாணவியாகவும் நடிக்கிறார்.

இதுபற்றி அவர் கூறுகையில், தமிழில் ஒரு கதாபாத்திரத்தில் நடித்து ஹிட்டானால் தொடர்ந்து அதே வேடங்கள் வருவது வழக்கம். களவாணியில் மாணவி வேடம் ஹிட்டானதையடுத்து அடுத்தடுத்த படங்களில் அதேபோன்று நிறைய வேடங்கள் வருகிறது. ஆனால் அது எனக்கு போர் அடிக்கவில்லை.

ஆனால் இந்த வேடத்தோடு நின்றுவிடமாட்டேன். கவர்ச்சியாக நடித்த கலகலப்பு படமும் எனக்கு பேர் பெற்றுத்தந்தது. கவர்ச்சி வேடங்களிலும் தொடர்ந்து நடிப்பேன். அதேபோன்று இரண்டு கதாநாயகிகள் படத்தில் நடிக்க மாட்டேன் என்றும் அடம் பிடிக்கமாட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

## ...ழயவர்களை மறக்காத ...ருது விழா

...s of South இன் ஐந்தாவது ஆண்டு
...னை டிரேட் சென்டரில் கோலாகலமாக
...விழாவை நடிகர் மாதவன் மற்றும் ஆர்யா
...னர். விழாவின் தொடக்க நிகழ்வான நீது
...ம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.
... 1980 களின் கதாநாயகிகளான சுஹாசினி
...ா, ரேவதி, பானுப்ரியா மற்றும் ராதாவுக்கு
... கௌரவிக்கப்பட்டது. நாயகி ரேவதிக்கு
...ிய இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர்,
... படத்தில் அவருடைய நடிப்பு திறமை
...் பாராட்டினார்.
...நாயகிகளில் ஒருவராக திகழ்ந்த
...னை வழங்கிய வசந்த், நேருக்கு நேர் பட
...கிர்ந்துகொண்டார்.
...ிரையுலகின் முன்னணி நாயகிகளான
...ா, ஸ்ரேயா சரண், ஹன்சிகா
...லி மற்றும் அமலாபாலுக்கும் விருதுகள்

## வெளி வந்துவிட்டது ஆதலால் காதல் செய்வீர் இசை

நல்லு ஸ்டுடியோஸ் சார்பாக 'ஆதலால் காதல் செய்வீர்' படத்தை இயக்கி, சுசீந்திரன் தயாரித்துள்ளார். இதில் அறிமுக நாயகன் சந்தோஷ், ஒளிப்பதிவாளர் சூர்யா, எடிட்டர் ஆண்டனி மற்றும் பல தொழில்நுட்பக்கலைஞர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

ஆதலால் காதல் செய்வீர் படத்தின் இசை வெளியீட்டு விழா, சென்னை சத்யம் சினிமாஸில் நடந்தது. யுவன் ஷங்கர் ராஜா இசையில், பாடல்களை கவிஞர்கள் வாலி, யுகபாரதி, பிரான்சிஸ் கிருபா எழுதியுள்ளார்கள்.

இயக்குநர் சுசீந்திரன் படத்தின் பாடலை சிறப்பாக உருவாக்கியிருப்பதாக ரவி.கே.சந்திரன், ராஜீவ் மேனன், பிரபு சாலமன், அமீர், சமுத்திரக்கனி, சசி-குமார், ஸ்ரீபாலாஜி, எஸ்.ஆர்.பிரபாகரன், ஷங்கர்தயாள், எழில், ராஜேஷ், எம், வெற்றிமாறன், கார்த்தி, லிங்குசாமி, கரு.பழனியப்பன், பார்த்திபன், பாண்டிராஜ், சிம்புதேவன், சற்குணம், அப்புக்குட்டி, விஷ்ணு, ஞானி, ராஜீவன் மற்றும் பலர் பாராட்டி பேசினர்.

ஆதலால் காதல் செய்வீர் படத்தின் இசைக் குறுந்தகடை தமிழ் சினி மாவின் 'வெள்ளிவிழா நாயகன்' மோகன் வெளியிட, கோலிவூட் பிரபலங்கள் பெற்றுக் கொண்டனர்.

## ...ில் விஜய்

...று
...ஸ்.தாணு.
... தயாரிப்பாளர்
...இப்போது
...வரை அவரது

...டயில் சில
...ந்தும் அதை
...போது நீண்ட
...ுப்பாக்கி படம்
...இருக்கிறார்.
... பற்றி பல
...லும், அதில்
...ஜய் பற்றியும்,
...செய்த
...யை பற்றி
...இன்றைய
...ாக்கம்
... ஒலித்து
...க்கிறது.

துப்பாக்கி படம் தொடங்கிய பிறகு தாணு அவர்களுக்கு நிதி நெருக்கடி வந்ததாம். தாணுவின் நிலையை புரிந்து கொண்டு அவரை வரவழைத்து ரூபாய் எதுவும் நிரப்பப்படாத காசோலை ஒன்றை கொடுத்து எவ்வளவு வேண்டுமோ எடுத்து கொள்ளுங்கள் என்றாராம். இதை சற்றும் எதிர்பார்க்கவில்லையாம் தாணு.

இதுப்பற்றி தாணுவிடம் கேட்டபோது, சிவாஜி படத்தில் ரஜினி நடித்தபோது வெறும் ஆயிரம் ரூபாய் மட்டுமே வாங்கி கொண்டு நடித்தார். படம் வெளிவந்து வெற்றி பெற்ற பிறகுதான் தனக்குரிய சம்பளத்தை பெற்றுக்கொண்டார்.

அந்தளவுக்கு ஒரு தயாரிப்பாளரின் கஷ்டத்தை உணர்ந்தவர் ரஜினி. அவருக்கு பிறகு விஜய்யிடம் அந்த மனப்பாங்கு இருக்கிறது என்று மனம் நெகிழ்ந்து போனாராம்.



# தேன் கிண்ணம்

## ஈழத்துக் கவிஞர்கள்

### மேமன் கவி

(அப்துல் கரீம் அப்துல் ரஸாக் ஏப்ரல் 29,1957)

வடஇந்திய குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த மேமன் சமூத்தில் பிறந்து ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கிய உலகில் தன்னை படைப்பாளியாக அடையாளப்படுத்திக் கொண்டவர்.

இவரது முதலாவது கவிதை 1974 ஆம் ஆண்டு சுதந்திரன் இதழில் தமிழே என் மூச்சு எனும் தலைப்பில் வெளிவந்தது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் ஆரம்பத்திலிருந்து தொடர்புகளைப் பேணி வருகிறார். 1990 ஆம் ஆண்டுக்கான இலங்கை சாகித்திய மண்டல பரிசை இவரது நாளையை நோக்கிய இன்றில் கவிதைத் தொகுதிக்காகப் பெற்றார்.

பல சஞ்சிகைகளுக்கு ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றி இருக்கிறார். இவரது கவிதைகள் சில ஆங்கிலம், சிங்களம், ரஷ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

யுகராகங்கள் (1976, எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம்)
ஹிரோசிமாவின் ஹீரோக்கள்
(1982 நர்மதா பதிப்பகம், தமிழ்நாடு)
இயந்திர சூரியன்
(198.1 ஆம் ஆண்டு நர்மதா பதிப்பகம், தமிழ்நாடு)
நாளையை நோக்கிய இன்றில்
(1990, நர்மதா பதிப்பகம், தமிழ்நாடு)
மீண்டும் வசிப்பதற்காக
( 1999 மல்லிகைப் பந்தல்)
உனக்கு எதிரான வன்முறை
(2005 துரைவி வெளியீடு)

இவரது கவிதைகளில் ஒன்று

### இப்பொழுதே சொல்!

இப்பொழுது சொல்,
உன்னில் இன்னும் நிலவும்
ஆதிக்கத்தை நான் அறிவேன்!
என்னில் புதைந்து கிடக்கிறாய் நீ!
போதை வஸ்துவில் மூழ்கிப்போன
ஒருமூளையின் சடலமாய், என் சகல உறுப்புக்களலான
உன்மீதான எனது அராஜகம்தான்
எனது கம்பீரம் எனும் உணர்வை
என் வேருக்குக் கர்வம் தருகின்றது.

நீ சிதையத்தான் வேண்டும்!
நீ சிதையத்தான் வேண்டும்!

என் ஆத்மாவின் நாவில் சுரக்கும்
தான் வெறிக்கான சகல நிவாரணி
உன் சிதைவுகள்.

நீ என்னை வக்கிரத்தின் பிரதிநிதி எனச் சொல்லலாம்
நீ என்னை சதை வெறியின் சங்கீதமெனச் சொல்லலாம்
எனக்கு என் தணிப்பின் மீது மட்டுமே ஆர்வம்.

என் சரீரத்தில் உன் சுவாசம் கூட உயிர்ப்புடன் இல்லை.
என்பது புரியும் எனக்கு.

எந்தவொரு தடுப்புச் சுவராலும்
தடுக்க முடியாத இந்த உணர்ச்சி போரில்
இறுதி வெற்றி
என் பக்கம் என்பது உனக்கு மறக்க முடியாத
ஒரு கால பாடமாய் இருக்கிறது இல்லையா?

நீ வீரத்தால் பிதுங்கி நிற்பது போலான
ஒரு மாய வலையை என்மீது வீசிய
வரலாற்றின் ஆதிக்கக் கரங்கள்
என்னை பிளந்துவிட்டன.
அந்தப் பிளவில் நிகழப்போகும்
உன் வீரிய வீழ்ச்சியின்
வருகையை அறியாமல்...

இப்பொழுது சொல்,
யாரை யார் ஆள்கிறார்கள்?
யாரை யார் சுரண்டுகிறார்கள்?
யாரில் யார் வீழ்கின்றார்கள்? இப்பொழுதே சொல்!

வேலணையூர் தாஸ்



## கொடுத்து வைத்தவள்


கட்டிய கணவனே – நல்ல
காதலனாக...
கருணை அன்பில் – ஒரு
சேவகனாக...
கண்ணுக்கு இமைபோல் – ஒரு
காவலனாக
இனிமையின் வண்ணம்
இதயத்தில் – இருக்கை,
இது அவள் இதயத்தின்
சின்னம்...
பண்பு நடை பட்டு
உடை போல்...
நட்புடமை இறைமை
ஈவிரக்கத் தாபரிப்பு...
இல்லமதில் – சற்று
இல்லான் அவன்
என்றால் இல்லாள்
அவள் இதயத் தவிப்பு...
நல்ல ஒருவனுக்கு
வாழ்க்கைப்பட்ட
அவளுக்கு இல்லாமை
ஏதும் இல்லை!
எல்லாமே அவன்தான்!
இவ்விதம் – ஒரு
வரன் கிடைக்க
அவள் கொடுத்து
வைத்தவள்.

பாண்டியூர் – பொன்நவநீதன்.

## காதல்

நினைக்க நினைக்க
இனிக்கும்
நினைவில் வந்து
மயக்கும்
நித்திரையில் கூட
கனவில் வந்து
கலங்கும்
அதுதான் காதல்!

சேனையூரன்
மூதூர் கிழக்கு.



## நான்

மறந்து சென்றவளே...
அன்று நீசொன்ன
மனசு மறக்காத
ஈரவார்த்தைகளை
இதயமுள்ளவளாய் உன்னை
நினைத்து ஞாபகப்படுத்திக்
கொள்கின்றேன்..!

நீ... அடிக்கடி
என்னிடம் கேட்டுக்கொள்வாய்.
என்னை ஏமாற்றி
விடாதீங்க என்று..!

சரியென்று கத்திய
வார்த்தையை தவிர...
வேறு எதுவுமே உன்னிடம்
நான் கூறியதில்லை..!

உன்னில் நான்கொண்ட
உயர்வான நம்பிக்கையில்தான்
நான் உன்னிடம்
ஏதுமே கேட்டதில்லை..!

கேட்கவில்லை என்ற
காரணத்தினாலோ...
மற்றவர்கள் என்னை
கேலி செய்யும்படி செய்துவிட்டு...
மாற்றானோடு மாலை
மாற்றிக்கொண்டாய்..!
இதுவரை எதுவும்
தெரியாதவனாய் புரியாதவனாய்...

இருள் சூழ்ந்த ஒரு
மரணப் போராட்ட போர்வைக்குள்
நான்..!

கிண்ணியா
ரிஸ்வான்.

## நீ கசக்கிப் போட்ட தூக்கம்

மூடியே தான் கிடக்கிறது
மனத்திரை
தூக்குக் கைதி
ஒருவரின்
கடைசி இரவின் மௌனம் போல
தூங்காமல் கிடக்கிறது இதயம்.

கொலுசுகளால் காற்றுக்கு
இசையமைத்தவளே
இமைச் சவுக்குகளாய்
அடிப்பவளே போ...!
மூடியேதான் கிடக்கிறது
உன் மனத்திரை.

நடைமுறைகளை
சலவைக்கு அனுப்பியவளே!
துணைகளை
சிறை செய்தவளே!
தனிமையின் விமோசனம்
பறித்தவளே!
போ....

உன் ஆடைகளிலிருந்து
நழுவும் சுாயத்தில்
தொலைந்தது கனவு
வெறித்த விழிகள்
இமைக்கையில்
கலைந்தது வாழ்க்கை
தொடரட்டும்
நட்சத்திரங்கள் முளைக்காத
இருண்ட வானோடு
காலமும் வாழ்க்கையும்!

எம்.நேதா
நெடுந்தீவு – 12

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 06



# சிங்கை மைந்தன் 09
## அமரசிம்மன்

துறைமுகத்திலிருந்து பிரயாணிகள் செல்லும் பாதை போக்குவரத்து நிறுத்தப்பட்டு அமைதியுடன் காட்சியளிக்க, அரண்மனையிலிருந்து வந்த ரதம் சேர நாட்டு மரக்கலம் நின்ற மேடையருகே சென்று நின்றது. வானத்திலிருந்து வானதேவதை ஒன்று இறங்கிவருவது போன்று கடற்காற்றில் பூந்துகில் பறந்தாட மெல்லமெல்ல படிகளின்றும் இறங்கி ரதம்நோக்கி வந்தாள் ஓர் பாவை. அவளுடன் வந்த தோழிகளும் அவளுடன் ரதத்தில் ஏறிக்கொண்டதும் காவல் வீரர்கள் புடைசூழ அரண்மனை நோக்கிச் சென்றது ரதம்.

அரண்மனைக் கோட்டை வாசல் அலங்கரிக்கப்பட்டு இளவரசிவரும் செய்தியை அறிவிக்கும் பொருட்டு ஒலி எழுப்பபேரிகைகள் முழங்கின.

அரண்மனை வாசலில் மன்னன் குணவீரசிங்கை ஆரியனும் பட்டமகிழி சுந்தரவல்லி நாச்சியாரும் இளவரசியை வரவேற்க ஆயத்தமாக வந்து நின்றிருந்தனர். மங்கள வாத்தியங்கள் இசைத்து மலர் மாரி பொழிய இளவரசி மதுர வல்லி ரதத்திலிருந்து இறங்கி சித்திரப் பொற்தேர் போன்று அசைந்து வந்துகொண்டிருந் தாள். இருமருங்கிலும் தோழியரும் பணிப் பெண் களும் அவளுடன் நேராக வராது பின்தங்கி வந்து கொண்டிருந்தனர். அந்த மாபெரும் வரவேற்பில் இளவரசி மெய்மறந்து வந்து கொண்டிருந்தாள்.

" சிங்கை நகருக்கு வருகை தந்திருக்கும் இளவரசியாரை எனது நாட்டு மக்கள் சார்பில் வரவேற்பதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்" என்று குணவீரசிங்கை ஆரிய மன்னன் வரவேற்ற தும் பேரிகைகள் முழங்க வாழ்த்தொலிகள் அரண் மனையே அதிரும் வண்ணம் ஒலித்தன.

பணிப்பெண்கள் ஆராத்தித் தட்டுடன் வந்தனர். பட்டமகிழி சுந்தரவல்லி நாச்சியாரே தட்டைப் பெற்று ஆராத்தி எடுத் தார். இளவரசி மன்னரதும், பட்டமகிழியதும் பாதங்களைத் தொட்டு வணங்கி "என்னை ஆசீர்வதியுங்கள்" என்றாள்.

அவளைத் தூக்கி நிறுத்தி மார்புடன் அணைத்த சுந்தர வல்லி நர்ச்சியார் உணர்ச்சிப் பெருக்கால் ஆனந்தக் கண்ணீர் மல்க "மகளே சகல சௌபாக்கியங்களும் பெற்றுச் சிறப்புடன் வாழ வல்லிபுரநாதர் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்." என்று ஆசீர்வதித்தார்.

"பிரயாணம் எப்படியம்மா. வழியில் பிரச்சினை எதுவும் இல்லையே" என்றார் மன்னர்.

" தாங்கள் இருக்கும்போது வழிப்பயணத்தில் எதுவித பிரச்சினையும் இல்லை என்று தந்தையார் கூறித்தான் வழியனுப்பி வைத்தார்" என்றாள் தேமதுரக் குரலில்.

"இன்று ஓய்வு எடுத்துக்கொள் மகளே! மிகுதியைப் பின்பு பேசலாம்" என்று அவளை உள்ளே அழைத் துச் சென்றாள் பட்டமகிழி.

"அமைச்சரே! தளபதி அமரசிம்மன் எங்கே? உப தளபதிகள்தானே இளவரசியை அழைத்து வந்தார்க்கள்" என்று பெரிய உடையாரைப் பார்த்துக் கேட்டான் மன்னன்.

"ஏதோ அவசர வேலைகள் இருப்பதாகக் கூறிச்சென்றான். என்ன வேலை என்று எதுவும் கூறவில்லை." என்றார் அமைச்சர்.

அந்தி மாலையில் மன்னரிடம் தளபதி அமரசிம்மன் மறுநாட் காலையில் நடக்கப் போகும் நிகழ்வு பற்றி உரையாடிக் கொண்டிருந் தான். அதேசமயம் அங்கே வந்த சேரநாட்டு இளவரசி அமரசிம்மனைப் பார்த்ததும் தயங்கி நின்றாள்.

"இளவரசி ஏன் அங்கே நின்று விட்டீர்கள்? இங்கே வரலாமே" என்றார் மன்னர்.

"தாங்கள் அரசியல் விடயமாக உரையாடுவதாகத் தெரிகின்றது. சந்தர்ப்பம் தெரியாமல் வந்து விட்டேன்" என்றாள்.

இந்த விடயம் தாங்கள் நாட்டுடன் தொடர்புடையதுதான். கடற்கொள்ளைக்காரன் கரடியனு டைய உபதலைவன் கொஞ்சம் முரண்டு பண்ணுகின்றான். அதுபற்றித்தான் தளபதி கூறிக்கொண்டிருக்கின்றார்."

"வணக்கம்! இளவரசி" என்று தலை தாழ்த்தி வணங்கினான் தளபதி அமரசிம்மன்.

"வணக்கம்! இவர்தான்....?" என்று மன்னரைப் பார்த்தாள்.

"இவன்தான் தளபதி அமரசிம்மன்" என்று அறிமுகம் செய்து வைத்தார் மன்னர்.

"தந்தையார் இவரைப் புற்றி மிகப் பெருமையாகக் கூறுவார். அமரசிம்மன் இல்லாவிட்டால் எங்கள் நாட்டு வணிக்கக் கலங்கள் யாவும் துறைமுகத்தில் முடங்கிக் கிடக்க வேண்டியதுதான் என்று கூறியதுடன் அவருக்காகத் தனியான வெகுமதியும் அனுப்பி யுள்ளார்" என்று கூறிப் புன்ன கையுடன் அவனை நோக்கினாள் இளவரசி.

***

கடமையில் ஓர் கண்ணி யம், கட்டுப்பாட்டுடன் செயற் படுபவர்களால் மற்றவர்களின் முகத் துதியையோ, பாராட்டுக்களையோ ஜீரணிக்கவும், ஏற்றுச் சந்தோஷ ப்படவும் முடிவதில்லை. ஒருவன் தான் செய்யும் கடமையில் கிடைக்கும் வெற்றியைக் கொண்டு ஏதாவது பலனைக் குறிக்கோளாக அடைய நினைத்திருந்தால் சில சமயம், பாராட்டுக்களும், வெகுமதிகளும் அவனை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருக்கும். தான் செய்த கடமையில் சந்தர்ப்ப சூழ்நிலை தோல்விக்கு இடமளித்திருந்தால் பாராட்டுக்குப் பதில் ஏளனமும், வெகுமதிக்குப் பதில் கண்டனமும் ஏன் தண்டனையும்கூட கிடைக்கலாம் என நினைப்பவர்களால் வெற்றியும் தோல்வியும் ஒன்றுதான் என நினைத்துக் கொள்ளவே செய்யும். அப்படிப்பட்ட சிந்தனைகளின் சொந்தக்காரனான அமரசிம்மன் சேர இளவரசியின் புகழ் மொழிகளில் தன்னையோ, தன் நிதானத் தையோ இழக்காமல் 'நன்றி இளவரசி' என்று கூறி விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

அவனுடைய அந்தச் செயல் இளவரசியின் மனதில் விழுந்த ஓர் அடியாகவே இருந்தது. மதுர வல்லியின் அழகும் அறிவும், அவளுக்கிருந்த ஆற்றலும் அரசியல் வட்டாரங்களில் பிரசித்தி பெற்றிருந்தது. சேர நாட்டின் பெண்களின் அழகுக்கு மயங்காதவர்கள் இல்லையென்றே கூறலாம். அதுவும் சேரநாட்டின் இளவரசி யின் அழகு எவரையும் கிறங்க வைக்கும் பேரழகு. தன்னை ஏறெடுத்தும் பாராமல் 'நன்றி' என்ற ஓர் வார்த்தைப் பிர யோகத்துடன் அலட்சியமாகச் செல்லும் அவனுடைய் உருவம் மறைந்துவிட்டதாயினும் அவளு டைய விழிகளை விட்டு அகலாத அவன் வடிவம் தன்னை ஏளன மாகப் பார்ப்பது போன்ற ஓர் உணர்வினால் எதுவும் பேசாது மௌனமாகிவிட்டவளை குணவீரசிங்கை மன்னனின் குரல் சுயவுணர்வடையச் செய்தது.

"அழைத்தீர்களா?" என்றாள்.

"இளவரசியார் ஆழ்ந்த சிந் தனை வசப்பட்டுவிட்டதாகத் தோன்றியது"

"உண்மைதான் வேந்தே! இளம் வயதில் தளபதியாகி விட்டதும், வீரராக விளங்குவதா லும் அகம்பாவம் நிறைந்துள்ள ஒருவராக இருப்பாரோ தங்கள் தளபதி என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன்" என்றாள்.

அவளுடைய மன உணர்வு களை அவள் பேச்சின் உள்ளர்த் தங்களைப் புரிந்துகொண்ட குணவீரன் அவன் மனம் சாந்தியடையும் வண்ணம் அமர சிம்மனுடைய குண இயல்பு களைப் பற்றிக் கூறினான்.

"இருந்தாலும் இத்துணை அகம்பாவம் உள்ள ஒருவரை இன்றுதான் பார்க்கின்றேன்" என்றாள்.

'இளவரசி அவன் சாதாரணமான குடும்பத் தலைவனல்லன். அவனும் இராஜபரம் பரையைச் சேர்ந்த வன். எனக்குப்பின் கனக சூரியன் ஆட்சிக்குரியவனாக இல்லாவிட்டால் இவனே முடி சூட்டிக்கொள்ளும் நிலையில் உள்ளவன். அவனுடைய் வயதுக்கு ஏற்ற சிறு சபலங்கள் எதுவும் அவனிடம் கிடையாது. கடமை ஒன்றே பெரிதென நினைப்பவன். அதன் காரண மாகத்தான் அவனிடம் சில பொறுப்புக்களை அவன் விருப்பப்படி விட்டிருக்கின்றேன். நாளைக்கு நடைபெறவிருக்கும் சண்டையைப் பற்றியே அவன் சிந்தனைய்திருப்பதால்தான் அப்படி நடந்துகொண்டான்." என்று விளக்கமளித்தார்.

"கொள்ளைக் காரர்களைச் சிறைப்பிடித்தால் அவர்களைத் தண்டிக்க வேண்டியதை விட்டு அவர்களோடு சண்டையிட்டு ஏன்...?" அவளால் மேற்கொண்டு பேசமுடியாதளவுக்கு மந்திரியார் பெரியடையாரின் வரவு தடை விதித்தது.

(தொடரும்...)

# பூரண விசாரணை நடக்குமா?
# நஷ்டஈடு கிடைக்குமா?

" புலிகள் ஒழிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கழிந்த நிலை யில், அரச புலனாய்வுப் பிரிவினர் ஒரு கண்டுபிடிப்பைச் செய்துள்ளனர். அது வரவேற்கப்பட வேண்டிய விடயம். அதேநேரத்தில் அரசாங்கத்தின் வசமுள்ள ஏறத்தாழ முக்கியமான 800 புலிகளிடம் இன்னும் ஏராளமான குற்றத் தகவல்கள் உள்ளன. அவற்றையும் அரசாங்கம் முழுமையாக வெளிக்கொணர்வதுடன், அதில் சம்பந்தப்பட்ட வர்களை சட்டத்தின் முன்நிறுத்தவும் வேண்டும். அதன்மூலம் புலிகளின் அக்கிரமங்களினால் கண்ணீரும் செந்நீரும் சிந்தியவர்களின் துன்பங்களுக்கு ஓரளவாவது ஒத்தடம் கொடுக்க முடியும். "

நன்றி: இணையம்

1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி, பலாலி விமான நிலையத்திலிருந்து 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்கள், 2 உக்ரேனிய விமானிகள் சகிதம் கொழும்பு - இரத்மலானை விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்ட 'லயன் எயர்' பயணிகள் விமானம் (ரஷ்ய தயாரிப்பான AN-24 ரகத்தை சேர்ந்தது). புறப்பட்ட 10 நிமிடங்களில் ராடர் திரையிலிருந்து மறைந்து காணாமல் போயிருந்தது. அந்த விமானம் காணாமல் போனது குறித்து அந்த நேரத்தில் பல ஊகங்கள் நிலவிய போதும், புலிகளே அதைச் சுட்டு வீழ்த்தினர் என அப்போது EPRLF இலிருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிக்கை விடுத்திருந்தார். மன்னார் கடற்பரப்பில் அந்த நேரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சில மீனவர்கள், விமானம் ஒன்று புகை கக்கியபடி கடலில் வீழ்ந்ததைக் கண்டதாகவும் தெரிவித் திருந்தனர். அந்த விமானத்தின் சில பாகங்கள் மன்னார் கடற்பரப்பில் காணப்பட்டதாகவும் கூட செய்திகள் வெளியாகியிருந்தன.

இப்பொழுது 14 ஆண்டுகள் கழித்து பயங்கரவாத குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரின் வேண்டுகோளுக்கிணங்க, கடற்படையினர் பூநகரிக்கு அருகிலுள்ள இரணைதீவு கடற்பரப்பில் அவ்விமானத்தின் உதிரிப்பாகங்கள் சிலவற்றை மீட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. புலிகளுடான இறுதி யுத்தத்தின் போது, இராணுவத்திடம் சரணடைந்த அல்லது இராணுவத்தால் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர் ஒருவரிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே, இந்த விமான உதிரிப் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

இப்பொழுது இந்த விமானம் காணாமல் போனதன் பின்னணி என்ன என்பது மிகவும் தெளிவாகிவிட்டது. அதாவது அந்தப் புலி உறுப்பினர் வழங்கிய தகவலின்படி, புலிகளே இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தி அநியாயம் புரிந்துள்ளனர் என்பது நிரூபணமாகியுள்ளது.

இப்பொழுது தேவையெல்லாம் அரசாங்கம் இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் குறித்து பூரணமான விசாரணை நடாத்தி உண்மையை வெளிக்கொணர்வதுடன், அதில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு அதி உச்சபட்ச தண்டனை வழங்கு வதுதான். (ஏனெனில் இந்த அழிவைச் செய்தவர்கள் 56 அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைப் பறித்ததுடன், ஏனைய மக்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளனர்) அத்துடன் அந்த வி- மான நிறுவனத்தின் ஊடாக, அதில் பயணம் செய்து மரணித்தவர்களின் குடும்பங்களுக்கு தகுந்த நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், அந்த விமானத்தில் பயணித்து மரணித்தவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கமும் இழப்பீட்டுத் தொகையொன்றை வழங்கு வது அவசியம். ஏனெனில் இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம், யுத்தத்துடன் சம்பந்தப்பட்டது என்றபடியால், அதன் ஒரு பங்காளியாகிய அரசாங்கத்துக்கும் அதில் பொறுப்பு உள்ளது. அதாவது தனது ஆட்சிப் பிரதேசத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு விமானத்துக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறியது அரசின் தவறாகும்.

உண்மையில் இந்த விமானத்தில் பயணித்தவர்களுக்கு புலிகள் தான் முழுமையான இழப்பீடு வழங்கவேண்டும். ஆனால் புலிகளது தலைமை இறுதிப் போரின் போது அழிக்கப்பட்டு விட்டதாலும், எஞ்சி இருக்கும் புலி களில் உத்தியோகபூர்வமாக அந்த இயக்கத்துக்கு உரிமை கோருபவர்கள் எவரும் இல்லை என்றபடியாலும், புலிகளிடமிருந்து இழப்பீடு அறவிடுவது சாத்தியமில்லை.

இது ஒருபுறமிருக்க, இந்த 'லயன் எயர்' விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது பற்றி அரசாங்கம் எவ்வகையான விசாரணைகளை நடாத்தப் போகின்றது என்ற கேள்வியும் இருக்கிறது. நிச்சயமாக இந்தத் தகவலை அரச புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கிய புலி உறுப்பினர(களை)ரை விசாரிப்பது என்பது மிகவும் அவசியம். அதேநேரத்தில் இந்த விவகாரம் குறித்து, இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட நேரத்தில் மக்கள் மத்தியில் பேசப்பட்ட சில தகவல்களையும் விசாரணையின் போது கவனத்தில் எடுப்பது அவசியம்.

அதில் ஒன்று, இந்த விமானத்தைச் சுடுவதற்கான விமான எதிர்ப்புப் பீரங்கிக்கான மேடை, இரணைதீவிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் முற்றத்தில் தான் அமைக்கப்பட்டிருந்தது என்பதாகும். அந்த மேடையிலிருந்தே வயதில் மிகவும் குறைந்த ஒரு புலி உறுப்பினன் இந்த விமானத்தைச் சுட்டதாகக் கூறப்படுகிறது. அது உண்மையானால், அந்தத் தேவாலயத்தின் குருவானவருக்கு இந்த விடயம் நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும். எனவே அவரை நிச்சயமாகப் புலனாய்வுப் பிரி வினர் விசாரிக்க வேண்டும். அதேவேளையில் இந்த விடயம் இரணைதீவு மக்கள் சிலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. எனவே அவ்வூர் மக்களையும் விசாரிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

இரண்டாவது விடயம், இந்த விமானத்தில் அன்றைய தினம் யாழ்ப்பாணம் சென்.ஜோன் பொஸ்கோ மாணவர்கள் சிலர் சில நிகழ்வுகளுக்காக கொழும்பு அழைத்துச் செல்லப்படுவதற்காக விமானப் பயணச்சீட்டு பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும், ஆனால் புலிகள் தமது திட்டம் பற்றி இரகசியமான முறையில் அந்தப் பாடசாலையின் நிர்வாகத்துக்கு அறிவுறுத்தியதன் காரணமாக, பாடசாலை நிர்வாகம் அந்தப் பிர யாணத்தை இரத்துச் செய்ததாகவும், அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது. எனவே இதையும் புலனாய்வுப் பிரிவினர் விசாரிப்பது அவசியம். (புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா இந்த சென்.ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலையில் தான் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது)


எது எப்படியிருப்பினும், புலிகள் ஒழிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கழிந்த நிலையில், இப்பொழுதுதான் அரச புலனாய்வுப் பிரிவினர் ஓர் உருப்படியான கண்டுபிடிப்பைச் செய்துள்ளனர். அது வரவேற்கப்பட வேண்டிய விடயம். அதேநேரத்தில் அரசாங்கத்தின் வசமுள்ள ஏறத்தாழ முக்கியமான 800 புலிகளிடம் இன்னும் ஏராளமான குற்றத் தகவல்கள் உள்ளன. அவற்றையும் அரசாங்கம் முழுமையாக வெளிக்கொணர்வதுடன், அதில் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்தவும் வேண்டும். அதன் மூலம் புலிகளின் அக்கிரமங்களினால் கண்ணீரும் செந்நீரும் சிந்தியவர்களின் துன்பங்களுக்கு ஓரளவாவது ஒத்தடம் கொடுக்கமுடியும்.

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.



# லேடிஸ் ஸ்பெஷல்

# பெண்களுக்கெதிரான வன்முறை என்றால் என்ன?



பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறையானது அவர்களது மனித உரிமைகளின் பாரதூரமான மீறலொன்றாகும். இது உடல் ரீதியானதும், பாலியல் ரீதியானதும், உளவியல் ரீதியானதுமான கெடுதல் அல்லது வன்முறையின் பயமுறுத்தல், பலாத்காரம் அல்லது சுதந்திரத்தைப் பறித்துக்கொள்ளல் ஆகியனவற்றை உள்ளடக்குவதுடன், பொதுவான அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இடம்பெறவும் முடியும்.

பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை ஏதாவது தனித்த நாட்டுக்கு அல்லது பிராந்தியத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்பதுடன், பலதரப்பட்ட சமூக-அரசியல், பொருளா-தார, கலாசார, சமய, பழங்குடி மற்றும் இனத்துவ வழக்கங்கள் ஆகியவற்றின் காரணமாக பெண்களும், பெண்பிள்ளைகளும் வேறுபட்ட விதத்தில் அனே-கமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால்தான் இது பால்நிலை அடிப்படையிலான வன்முறை என் வரையறுக்கப்படுகின்றது.

**யார் பாதிக்கப்படுகின்றார்?**

ஒவ்வொரு வயதையும், வகுப்பையும், இனத்துவத்தையும், சமயத்தையும், சாதியையும் மற்றும் அமைவிடத்தையும் சேர்ந்த பெண்களும், பெண்பிள்ளைகளும் பாதிக்கப்படலாம் என்பதுடன், பாதிக்கப்படுகின்றார்கள்.

**பெண்களுக்கு எதிரான வன்முறையின் மிகவும் பொதுவான வகைகள் எவை?**

பெண்களுக்கு எதிரான வன்முறையின் பெருமளவு வகைகள் உள்ளன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: அந்நியோந்நியமான துணைவர் மூலமான வன்முறை, பாலியல் வல்லுறவு, திருமணம்சார்ந்த பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை அத்துடன், அல்லது தொந்தரவு, சீதனம் தொடர்பான வன்முறை, வாழ்க்கைத் துணைசாராத வன்முறை, வீட்டு வேலையாட்களுக்கு எதிரான வன்முறை, கேலிசெய்தல், ஆட்கடத்தல் மற்றும் ஆபாசப் புகைப்படம் போன்ற சுரண்டலின் வேறு வடிவங்கள், சமூக வழக்கத்திற்கும், கலாசாரத்திற்கும், பாரம்பரியத்திற் கும் அத்துடன் அல்லது சமயத்திற்குமான மேற்கோளினால் நியாயப்படுத்தப்பட்டு, கெடுதலை விளைவிக்கும் வழக்கங்களின் காரணமாக பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை.

**பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையின் பொதுவான வகைகள்**

மேலதிகமாக, பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை மேற்படி விடயத்தை உள்ளடக்குவதுடன், பெண் சிசுக் கொலையையும், இளமைப் பருவத் திருமணத்தையும், நிர்ப்பந்தத்திலான திருமணத்தையும் உள்ளடக்கலாம்.

**இது எங்கு இடம்பெறலாம்?**

பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை ஏதாவது இடத்தில் இடம்பெறலாம். இது வீட்டில், குடும்பத்தில் அல்லது சனசமூகத்தில், வேலை செய்யும் இடத்தில், பொதுஇடங்களில் மற்றும் போக்குவரத்தில், விசேடமாக இயற்கை அழிவுகளில், உள்நாட்டு மோதலில், யுத்தத்தில் மற்றும் கிளர்ச்சிகள் போன்ற பொது குழப்பங்களின் தருணங்களில் அத்துடன் இச்சூழ்நிலைகளின் காரணமாக உள்ளகரீதியாக இடம் பெயரும்போது இடம்பெறலாம்.

## கர்ப்ப காலத்தில்

# இரத்த மற்றும் இருதய மாற்றங்கள்



**கர்ப்ப** காலத்தில் தாயின் கர்ப்பப்பை - அதுவும் கர்ப்பத்தின் இறுதிக் கட்டத்தில் 32 செ.மீ. நீளமாகவும், 22 செ.மீ. ஆழமாகவும் 24 செ.மீ. அகலமாகவும் பெரியதாகும். பேரிக்காய் வடிவில் 3.5-லிருந்து 5 செ.மீ. அளவே இருக்கக்கூடிய கருப்பை, கர்ப்பத்தின் இறுதிக் கட்டத்தில் மேற்சொன்ன பெரிய அளவினை அடைந்துவிடும்.

கர்ப்ப காலத்தில் உடலின் மொத்த இரத்தக் கொள்ளளவு முப்பது சதவீதம் அதிகரிக்கும். இருதய இரத்த வெளியேற்றம் கர்ப்ப காலத்தில் அதிகரித்துவிடும். இருதய இரத்த வெளியேற்றம் பன்னிரண்டிலிருந்து பதினாறு வாரத்தில் 5.5 லீற்றர் ஒரு நிமிடத்திற்கு இது கர்ப்பத்தின் மத்திய கட்டத்தில் ஒரு நிமிடத்திற்கு 6 லீற்றராயிருக்கும்.

பின்னர் கடைசி எட்டு வாரங்களில் ஒரு நிமிட்த்திற்கு 5-லிருந்து 5 லீற்றராயிருக்கும். இந்த அதிகரித்த இருதய இரத்த வெளியேற்றத்தால் இருதயத் துடிப்பு அதிகரிக்கும். சாதாரணமாக ஒரு நிமிடத்திற்குப் பதினைந்திலிருந்து இருபது நாடித் துடிப்புகள் அதிகமாக இருக்கும். அதேபோல இரத்த அழுத்தமும் கர்ப்ப காலத்தில் சிறிது அதி-கமாகி இருக்கும். கர்ப்ப காலத்தில் உடலின் புரதச்சத்து குறைந்து காணப்படுவதோடு இரும்புச்சத்தும் இருபத்தி நான்காவது வாரத்திற்குப் பின் குறைந்துவிடும்.

மார்பகத்தில் கர்ப்ப காலத்தில் நிறைய மாறதல்கள் ஏற்படும். அவை இரண்டாவது மாதமும், ஐந்தாவது மாதமும்தான் ஏற்படும். இரண்டாவது மாதத்தில் மார்பகம் பெருத்து மிகவும் உணர்ச்சி மிகுந்ததாகவும் நீலநிற வண்ண மாறுதல் உடையதாகவும் இருக்கும். காம்பு நீண்டும், காம்பைச் சுற்றிய பாகம் மிகவும் கறுப்பாகவும் மாறும். ஆரம்பக் கட்ட சில மாதங்களுக்குப் பின்னர் மார்பிலிருந்து உற்பத்தியாகக் கூடிய திரவம் அழுத்தினால் வரக்கூடும். பின்னர்,அது மஞ்சள்நிறத் திரவமாக மாறிவிடும். இதைத்தான் சீம்பால் என்போம்.

**பரிசு : 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-339**

**கேள்வி : பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறும் இடங்கள் எவை?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-05.11.2012**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 339
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 336 இற்கான விடை :- ஹிஸ்டீரியா என்னும் மனநோய்

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- மு.இந்திராணி, 386 கரியாலை நாகபடுவான், அம்மன் கோயில் வீதி, விநாயகபுரம்.

339

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
..............................
கையொப்பம் : ..............................

# நீங்களும் அழகுக்கலை நிபுணர்களே...

அதாவது அன்றாடும் நாம் சமையலறையில் பயன்படுத்தும் பொருட்களே அழகு சாதனப் பொருட்களாக திகழ்கின்றன என்பது ஆச்சரியமான உண்மை.

**பேசியல் பழக்கூழ்:**

கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம், உலர்ந்த திராட்சை பழம் இவற்றை ஒரு நாள் முழுவதும் வெந்நீரில் ஊற வைக்கவேண்டும். அதன் பிறகு அரைத்து இந்த கலவையுடன் அரைக் கரண்டி பப்பாளி பழக்கூழை கலந்து கொள்ளவும். இதை முகத்திற்கு பேஸ் பேக் போல போட்டு 25 நிமிடம் கழித்து முகத்தை கழுவவேண்டும். நாளடைவில் வெயிலினால் இழந்த நிறத்தை திரும்பவும் பெற்றுவிடலாம்.

**அப்பிள்:**

அப்பிள் விழுது, தக்காளி விழுது, தர்பூசணி விழுது மூன்றையும் சமநிலையில் எடுத்து, பஞ்சில் முக்கி முகத்தில் ஒற்றி எடுத்தால் முகம் நல்ல பிரகாசம் அடைந்து குளுமையாகவும் இருக்கும்.

**ரோஸ் வோட்டர் கடலைமா:**

இரண்டு கரண்டி கடலை மாவுடன், 4 கரண்டி பால், 1 கரண்டி ரோஸ் வோட்டர் சேர்த்து கலக்கவும் பின்னர் கலவையை நன்றாக முகத்தில் பூசவும். பத்து நிமிடம் கழித்து இதனை குளிர்ந்த நீரில் கழுவ சருமம் மென்மையாகவும், இளமையாகவும் காட்சிதரும்.

**டள் முகம் பொலிவாக:**

தோலுடன் இருக்கும் கடலை பருப்பு அரை கிலோ, துளசி இலை 50 கிராம், வேப்பங்கொழுந்து 5 கிராம் இவற்றை நிழலில் உலர்த்தி நன்றாக அரைத்து கொள்ளுங்கள். ஒரு. கிண்ணத்தில் இந்த கலவையை இரண்டு கரண்டி போட்டு அதில் இரண்டு துளி எலுமிச்சை சாறு சேர்த்து முகத்திற்கு பேக் போட்டு 5 நிமிடம் கழித்து முகத்தை கழுவிவர டள் முகம் பொலிவடையும்.



## சமையல் குறிப்பு

# மைசூர் பாகு



**கடலை மா -1 கப்**
**சீனி - 2 கப்**
**நெய் - 2 கப்**

**செய்முறை:**

முதலில் கடலை மாவை கட்டியில்லாமல் இருப்பதற்காக நன்கு சலித்து, ஒரு தட்டில் வைத்துக் கொள்ளவும். வட்டமான அல்லது சதுரமான தட்டு, அல்லது ட்ரேயில் நெய் தடவிவைக்கவும்.

அடுப்பில் வாணலியில் சிறிதளவு தண்ணீர்விட்டு, சீனியை போட்டு கொதிக்கவிடவும். ஒற்றை கம்பிப் பதம் வர ஆரம்பித்த உடனேயே, ஒரு கையால் கிளறிக் கொண்டே, மற்றொரு கையால் கடலைமாவை கொஞ்ச கொஞ்சமாகப் போடவும். இல்லையென்றால், கடலைமா கட்டியாகிவிடும்.

கடலை மா சீனிப்பாகில் நன்கு கரைந்து கொதிக்க ஆரம்பித்தவுடன், நெய்யை சிறிது சிறிதாக விட்டு, ஒரு கையால்விடாமல் கிளறிக் கொண்டே வரவும். பின்பு நெய் தடவிவைத்த தட்டில் கொ .வும். நன்கு ஆறியவுடன், நெய் த விய கத்தியால் உங்களுக்கு விரு ம்பிய வடிவில் வெட்டிக் கொள்ளவும.

*******

மாறிவரும் கால மாற்றத்தில் அந்தரங்க உறவுகள் பற்றிய புரிதல் மக்கிரங்களைத் தருக்கும் - ஒட்டி நின்று பார்த்தும் ஆர்வ மிகுதியால் ஒழுக்கம் மீறாமல் இருக்கும். ஆயினும் அதை வழங்குவதில் தினமுரசு என்றும் நாகரிகமான முறையையே கடைப்பிடிக்கும்.



அந்தரங்கம்

# உங்கள் மனைவியின் கோபத்தை குறைக்க...

**குடும்பத்தில்** கணவன், மனைவி இடையே சண்டை, தகராறு ஏற்படுவது சகஜமாகிவிட்டது. கணவன் மனைவி இடையே ஏற்படும் சண்டைகளால் குடும்பங்களே பிரிந்துவிடுகின்றன. முடிவில் மனைவிதான் கோபம் கொண்டவளாக இருந்தாள் என்று பெரும்பாலான கணவன்கள் குற்றக் கூறுகின்றனர். குடும்பத்தில் மனைவிகள் கோபம் அடைய, கணவன்களும் பல நேரங்களில் காரணமாகி விடுகின்றனர் என்பது அவர்களுக்கு புரிவதில்லை.

உங்கள் இல்லத்தரசியை பார்க்கும்போது புன்னகை செய்ய மறக்காதீர்கள். நீங்கள் புன்னகை செய்தாலே அடுத்த நொடியில் கோபத்தை மறந்து விடுவார்கள் உங்கள் மனைவி தெரியாமல் செய்யும் சிறு சிறு தவறுகளைக் கூட சுட்டிக்காட்டி வாய்க்கு வந்தபடி திட்டாதீர்கள். அவர்கள் தவறு செய்து இருப்பின் நிதானமாக தவறை எடுத்துக் கூறுங்கள்.

முக்கிய வேலைகளில் ஈடுபடும்போது அன்பாய் பேச வேண்டுமே தவிர தொந்தரவு செய்வது போல மனைவியிடம் பேசி கொண்டே இருக்காதீர்கள். இத்னால் மனைவி கோபமடைந்து, உங்களை திட்ட நேரிடும். இதனால் இரண்டு பேரும் பதற்றமாக வாய்ப்பு அதிகம்.

வேலைக்கு செல்லும் மனைவியாக இருந்தால், வேலை முடிந்து வரும்போது அவர்களின் அனுபவங்களை கேட்டு அறிந்து கொள்ளுங்கள். அதே போல நீங்களும் உங்கள் அனுபவங்களை, அவரிடம் பகிர்ந்து கொள்ள மறக்காதீர்கள். அவ்வாறு பகிர்ந்து கொள்வதன் மூலம் தம்பதிகளிடையே அன்பு அதிகரிக்கும்.

மனைவி செய்யும் சிறு உதவிகளுக்கும் அன்புடன் நன்றி கூறலாம். வாயினால் தெரிவிக்கக் கூடாது. அதனை சற்று கொஞ்சலாகவும் மனைவியை அணைப்பதன் வழியாகவும் நன்றி கூறலாம். ஏதேனும் சிறு தவறு ஏற்படின் தவறுகளுக்காக உடனே மன்னிப்பு கேட்டு கொள்ளுங்கள். இதன்மூலம் மனைவியிடம் கோபம் நீடிப்பதை தவிர்க்கமுடியும்.

மனைவி செய்த தவறுகளை மனதில் வைத்து கொண்டு. அதனை குத்தி காட்டி பேச கூடாது. மேலும் சம்பந்தமே இல்லாமல் மனைவியின் பெற்றோரையும், குடும்பத்தையும் திட்ட கூடாது. இதனால் மனைவியின் மனதில் வெறுப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

கணவனும் மனைவியும் பேசும் போது பிடிவாதமாக பேசாமல், விட்டுக்கொடுத்து பேசுங்கள். மனைவியும் தனது கருத்தை தெரிவிக்க வாய்ப்பு அளிக்க தவறாதீர்கள். மனைவி செய்தவைகள் குறிப்பாக சமையல் உள்ளிட்டவைகளை பார்த்து குறை கண்டுபிடிக்காதீர்கள். நன்றாக இருப்பதாக கூறிவிட்டு, மாற்றத்தை சாதுரியமாக தெரிவிக்கலாம்.

மற்றவர்கள் முன் மனைவியை கேவலமாக பேசுவது, திட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதால், மனைவி தனிமையாக இருப்பதாக உணர்ந்து தாய்வீட்டு நினைப்பு வந்துவிடலாம். எனவே வீட்டில் இருக்கும் போது மனைவிக்கு சிறு சிறு உதவிகள் செய்வதன் மூலம், இருவருக்கும் இடையே உறவும் பலப்படும். அன்பும் பெருகும். கோபம் இருந்த இடம்தெரியாமல் போகும்.

சண்டை ஏற்படின் முடிந்தமட்டும் சமாதன கொடியை பறக்கவிட காத்திருக்க வேண்டுமே தவிர, மேலும் சண்டையை வளர்க்கக்கூடாது. அன்பை வெளிப் படுத்தினால் மகிழ்ச்சியோடு வாழலாம்.



## செக்ஸ் என்பது ஆபாசம் அல்ல! அது ஒரு உணர்வு!



**செக்ஸ்** என்பது ஆபாசம் அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்வது நல்லது. அது ஒரு உணர்வு. அந்த உணர்வை, அதற்குரிய வகையில்தான் தணிக்கவேண்டுமே தவிர அலங்கோலமான வழியில் நினைத்தால் கசப்புணர்வுதான் இறுதியில் மிஞ்சும்.

சிலர் செக்ஸ் உறவின்போது பல தவறுகளைச் செய்வார்கள். அதைத் தவிர்ப்பது உறவுக்கும், உறவில் ஈடுபடுவோரின் மனங்களுக்கும் நல்லது. அது என்ன தவறுகள் என்பதைப் பார்ப்போமா?

செக்ஸ் உறவின்போது பலரும் செய்யத் தவறுவது நிறைய முத்தம். இருவரும் இணையும் அந்த ரம்மியமான தருணத்தை மேலும் மேலும் இனிமையாக்க உதவுவது எண்ணிக்கைக்குள் வராத அளவு முத்தமிடுவது தான். இங்குதான், அங்கு தான் என்றில்லாமல் நினைக்கும் இடத்தில், கணக்கே இல்லாமல் முத்தமிடுங்கள். இது இருவருக்கும் இடையிலான அன்பை அதிகரிக்க உதவும்.

உங்களது பார்ட்னரும் செக்ஸ் மூடுக்கு வர வேண்டியது அவசியம். ஆனால் பலர் அவசரம் அவசரமாக எதையாவது செய்து துணையை பதற்றமடையச் செய்வார்கள். அதற்குத் தான் நிறைய நேரத்தை முன்விளையாட்டுக்கு செலவிட வேண்டும் முன்விளையாட்டை அதிகரிக்கும்போது தானாகவே இருவருக்கும் நல்லமூடு வந்து விடும்.

முன்விளையாட்டை உங்களது துணையை எந்த இடத்தில் தொட்டால் சிலிர்ப்பார், எப்படித் தொட்டால் சிரிப்பார், எந்த மாதிரி தொட்டால் சிலாகிப்பார் என் பதைத் தெரிந்து கொண்டு சரியாக குறி வைத்து விளையாடுங்கள். ஆண்கள், பெண்கள் எல்லோருக்குமே பொதுவாக கழுத்து, முதுகு, வயிறு உள்ளிட்ட பகுதிகள் கிளர்ச்சியூட்டக் கூடியவை.

கிளைமேக்ஸ் ஆண்களுக்கு எப்போதுமே சீக்கிரம் வந்துவிடும். ஆனால் பெண்களுக்கு நேரம் பிடிக்கும். எனவே அதற்கேற்ற வகையில் உங்களது உறவின் வேகத்தைக் குறைத்தும், தணித்தும் விவேகமான முறையில் செயல்பட வேண்டும். அவரது இன்பத்தையும், சந்தோஷத்தையும், அனுபவிப்பையும் நீங்கள் மதித்து அதற்கேற்றாற் போல நடந்துகொள்ள வேண்டும்.

அதேபோல செக்ஸ் உறவை ஆபாசமான விஷயமாக மாற்றி விடக்கூடாது. அது ரொம்ப முக்கியம். செக்ஸ் உறவு என்பது ஒரு கலை. அதை நயத்தோடு அணுகுவதும், செயல்படுத்துவது தான் நல்ல உறவுக்கு அழகு.


தினந்தோறும் வெளிவருகிறது

விலை 10/=

தினமுரசு நாளிதழ்

தினந்தோறும் கல்விமுரசு இணைப்பு

- கனதிமிக்க கட்டுரைகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- குட்டிக் கதைகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்" - "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் – விடைகள் ஒவ்வொரு நாளும் தினமுரசில் வெளியாகிறது.

தினமுரசு நாளிதழ் ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தையும் பத்தே ரூபா கொடுத்து படித்துக்கொள்ள முடியும்

ஜோசப் கிருஸ்ணா

# விளையாட்டு



**2012** இருபதுக்கு இருபது உலகக்கிண்ணம் அநியாயமாகக் கைநழுவிப் போனது துரதிர்ஷ்டம்தான். அப்படியாயின் 2014இல் வங்காள தேசத்தில் நடைபெற இருக்கும் அடுத்த சுற்றுப் போட்டியில் நாம் வெல்வதற்கு என்ன செய்யவேண்டும். இது பற்றிப் பேசும் பிரதம தெரிவாளர் அஜந்த டீ மெல் கூறும் போது, பந்துகளை ஆறாகவும், நான்காகவும் மாற்றும் அதிரடி வீரர்கள் இன்மையே மஹேல, ஆஞ்சலோ மெத்யூஸ் போன்றவர்கள் அணியில் இடம்பிடிக்கக் காரணம் என்று காட்டமாகக் கூறியுள்ளார். இத்தகைய அதிரடிக்கான உடல் பலம் இவர்களிடம் இல்லை என்று கூறும் இவர், இதனாலேயே இவர்கள் றிவேர்ஸ் ஷொட், ஸ்கூப் போன்றவற்றை முயல்கிறார்கள் என்றும், அதற்கும் கூடத் தேவை பலம்தான் என்றும் கூறியுள்ளார். எனவே பொதுவில் அடுத்த உலகக் கிண்ணப் போட்டிக்கு எல்லைக் கோட்டை அநாயசமாகத் தாண்டி அடிக்கக் கூடிய அணியொன்றே அவசியம் என்றும் கூறியுள்ளார்.




எனவே, பொதுவில் அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு எல்லைக் கோட்டை அநாயசமாகத் தாண்டி அடிக்கக்கூடிய அணியொன்றே அவசியம் என்றும் கூறியுள்ளார். இன்னொரு கருத்தையும் பொருத்தமாகவே கூறியுள்ளார். அதாவது டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கு உள்ள அணியை விடுத்து, இருபதுக்கு இருபது ஆட்டங்களிற்கு வித்தியாசமான புதிய அணியொன்றை உருவாக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். உண்மையில் அனுபவ வீரர்களையும், அதிரடி வீரர்களையும் உள்ளடக்கியதாகவே இந்த அணி அமைய வேண்டும் என்பதும் உண்மை.

தற்போது மஹேல ஜயவர்த்தன இருபதுக்கு இருபது அணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொண்டபின் ஆஞ்சலோ மத்தியூஸ் அணித்தலைவ்ராவார்

## புதிய வார்ப்புகள்

என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒக்ரோபர் 30 ஆம் திகதி நியூசிலாந்துக்கு எதிராக பல்லேகல மைதானத்தில் இருபதுக்கு இருபது போட்டியொன்றிருக்கிறது. இந்த ஆட்டத்தில் என்னென்ன மாற்றங்கள் இருக்கும், எதிர்பார்க்கப்படும் புதிய அதிரடிவீரர்கள் யாராக இருக்கும் என்பதெல்லாம் அறிந்துகொள்ள சுவையான விடயமாக இருக்கும். இந்த ஆட்டத்தின் வெற்றி அடுத்தகட்ட நகர்வுக்கான உந்துசக்தியாக இருக்குழ். நல்லதே நடக்க வேண்டும் என்று வாழ்த்துவோம்.

**தற்போது** றியல் மெட்ரிட் அணியின் தவிர்க்க முடியாத வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ. போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த இவர் தேசிய அணிக்காக முதன் முதலில் களம் இறங்கியது தனது பதினெட்டாவது வயதில். அதாவது 2003 இல் கஜகஸ்தான் அணிக்கு எதிராகக் களம் இறங்கிய அந்த நாள் தன் வாழ்வின் முக்கியநாள் என நினைவு கூருகிறார். தற்போது 9 வருடங்களின் பின் தன் நாட்டுக்காக வட அயர்லாந்துக்கு எதிராக விளையாடப் போகும் ஆட்டம் அவரது நூறாவது ஆட்டமாகும். இருபத்தேழு வயதாகும் இவர், ஜேர்மனியின் லூக்காஸ் பொடலொஸ்சி, எஸ்தோனியாவின் கிறிஸ்ரன் விக்மேக்கு அடுத்ததாக மிகக்குறைந்த வயதில் இச்சாதனையைப் புரியும் ஐரோப்பிய வீரராகக் காணப்படுகின்றார்.

போர்த்துக்கல் வீரர்களில் லூயிஸ் பியூகோ(127), பெர்னாண்டோ கியூடோ (110) இருவருக்கும் அடுத்து நூறாவது ஆட்டத்தை எதிர்கொள்ளும் வீரராக இருக்கிறார். இவர் முதலிடம் பெறும் காலம் வெகுதொலைவில் இல்லை. இவரது சாதனைகள் சில குறுகிய காலத்திலேயே பெறப்பட்டவை. PFA மற்றும் FWA எனும் அரிய விருதுகளை நான்கு முறைகள் தட்டிச்சென்ற பெருமை இவருக்குண்டு. 2011 ஐரோப்பிய உதைபந்தாட்ட சீசனில் றியல் மட்ரிட் அணிக்காக அதிகூடிய கோல்களாக 51 கோல்கள் பெற்றுக்கொண்ட பெருமையும் இவருக்குரியது. மேலும் இவர் கோல்பெறும் வீதமும் சாதனையாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது 70.7 நிமிடத்துக்கு ஒருமுறை ஒரு கோல் போடும் விகிதத்தை இவர் பெற்றுக்கொள்கிறார்.

இன்னொன்று இரண்டு வித்தியாசமான ஐரோப்பிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இரண்டு தடவை தங்கக் காலணி விருது பெற்ற ஒரே வீரனாகவும் இவர் உள்ளார். இவருக்கான விருதுகள் எதிர்காலத்தில் இன்னும் காத்திருக்கின்றன என்பதே உதைபந்தாட்ட விமர்சகர்களின் அசையாத நம்பிக்கை.

இவர் பற்றிக் கூறும் போது, இவர் நிறைய தன்னம்பிக்கையைக் கொண்டவர் என்று கூறப்படும் அதேவேளையில் ஆக்ரோஷமும், வன்மமும் கொண்டவர் என்றும் கூறுவோர் உளர். ஆனால் இவருடன் ஆரம்ப காலத்தில் விளையாடிய வீரர்கள் கூறும்போது, மிகுந்த கடின உழைப்பும் மனித நேயமும் கொண்டவர் இவர் என்றும் கூறுகிறார்கள். எந்த வீரரும் சராசரி மனிதன்தான் என்றவகையில் இவரது சில கடினமான இயல்புகள் மன்னிக்கப்படலாம் என்று கூறுவோரும் இருக்கிறார்கள். எது எவ்வாறாயினும் இன்றைய சர்வதேச உதைபந்தாட்ட உலகில் இவர் முதன்மையானவர்களில் ஒருவர் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.



## இதிலும் சாதனை

**சம்பியன் லீக்** 2012போட்டிகளில் இலங்கையில் இருந்து கலந்துகொண்ட அணி ஊவா நெக்ஸ்ட் தற்போது அரை இறுதிப் போட்டிகளில் பங்குகொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டாலும், இவர்கள் தென்னாபிரிக்காவுக்குச் சென்று போட்டிகளில் கலந்துகொண்டதே பெரிய காரியம் எனும் அளவிற்குச் செய்திகள் வருகின்றன. எஸ்.எல்.பி.எல் நடைபெற்ற நேரத்திலேயே ஊவா நெக்ஸ்ட் வீரர்களுக்கும், உரிமையாளர்களுக்கும் கொடுப்பனவு தொடர்பான சர்ச்சைகள் ஏற்பட்டன. அதேபோன்ற விடயங்களே இம்முறையும் நடந்துள்ளதாக விடயங்கள் கசிகின்றன.

ஊவா நெக்ஸ்ட் உரிமையாளர்கள், அணியைத் தென்னாபிரிக்காவிற்கு அனுப்பவே நிதிப்பற்றாக்குறையைக் காரணம்காட்டி பின்னடித்ததாகச் செய்திகள் வருகின்றன. பின்னர் பல இழுத்தடிப்புகளுக்குப்பின் சம்மதித்தாலும் கொடுப்பனவில் பாதிதான் தருவோம் என்றவர்கள், தொடர்ந்து அதில் அரைவாசியைத் தருவோம், அடுத்த கட்டத்துக்குத் தகுதி பெற்றால்தான் மிகுதியைத் தருவோம் என்றெல்லாம் கூறியிருக்கின்றார்கள். எல்லா இழுபறிகளுக்கும் பிறகு கடைசி இரண்டு நாட்களிலேயே பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களை அணிவீரர்கள் செய்துள்ளார்கள். இதற்குக் காரணமாக விமான நிலையத்துக்குப் போகும் வழியில்தான் தமது அணிக்கான மேலங்கிகளைப் பெற்றுக்கொண்டு போயிருக்கிறார்கள். டிரவுசர்கள் இவர்கள் தென்னாபிரிக்கா சென்றடைந்த பின்தான் இவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இப்படியாக விடயங்கள் நீண்டு செல்கின்றன. இறுதியில் இலங்கைக் கிரிக்கெட் சபை தலையிட்டு நிதி வசதிகளை முன் பணம் என்ற



## விழிப்புடன் இருப்போம்

அடிப்படையில் ஏற்படுத்தி ஒரு நல்ல காரியத்தைச் செய்திருப்பதாக அறிய முடிகிறது. தென்னாபிரிக்காவாலும் வெளிநாட்டு வீரர்களின் கொடுப்பனவு சர்ச்சை தொடர்ந்ததால், வெளிநாட்டு வீரர்கள் இரண்டு ஓவர்கள்தான் பந்து வீசுவோம் என்று மிரட்டியதாகவும் செய்திகள்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது எதிர்வரும் காலங்களில் இலங்கை கிரிக்கெட் சபை இந்த விடயங்களில் மிகுந்த அவதானம் செலுத்தவேண்டும் போலத் தெரிகின்றது. பணம் உழைக்கவேண்டும் என்பதற்காக யார் யாரோ எமது வீரர்களையும் கிரிக்கெட் கட்டமைப்பையும் அவமானப்படுத்தவோ, சின்னாபின்னப்படுத்தவோ விடக்கூடாது. இப்படிப்பட்ட அவமதிப்புகள் எமக்குத் தேவையில்லை என்பதே எமது கருத்து.



## வரலாறு திரும்பும்

**அவுஸ்திரேலிய** கிரிக்கெட் அணி என்பது, 1995 இல் இருந்து ஏறத்தாள தசாப்த காலத்துக்குச் சற்றுக் கூடுதலாக உலகின் அசைக்க முடியாத அணி என்று சாதித்துக் காட்டியது. ஆனால் ஷேன்வோர்ண், கிளென் மெக்ரா, அடம் கில்கிறிஸ்ட். மெத்யூ ஹேடன் என்று வரிசையாக ஓய்வு பெற்றுச் செல்ல அணி திடீர் வீழ்ச்சிப் பாதையில் சென்றது. அதுவும் 2012 தாயகத்திலேயே 3-1 என்று ஆஷஸ் தொடரை இழந்தது நீங்காத வடுவாக அவுஸ்திரேலிய அணிக்கு அமைந்துவிட்டது. எனவேதான் தற்போது டெஸ்ட் தரவரிசையில் மூன்றாம் இடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாவை எதிர்வரும் வருடத்தில் முதல் நிலை அணியாக மாற்றுவேன் என்று கங்கணம் கட்டுகிறார் அணித்தலைவர் மைக்கல் கிளார்க்.


அண்மைக் காலத்தில் சில சிறப்பான செயற்பாடுகளைக் காட்டியுள்ள அணி எமது அணி என்கிறார் அவர். குறிப்பாக 4-1 என்று இந்திய அணியை வீழ்த்தியதைக் குறிப்பிடுகின்றார். மேலும் டேவிட் வோர்ணர், ஜேம்ஸ் பெட்டின்சன், பட்றிக் கமின்ஸ் போன்ற வளரும் வீரர்கள் நம்பிக்கை நட்சத்திரங்கள் என்கிறார். அத்தோடு எதிர்வரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகள் முக்கியமானவை என்பவர், இலங்கையுடனான மூன்று டெஸ்ட் போட்டிகள், தொடர்ந்து 2014 இல் வரவிருக்கும் இரண்டு ஆஷஸ் தொடர்கள் தங்கள் அணியை முதல் நிலை அணியாகக் கொண்டுவரும் வகையில் அமையும் என்று கூறியுள்ளார்.

இந்தத் தொடர்களில் தரசரிசை ஒன்றைக் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணியைத் தாயகத்தில் சந்தித்தாலும் அது மிகவும் சவாலான போட்டிகளாக அமையும் என்பது அவர் கருத்து. எனினும் 2015 உலகக் கிண்ண ஒரு நாள் போட்டிகளுக்கு முன்னதாக டெஸ்ட் தரவரிசை ஒன்றை அடைந்துவிடுவோம் என்பது இவரது நம்பிக்கை.

### 2012 ICC டெஸ்ட் தரவரிசை

| | புள்ளிகள் | தர.புள்ளிகள் |
|---|---|---|
| 01.தென்னாபிரிக்கா | 3002 | 120 |
| 02.இங்கிலாந்து | 4195 | 117 |
| 03.அவுஸ்திரேலியா | 3952 | 116 |
| 04.பாகிஸ்தான் | 3148 | 109 |
| 05.இந்தியா | 3394 | 106 |
| 06.இலங்கை | 2834 | 98 |
| 07.மே.இ.தீவுகள் | 2509 | 90 |
| 08.நியூசிலாந்து | 1832 | 76 |
| 09.பங்களாதேஷ் | 0 | 0 |

# தற்காப்புக்கலையின் முடிசூடா மன்னன் புரூஸ் லீ




நாம் விரும்பும் இலக்கை அடைவதற்கு உடல் வலிமையை விட மனவலிமைதான் முக்கியம் என்று வாழ்ந்துகாட்டிய வரலாற்று மாந்தர்கள் பலர். உலகத்தின் உதாசீன பேச்சுக் களையும் ஏளனச் சிரிப்புகளையும், கேலி கிண்டல்களையும் தாண்டி ஒருவன் சாதனை படைக்க வேண்டுமென்றால் அதற்கு உடல் வலிமை மட்டும் போதாது.

இரும்பு போன்ற மனவலிமையும் வேண்டும். நாம் தெரிந்துகொள்ள இருக்கும் வரலாற்று நாயகருக்கு அப்படிப்பட்ட மனவலிமை இருந்தது இல்லையென்றால் பிறந்தபோதே ஆரோக்கியமின்றி ஒழுங்காக பள்ளிக்குக்கூடம் செல்லாமல் குண்டர் கும்பல்களில் சேர்ந்து எங்கெல்லாம் சண்டை நடக்குமோ அங்கெல்லாம் சண்டையில் ஈடுபட்ட ஓர் இளைஞனுக்கு தற்காப்புக் கலை யில் சாதனை செய்ய வேண்டும் என்ற கனவும், ஒரு சிறந்த நடிகனாக வரவேண்டும் என்ற ஆசையும் உதித்திருக்காது. பல இன்னல்களை கடந்து தனது கனவுகளை நனவாக்க வும் முடிந்திருக்காது.

1959 ஆம் ஆண்டு சராசரிக்கும் குறைவான உயரத்தோடும், ஒல்லியான தேகத்தோடும் அமெரிக்க மண்ணில் வந்திறங்கினான் அந்த 18 வயது இளைஞன். அப்போது ஜோன் வேய்ங், ஜேம்ஸ் டீன், சார்ல்ஸ் அட்லஸ் போன்ற நடிகர்கள் புகழின் உச்சியில் இருந்தனர். ஆனால் பார்ப்பதற்கு சாதாரணமாக இருந்த அந்த இளைஞன் என்ன சொன்னான் தெரியுமா? அந்த அக்ஷன் கதாநாயகர்களுக்கெல்லாம் இனி நான்தான் மாற்று என துணிந்து சொன்னான்.

அப்போது அமெரிக்கர்கள் மட்டுமல்ல அந்த இளைஞனின் சமூகம்கூட அவனை ஏளனமாக பார்த்தது. ஆனால் ஏளனங்களை ஏணிப்படிகளாக்கி அடுத்த 14 ஆண்டுகளில் வெற்றிக்கொடி நாட்டி சினிமா என்ற வாகனத்தின்மூலம் தற்காப்புக்



கலைக்கு உலகலாவிய அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தார் அந்த தற்காப்புக்கலை வல்லுநர் திரைப்பட நடிகர். அவரது பெயர் புரூஸ் லீ.

1940 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மாநிலத்தில் பிறந்தார் புரூஸ் லீ. பிறந்தபோது அவருக்கு இடப்பட்ட பெயர் லீ ஜுன்பேன். அவரது தந்தை லீ கோய்ன் ஒரு சீனர், தாயார் கிரேஸ் ஐரோப்பியர்.

சிறுவயதில் ஹொங்கொங்கில் வாழ்ந்தது புரூஸ் லீயின் குடும்பம். அங்கே பெரும்பாலான சிறுவர்கள் தெருக்களில்தான் பொழுதைக் கழிப்பார்கள். அப்படி நிறைய நேரத்தைக் கழித்த புரூஸ் லீக்கு சண்டை போடுவதில் இருந்த ஆர்வம் படிப்பில் இல்லை. மேலும் சுமார் 20 சீனப்படங்களில் குழந்தை நட்சத்திரமாக தோன்றும் வாய்ப்பு புரூஸ் லீக்கு கிடைத்தது. சண்டையையும் சினிமாவையும் எடுத்துக்கொண்டு பள்ளியையும் பாடங்களையும் ஒதுக்கினார் புரூஸ் லீ.

இயற்கையாகவே நன்றாக சண்டைபோடும் திறமை அவருக்கு இருந்ததால் ஒரு கும்பலுக்கு தலைவனாகவும் இருந்தார். புரூஸ் லீயின் தந்தையோ நன்கு படித்து தொழில்துறையில் ஈடுபட வேண்டும் என விரும்பினார். ஆனால் சண்டைபோட்டு எல்லோரையும் வெற்றிகொள்ள வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார் புரூஸ் லீ.

சிலமுறை பெரிய குண்டர்களிடம் மோதி தோல்வியும் கண்டிருக்கிறார். அப்போதுதான் ஒரு நல்ல தற்காப்புக்கலையை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு எழுந்தது. தன் தந்தையிடமே குங்பூ என்ற பாரம்பரிய சீன தற்காப்புக்கலையைக் கற்றுக்கொண்டார். அடிக்கடி அடிதடிகளில் ஈடுபட்டதால் புரூஸ் லீயின் கொட்டத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத பெற்றோர் அவரிடம் 100 டொலரைக் கொடுத்து அமெரிக்காவில் போய் எப்படியாவது பிழைத்துக்கொள் என்று கப்பலேற்றிவிட்டனர்.

அப்போதுதான் 18 வயது இளைஞனாக அமெரிக்கா வந்து சேர்ந்தார் புரூஸ் லீ. சியாட்டலில் இருந்த ஒரு நண்பரின் சீன உணவக விடுதியில் தங்கிக்கொண்டு தற்காப்புக் கலையை கற்றுக்கொள்ளத் தொடங்கினார். அந்த விடுதியில் வேலையும் பார்த்தார். அவரது எண்ணம், செயல் எல்லாம் குங்பூ என்ற தற்காப்புக்கலையைப் பற்றியே இருந்தது.

மேற்கத்திய மல்யுத்தம், ஜீடோ, கராத்தே, குத்துச்சண்டை ஆகியவற்றையும் கற்றுக்கொண்டு சில புதியபாணி அசைவுகளையும் சேர்த்து அவர் சொந்தமாக ஒரு தற்காப்புக்கலையை உருவாக்கினார். அதற்கு ஜீட்குன்டோ என்று பெயரிட்டார். அவரிடம் தற்காப்புக்கலையை கற்றுக்கொள்ள வந்த லிண்டா என்ற பெண்ணை மணந்து கொண்டார் புரூஸ் லீ. 20 படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்த புரூஸ் லீக்கு ஹொலிவுட்டில் கதாநாயகனாக நடிக்கவேண்டும் என்ற ஆசையும் இருந்தது. ஆனால் ஹொலிவுட் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சோர்ந்துபோன புரூஸ் லீ ஹொங்காங் திரும்பினார்.

தி பிக் பாஸ், ஸ்பிட் ஒஃப் பியூரி என்ற இரண்டு படங்களில் புரூஸ் லீ நடித்தார் அதில் அவர் பம்பரம்போல் சுழன்று சுழன்று காட்டிய வித்தைகளும், சாகசங்களும் ஆசிய சினிமா பிரியர்களை அசத்தின. ஆனால் ஆசியாவை அசத்திய அந்தப்படங்கள் ஹொலிவுட்டின் கடைக் கண் பார்வையைக்கூட பெறத்தவறின. அதைப் பற்றி கவலைப்படாத புரூஸ் லீ 1972 ஆம் ஆண்டில் 'தி ரிட்டன் ஒப் த டிராகன்' என்ற படத்தை சொந்தமாகத் தயாரித்தார்.

சினிமாவின் மந்திரங்களை ஓரளவுக்கு புரிந்து கொண்டிருந்த புரூஸ் லீ திரைக்கதையைத் தானே எழுதி திரைப்படத்தை இயக்கவும் செய்தார். பொது வாக சண்டைக்காட்சிகளில் ஸ்டண்ட் நடிகர்களை வைத்துதான் படம் எடுப்பது வழக்கம். ஆனால் புரூஸ் லீயோ கெமரா வித்தைகள் இல்லாமல் அதிவேகமாக அதேநேரத்தில் தத்ரூபமாக சண்டைப் போடக்கூடிய திறமைசாலி என்பதை அந்தப்படம் அமெரிக்கர்களுக்கு உணர்த்தியது.

அதுவரை ஆசிய இளைஞர்கள் மட்டும் புரூஸ் லீயின் விசிறிகளாக இருந்தனர். 'தி ரிட்டன் ஒஃப் த டிராகன்' படத்திற்கு பிறகு அமெரிக்க இளைஞர்களும் புரூஸ் லீயின் வெறித்தனமான விசிறிகளாயினர். அந்தப்படம் தந்த வெற்றிக்களிப்பில் 'கேம் ஆப் டெத்' என்ற தனது அடுத்த படத்துக்கான வேலையை ஆரம்பித்தார் புரூஸ் லீ. அவரது பிரபலத்தையும் வசீகரத்தையும் உணர்ந்துகொண்ட ஹொலிவுட் தயாரிப்பாளர்கள் ஓடோடி வந்து தங்களுக்காக படம் எடுக்க வேண்டுமாறு புரூஸ் லீயைக் கேட்டுக்கொண்டனர்.

(தொடரும்...)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 493

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **05.11.2012** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 493
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 491- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | 2 பி | 3 லோ | 4 னி | 5 ய | 6 ர் |
| 7 கு | 8 டி | | 10 ச | 11 கா | 12 னா |
| | 14 யா | 15 ர | | 17 ம் | 18 அ |
| 19 இ | 20 ணை | 21 ய | 22 ம் | | 24 ன் |
| 25 நந் | | 27 ர | | 29 பை | |
| 31 து | 32 லா | 33 ம் | | 35 சா | 36 தி |

**இடமிருந்து வலம்**

01. அவுஸ்திரேலியாவின் புலனாய்வுத் துறையை இப்படி அழைப்பர்.
05. விண்ணப்பம். (திரும்பியுள்ளது)
07. மாதம்.
14. நீர்.
17. மிக. (திரும்பியுள்ளது)
19. குற்றம் அல்லது தீமை.
22. தக்கசமயம். (குழம்பியுள்ளது)
27. பெரிய பாரங்களை இலகுவாக நகர்த்த இதைப் பாவிப்பார்கள். (திரும்பியுள்ளது)
31. கிருமி.
34. கடல் பிரயாணத்தில் இதை எதிர் கொள்ளவேண்டி வரும்.

**மேலிருந்து கீழ்**

01. முதல்.
02. வலிமையுடைய விலங்கு.
03. நற்பேறு அல்லது உயர்ச்சி.
06. இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம்.
17. குலம். (குழம்பியுள்ளது)
19. நில விவரக்கணக்கு.
22. காட்சி.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.491 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**ஏ.சீ.எம்.ஜவஹர்ஷா, 20, ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ம.லதுஷா, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
02. த.வரதராஜா, தும்பளை, பருத்தித்துறை.
03. ச.காந்தன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
04. திருமதி எம்.சந்திரகலா, பூவரசங்குளம், வவுனியா.
05. வ.லாவண்யா, ஜின்னா நகர், திருகோணமலை.
06. எம்.கஷானா, பிரதான வீதி, அக்கரைப்பற்று.
07. எப்.எம்.எப்.ஷாமிப், சந்தை வீதி, சாய்ந்தமருது -07
08. த.ஜெயந்தன், 5ஆம் வட்டாரம், குமுளமுனை.
09. ம.இசைப்பிரியா, மகிழூர்முனை, களுவாஞ்சிகுடி.
10. கு.பார்த்திபன், தாளையடி வடக்கு, தாளையடி.

4



## இராமசாமி ரமேஷ், அளம்பில்

நட்சத்திரனின் எழுத்துக்களை நேசித்த நிலாவின் நெஞ்சுக்கூடு, அந்த இளைய எழுத்தாளின் இதயத்தையும் நேசிக்கத் தொடங்கிவிட்டது. அவள் தன்மடலின் இறுதியில் "நினைவுகள் உயிரில்லாதவை தான்! ஆனால், அந்த நினைவுகளாலே தான் பலர் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்..." என்ற வரிகளை வடிக்கத் தவறமாட்டாள்.

# வலிகளின் சன்மானம்

**ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.**

" **வாழ்த்துக்கள்** நட்சத்திரன்! வாங்க வலிகளின் சன்மானம்தான் லக்ஸ்மி பதிப்பகத்தால் வெளிக்கொண்டு வருவதற்கு முடிவு செய்திருக்கிறோம். உங்களுக்கு சந்தோஷமா?" "எனக்கென்று சொந்தமாய் உலகம் ஒன்றையே பரிசாகத் தந்தமாதிரி இருக்கு சேர்! நன்றி! தாங்ஸ்!" வார்த்தைகள் தடுமாற முல்லைச் செல்வனின் கரங்களை பற்றினான் நட்சத்திரன். சந்தோஷம் இவனை முழுமையாக நிறைந்திருந்தது. இதுதானே இவன் எதிர்பார்த்த முடிவு. நினைத்ததுவே கனிந்து கரத்தில் கிடைத்திருக்கிறது. இனியென்ன? இந்த அத்தனை பேருக்கும் இதயம் குவித்து நன்றி கூறியவன், சிறகு முளைத்த சிட்டாய் பறந்தான் தாய்வீடு தேடி!



"இதையறிந்தால் அம்மாவும் அப்பாவும் எவ்வளவு சந்தோஷப் படுவாங்க? எவ்வள்வு நேர்த்தியா... இந்தத் தொகுப்பை வெளியிடலாமோ, அவ்வளவு அழகா செய்யனும்! மனதிற்குள் ஆனந்த அலை ஆர்ப்பரித்தது. இந்தச் செய்தி தெரிந்தால் நிலாவும் எவ்வளவு சந்தோஷப்படுவாள்?" சட்டென இவனது நினைவுகளின் அணிவகுப்பில் நிலாவின் நினைவும் சேர்ந்துகொண்டது. வார்த்தைகள் தடக்கின!

அவளா? அவள் என்னைப் பற்றி சிந்திக்கவேமாட்டாள். அப்புறமெப்படி என் வெற்றி... அவளுக்கு மகிழ்வளிக்கும்?.

சந்தோசச்சாரல் நட்சத்திரனின் வானமெல்லாம் அடித்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் நிலாவின் நினைவுகளும் இவன் இதயத்தை ஆக்கிரமிக்கத் தவறவில்லை.

காதல் என்கிற பெரிய பாரத்தை இந்தச் சின்ன இதயத்துக்குள் அமுத்திப் போட்டவள் நிலா! அவளின் காதல் இவனை ஆளாக்கவும் செய்தன, சில சமயத்தில் அழவைக்கவும் செய்தன. இலக்கியத்தில் இவனை நிலைநிறுத்துவதற்காக அவளின் போராடல்கள் ஏராளமாய்! ஆனாலும் புரிந்துணர்வு எனும் புகையிரதப் பாதையில் இவன் ஒருபுறம்; அவள் மறுதுருவம் தான்.

ஆரம்பத்தில் சாதாரணதொரு உறவாகத்தான் அவர்களின் உணர்வுப் பூக்களும் மலர்ந்தன. இவனது எழுத்துக்களின் ஈர்ப்பினால் வாசகியெனும் நாமம் பொறித்து ஓர் மடல் அவளிடமிருந்து இவனை வந்துசேர்ந்தது. வாசகர்களின் வழமையான மடல்களைவிட, ஏதோவொரு சக்தி நிறைந்த சங்கதியொன்று இவனது மடலுக்குள் நிறைந்திருப்பது நட்சத்திரனுக்கு புலனாயிற்று. பாராட்டப்பட்டுவரும் கடிதங்களின் மத்தியில், இவனது படைப்புகளின் நிறை குறைகளை நிலாவின் எழுத்தாணிகள் ஒப்புவித்து இயம்பியிருந்தன. அந்த வரிகள், நட்சத்திரனின் நாடி நரம்புகளை உசுப்புவதான உணர்வு அவனுள்!

"நிலா! நீ என் இலக்கிய வானத்தில் வழிகாட்டி" மனசு உச்சரித்துக் கொண்டது. வாசகியாய் வந்து நட்சத்திரனின் இதயத்துக்குள் இடம்பிடித்துக் கொண்டவள் தான் நிலா!

எந்தப் பத்திரிகையில் இவனது படைப்பு வருகிறதோ, அத்தனை பத்திரிகைகளும் இவளிடத்தில் நிறைந்திருக்கும். ஒன்றை பல தடவைகள் படித்துப் பசியாறுவாள். சிறு வயது இலக்கிய நாட்டம் நிலாவை, தரமான இலக்கியத்தையும் இலக்கியவாதிகளையும் தரம்பிரித்துப் பார்க்க உதவியது. நட்சத்திரனின் அகவைமீறிய அறிவும், இலக்கியநயமும் அவனை சான்றோர்களிடத்தில் வைத்துப் பார்க்கச்சொன்னது அவளை!

நகர்ந்துகொண்டிருந்த நாட்களின் நீட்சியில், இந்த இரண்டு இலக்கியக் குழந்தைகளின் இதயக்கருவறைகளும் ஓர் இனம்புரியாத உணர்வுக் கயிற்றால் கட்டுண்டு போயிருந்தன. இரண்டு வாரங்களுக்கொரு முறை மடல்களில் சந்தித்துக் கொள்ளும் இவர்களின் போக்கு, ஒரு வாரத்திற்கு இரண்டு மடல்களென வீதங்களின் விகிதாசாரங்களில் அதிகரிப்பு ஏற்பட்டன. நட்சத்திரனின் எழுத்துக்களை நேசித்த நிலாவின் நெஞ்சுக்கூடு, அந்த இளைய எழுத்தாளின் இதயத்தையும் நேசிக்கத் தொடங்கிவிட்டது. அவள் தன்மடலின் இறுதியில் 'நினைவுகள் உயிரில்லாதவை தான்! ஆனால், அந்த நினைவுகளாலேதான் பலர் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்..." என்ற வரிகளை வடிக்கத் தவறமாட்டாள்.

ஒரு தடவை, அதிகரித்த வெம்மை காரணமாய் நட்சத்திரனுக்கு அம்மை போட்டு விட்டது. அதை அறிந்தவன் துவண்டு போனாள். வந்து சந்திக்கும் வாய்ப்பில்லை. இருந்தாலும், அவனுக்கு குணமாக அசைவத்தையும், தன் சௌகரியங்களையும் துறந்தான். நேர்த்தி இருந்து, கோயிலும் குளமுமாய் அவன் நோய் நீங்கும்வரை இவளது இயல்பு வாழ்க்கை நகர்ந்தது. இருப்பினும் நோயின் தாக்கம் நட்சத்திரனை உருக்கித் தான் போட்டிருந்தது.

(வலிகள் தொடரும்...)



லண்டனில் நானிருந்து ஆயிரம் யோசனைகள் உன் நினைவில்...
அன்புடன் நான் வாங்கி அனுப்பிய 'ஐபோனில' ஆருக்கு 'லைக்'
பண்ணுறாய் பேஸ்புக்கில்..
தெம்புடன் நீ திரிய நான் தந்த 'ஸ்கூட்டியுடன்'
'போட்டோ' போடுறியே 'பேஸ்புக்கில்'
ஆரடி அவன் உனக்கு 'க்யூட் கேள்'
என கொமன்ட்ஸ் போட்டது.
ஏனெடி நீயதற்கு 'தாங்ஸ்' என்று
திரும்ப 'கொமன்ட்ஸ்' போட்டனி
அடிக்கடி 'அக்சிடெண்ட்' ஆகிய
பருத்தித்துறை மினிவானில்
போகாதே 'ரவுணுக்கு'
இவ்வாறு நான் சொல்லி ஆறு நாள்
ஆகுமுன்னே உன்னிலும் வடிவில்லாத
பெண்ணுடன் நீ வானுக்குள் இருந்த
'அப்டேட்' பண்ணுறியே 'போட்டோவ'
அதுக்கும் அறுபது காவாலிகள் 'லைக்'
பண்ணுறாங்களே!!!
பொறுக்கவில்லை என் மனது
நீ செய்யும் செயல்களால்
பொறுமையாக இருப்பேன் என்று
நினைத்துவிட்டு இருந்துவிடாதே
என்னை இளிச்சவாயன் என்று
நினைத்து விட்டு நீ இருப்பாய்.
ஆனால் அடுத்த தடவை நான்
எடுக்கும் கோல் உன்
தங்கச்சிக்காக இருக்கலாம்.
லண்டனில் இருந்து

இன்பன்.

### வாரமொரு சிறு கதை

**தெருப்**பெண் மணிகள் கொதித்துப் போனார்கள். எவ்வளவு திமிரு இருந்தா நாலு நாளா குப்பை எடுக்க வராம இருப்பான்... "தெருவே நாறிப் போயி கிடக்குது.:. இன்னும் ரெண்டு நாள் வரலேன்னா அவ்வளவுதான்..." நாலு நாள் குப்பை சேர்ந்து போச்சு... என்ன பண்றதுன்னே தெரியல... மாசமானா ரெண்டொரு நாள் குப்ப அள்ள வர்றதில்ல... "குப்பை எடுத்தாலும் ஒழுங்கா எடுக்கறதே இல்லை... பாதி குப்பைய வீட்டு எதிர்லயே சிந்திட்டுப் போறான்..."

"என்ன பண்ணலாம்... மாசமானா டான்னு வீட்டுக்கு நூறு ரூபா கொடுத்திடறோம். தீபாவளி பொங்கல்ன்னா தனி காசு... இன்னும் என்ன வேணுமாம் அவனுக்கு..."

அவரவர் வீட்டுவாசலில் நின்றபடி பெண்கள் குப்பை அள்ளுபவனை கரித்துக் கொட்டினார்கள்.

அவர்கள் குப்பை என்பதில் காய்கறியின் மிச்சம்... கூட்டிப் பெருக்கியதன் கழிவு... சாராயப் போத்தல்கள்... உபயோகப்படுத்தப்பட்ட நப்கின் வரை அடக்கம்...

நான் மலர்விழியிடம் கேட்டேன்... "ஏம்மா குப்பை வண்டி வரலேன்னா என்ன... தெருமுனையிலதான் குப்பைத்தொட்டி இருக்கே... அங்க கொண்டு போயி கொட்டலாமே..."

"அதான்... நீங்க அவனுக்கு வக்காலத்து வாங்கிகிட்டு வந்திடுவீங்களே... மாசமானா பணம் கொடுக்கறோம்... அப்பப்ப பழைய துணிமணி கொடுக்கறோம்... கரெக்டா குப்பை எடுக்க வேண்டியதுதானே..."

"சரிம்மா... குப்பை அள்றவன் வரலேன்னா அடுத்து என்ன செய்யலாம்னு பார்க்கணும்... அத விட்டுட்டு ஆளாளுக்கு பேசிக்கிட்டு நின்னா வீடு நாறிப் போயிடும்...

# மனிதாபிமானம் இல்லாதவர்கள்!!



நீ எல்லாத்தையும் பக்காவா பேக் பண்ணி கொடு... அடுத்த தெருவுல இருக்கிற குப்பைத் தொட்டியில போட்டுட்டு வந்துடறேன்..."

"அதெல்லாம் நீங்க போக வேணாம்... நான் பார்த்துக்கிறேன்..." என்றபோது எதிர்வீட்டுப் பெண்மணி அங்கிருந்தபடியே பேசினாள்.

"ரகு அம்மா... இத அப்படியே விடக்கூடாது... மழைக் காலம் வேற வருது... குப்ப அள்றவன் மேல ஒரு புகார் எழுதி தெருக்காரங்க எல்லாரும் கையெழுத்துப் போட்டு அவங்கட ஒஃபீஸ்ல குடுப்பம்... அவங்க இவன வேலைய விட்டு எடுத்திட்டு வேற ஆளு மாத்திவிடுவாங்க"

"அதுதான் சரி..." மற்றப் பெண்கள் ஆமோதித்தார்கள். நான் எழுதிக் கொண்டு வர்றேன்... என்றபடி எதிர்வீட்டுப் பெண்மணி வீட்டுக்குள் போனாள்.

டூ வீலரில் அலுவலகம் புறப்பட்டு மெயின்ரோட்டுக்கு வரும்போது குப்பை அள்ளுபவன் வண்டியுடன் வேகமாக வந்துகொண்டிருந்தான்.

என்னை பார்த்து வணக்கம் செய்தான்.

"என்னப்பா நாலு நாளா உன்னைக் காணலியாம்... தெருவே பரபரத்துக் கிடக்கு..." சிரித்தான்.

"உடம்பு முடியல... கடுமையான காய்ச்சல் சேர்... குப்பை வண்டில எல்லாத்தையும் போடறாங்க சார்... கைய விட்டு அள்றோமோ... உடம்புக்கு ஆக மாட்டேங்குது... அப்பப்ப ஏதாச்சும் சீக்கு வந்து படுக்கற மாதிரி ஆயிடுது... இன்னைக்கு குப்பை எடுக்க வந்துடுவேன் சேர்... இல்லேன்னா சம்பளம் கொடுக்கறப்ப திட்டுவாங்க... சில வீட்டுல சம்பளத்த குறைச்சிடுவாங்க... அதான் உடம்பு முழுசா முடியலேன்னாலும் இன்னைக்கு வேலைக்கு வந்துட்டேன்... அப்பிடின்னாத்தான் குடும்பத்தைக் காப்பாத்த முடியும் சேர்."

படபடத்தபடி வேகமாகச் சென்றவனை பார்க்கையில் மனசு ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனது.




தருவது கே.வி.குணசேகரம்

# அலறும் மயில்கள்



புலவரது தேர் நகர்கிறது. போர்க்களத்தைப் புலவர் மகிழ்வுடன் பார்க்கிறார். துண்டாடப்பட்ட கைகளை நரிகள் வாயில் கௌவிக் கொண்டு ஓடுகின்றன. இரத்த வெள்ளம் மலையில் இருந்து பெரும் பாறைகளைப் புரட்டித் தள்ளிக் கொண்டுவரும் காட்டாறு போலப் பாய்கிறது. அதில் பெருங்குன்றுகளைப் போல இறந்த யானைகள் அள்ளுப்பட்டு வருகின்றன. குற்றுயிரோடு தலையில் வேல்பட்டுக் கிடக்கும் யானைகள் மழைகால கருமேகத்தில் மின்னல் மின்னியதைப் போல இருக்கின்றன. சோழரின் குதிரைகள் தமது பலம்பொருத்திய கால்களால் சேர நாட்டு வீரரை உதைக்க அவர்களது வயிறு பிளந்து குடல் வெளியேறி பசுக்கூட்டம் மிதித்த காளான்களைப் போலச் சிதைந்து கிடக்கின்றன. அக்குடலை நரிகள் இழுத்துச் செல்கின்றன. அக்காட்சி தூணில் சங்கிலியால் கட்டப்பட்ட வேட்டை நாய்களை ஒத்திருந்தன.

சேர மன்னன் தோற்றுவிட்டான். அவனது போர் வீரர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர். ஆயிரக்கணக்கான பெண்கள் தம் வாழ்வை இழந்துவிட்டனர். ஒவ்வொரு வீட்டிலும் பல விதவைகள் சேரநாடு அமங்கலிப் பெண்கள்மயமானது. இளைஞர்கள் பலர் இறந்தமையால் அங்கு இளைஞர்களின் தொகை குறைந்து விட்டது. காவேரி இளமாறனைக் காதலித்தாள். அவனது திரண்ட தேகம், அகன்ற மார்பும், கூரிய விழிகளும் அவளைக் கவர்ந்தன. போர் முரசு கொட்டும் போது இளமாறன் வாளையும் கேடயத்தையும் எடுத்தான். காவேரி சொன்னாள். நாம் காதலர்கள். திருமணமாகவில்லை. ஆனால் தோழியரின் உதவியோடு இரவில் சந்தித்து மகிழ்ந்திருந்தோம். அதனால் உங்களை விட்டுப்பிரிய மனமில்லாமல் இருக்கிறது. தயவுசெய்து போருக்குச் செல்லாதீர்கள். அரசர்கள் பொழுதுபோக்கிற்காகவும், புகழுக்காகவும்தான் போர் செய்கின்றனர். சேரனும், சோழனும் ஒரே இனத்தவர்கள். தமிழர்கள். ஏன் அற்பமான காரணங்களுக்காகப் போர் செய்தல் வேண்டும்? பேசித் தீர்க்கலாம்தானே. ஒரு பிரச்சினை சமாதானமான முறையில் தீர்வதற்குப் பலர் தமது சுயநலத்திற்காக விரும்பமாட்டார்கள். எல்லோரும் போரில் தமது திறமைகளைக் காட்டவே விரும்புவார்கள். அதிலும் புலவர்கள் அரசர்களை உற்சாகப்படுத்தி, இல்லாதவற்றையெல்லாம் இருப்பதாகக் கூறிப் போரிடுமாறு உற்சாகப்படுத்துவார்கள். அதனால் அவர்கள் பெரும் பொருள்களைப் பெறுவர். நீங்கள் போருக்கு செல்லாதுவிடுங்கள் என்றாள். இளமாறன் அதைக் கேட்கவில்லை. போருக்குச் சென்று வீரமரணம் அடைந்தான். சேரநாடு சோழனின் ஆட்சிக்குட்பட்டது. சோழ நாட்டுப் போர் வீரர்களும், சோழநாட்டுத் தலைவர்களும் சேரநாட்டிற்கு வரத் தொடங்கினர். சேரநாட்டில் பஞ்சம் நிலவியது. பெண்கள் தமது கணவர்களை இழந்தமையால் வாழக் கஷ்டப்பட்டனர். இதைச் சோழ நாட்டவர் சாதகமாகப் பயன்படுத்தினர். கலாசாரச் சீரழிவுகள் பெருகின. விபச்சாரம் பெருகியது. காவேரியின் வீட்டில் வறுமை தாண்டவம் ஆடியது. தகப்பனும் அவளது இரண்டு சகோதரர்களும் போரில் மாண்டு விட்டனர். உயிரோடிருந்த ஒரு சகோதரனுக்கு இரண்டு கைகளும் இல்லை. தாய் மனநோயாளியாகிவிட்டாள். இந்நிலையில் சோழ நாட்டு வியாபாரி ஒருவன் காவேரியின் வீட்டுக்கு வந்தான். அவளின் அழகில் மயங்கினான் அவளைத் திருமணம் செய்வதாகக் கூறினான். காவேரிக்கு விருப்பம் இல்லை. ஆனால் உறவினர்கள் வற்புறுத்தினர். வேறு வழியின்றி அவனைத் திருமணம் செய்தாள். அவன் பொருளை எடுத்து வருவதாகக் கூறிச் சோழ நாட்டிற்குச் சென்றான். பின் திரும்பி வரவில்லை. காவேரியால் எதுவும் செய்ய முடியவில்லை. வயிற்றில் தங்கி இருந்த கரு குழந்தையாகப் பூமிக்கு வந்தது. தனித்துவாழ முடியாதிருந்த காவேரிக்கு குழந்தை பெரும் பாரமானது. என்ன செய்வதென்று புரியாத அவள் சோழ நாட்டிற்குச் சென்றாள். அந்நாடு வளமுடையதாக இருந்தது. கோயில் ஒன்றில் தங்கியிருந்து பிச்சை எடுத்தாள். இரவில் குடிகாரர்களின் தொல்லைகளை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவ்வாறு அவளது தோழிகள் பலர் கஷ்டப்படுவதைக் கண்டாள். எல்லோருமாக ஒன்று சேர்ந்திருந்து மயில்களைப் போல அலறினர். அவர்களின் அலறல் யாரின் காதுகளிலும் கேட்கவில்லை.

# கருத்துக் களம்

தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைப்பதற்காக உருவாக்கப்பட்ட அரைகுறைத் தீர்வான மாகாண சபை முறைமையானது இன்று அதிகாரங்கள் அற்ற வெற்றுடலாக மாற்றுவதற்கு முடிந்தால் இல்லாமலே செய்வதற்கான காய்நகர்த்தர்கள் மிகவும் சாதுரியமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் ஆகிய அதிகாரங்களை வழங்குவதற்கு மறுத்து வருகின்ற மத்திய அரசாங்கம் இப்பொழுது திவிநெகும என்ற சட்டமூலத்தின் மூலம் மாகாண சபையிடம் இருந்து சிறுசிறு விதிகளைக் கையாள்கின்ற அதிகாரத்தையும் பறித்து செயற்திறன் அற்ற சபையாக மாகாண சபை அமைப்பை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கபடநோக்கத்துக்கு சில தமிழ்பேசும் தரப்புக்களும் ஊதுகுழல்களாக மாறி செஞ்சோற்றுக் கடன் தீர்க்கின்ற நிலையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இது வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது சாபக்கேடாகவே பார்க்கப்பட வேண்டியிருக்கின்றது.

கடந்த காலங்களில் இவ்வாறான பல்வேறு உதாரணங்கள் எமக்குப் பாடமாக இருக்கின்ற போதிலும் அவற்றிலிருந்து திருந்தாமல் தொடர்ந்தும் தவறுகள் தொடர்கதையாக இருப்பது எமக்குச் சாபக்கேடேயாகும்.

எஸ்.மதனரூபன்,
பிரான்ஸ்.

கருத்துக்களம்,
தினமுரசு, வாரமலர்,
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.




# சிந்தியா பதில்

◉ **சிந்தியா! தமிழர் நிலங்களில் இராணுவத் தளங்கள் நிறுவ சீனா உதவுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே ?**

கே.ஜதுசன், புளியங்குளம்.

*என்ன ஜதுசன் இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? போங்கள், தமிழர் நிலங்களைச் சுருட்டி எடுத்து இராணுவ முகாம் அமையுங்கள் என்று உபதேசம் செய்யும் அளவுக்கு தமிழர்களுக்கும் சீனர்களுக்கும் என்ன மாமன் - மச்சான் பிணக்கா? இல்லை கொடுக்கல் - வாங்கல் தகராறா?*

*இராணுவத்தளங்களை விஸ்தரிக்க உதவி செய்யுங்கள் என்று இலங்கை கூறுகிறது. தங்களுடைய வெளியுறவுத் தராசில் இக் கோரிக்கையைப் போட்டுப் பார்க்கிறது. சீனா கைமேல் பலன் இருப்பதால் வாரிக் கொடுக்கிறது. சீனாவைப் பொறுத்தவரை அவ்வளவுதான்.*

◉ **சிந்தியா! எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் வாகனங்களுக்கான இறக்குமதி வரி குறையவுள்ளதாகக் கூறப்படுகிறதே?**

எஸ்.நிர்மல், அக்கரைப்பற்று.

*கடந்த வருடம் குறித்த வரி அதிகரிப்பினால் இலங்கைக்கு மோட்டார் வாகனங்களை ஏற்றுமதி செய்த இந்திய நிறுவனங்களுக்கு இறங்குமுகம் தான். அதனால் இவ்விடயத்தில் பாரததேசம் வரிகளைக் குறைக்கும்படி அன்புக் கட்டளை இட்டுள்ளதாக தகவல்கள் கசிகின்றன.*

*எனவே இந்தியாவில் உற்பத்தியாகின்ற வாகனங்களுக்கான வரி குறைவதற்கான சாத்தியம் இருக்கிறது.*

*ஏனையவை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.*

◉ **ஹாய் சிந்தியா! கடவுள் மனிதனைப் படைத்தானா? மனிதன் கடவுளைப் படைத்தானா?**

க.விஷ்ணுவர்த்தன், வேப்பங்குளம்.

*மனிதன் படைத்த கடவுள்களை ஆலயங்கள்தோறும் பார்த்திருக்கிறேன். கடவுள் இப்படி மோசமான மனிதர்களை எல்லாம் படைத்திருப்பாரோ என்று சந்தேகமாய் இருக்கிறது.*

◉ **சிந்தியா! பெற்றோரை மதிக்காத பிள்ளைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

ஏ.நிருசா, கொக்குவில்.

*நிருசா, சுவாமி விவேகானந்தர் என்ன சொல்கிறார் தெரியுமோ!*

*"நீ உன் பிள்ளைகளிடம் எவ்வாறான மரியாதையை எதிர்பார்க்கிறாயே அதேபோன்று உன் பெற்றோருடன் நடந்து கொள்"*

◉ **சிந்தியா! வாழ்க்கையில் வெற்றியை எட்டிப் பிடிக்க தேவையானது எது?**

ச.சத்தியவேந்தன், கல்முனை.

*தேவையானது அல்ல. தேவையானவை எவை என்று கேளுங்கள்!*

*அறிஞர் ஜேம்ஸ் அலன் என்பவர் சில விஷயங்களைச் சுட்டிக் காட்டுகிறார். ஒழுக்கம், மனஉறுதி, நேர்மை, சிக்கனம், குடும்பத்தில் ஒற்றுமை, தன்னம்பிக்கை, அனுதாபம்.*

*உறுதியுடன் இவற்றைப் பற்றிப் பிடியுங்கள். வெற்றிக்கம்பம் உங்களுக்கு அருகிலேயே வந்து விடும்.*

◉ **சிந்தியா! கையால் சாப்பிடுவது, கரண்டியால் சாப்பிடுவது எது சுகம், சுவை அதிகம்?**

எம்.எவ்.இஷான், தர்ஹாநகர்.

*சுகம், சுவை மட்டுமல்ல, சுத்தமும் கையால் சாப்பிடுவதில் தான். அப்படியே ஒரு குழை குழைத்து பிடிபிடித்து பதம் பார்த்துச் சாப்பிடும் சுவையே சுவையேதான்.*

*நம்மவர் ஒருவர் லண்டனில் விருந்தில் கலந்து கொண்டார். அவரது வழக்கப்படி கையாலேயே உணவைச் சாப்பிடத் தொடங்கினார்.*

*அருகில் அமர்ந்திருந்த வெள்ளைப் பெண்மணி இவரை நையாண்டி செய்தார்.*

*"அழுக்குக் கையால் எப்படி சாப்பிட முடிகிறது."*

*நம்மவர்: சாப்பிட முன்னர் கைகழுவி விட்டுத்தான் வந்தேன்.*

*பெண்மணி: எங்கள் கத்தி, ஸ்குப் எல்லாத்தையும் சுடுநீரில் போட்டுச் சுத்தம் செய்கிறோம்.*

*நம்மவருக்குத் தாங்கவில்லை. ஒரே போடு போடுகிறார்.*

*"அம்மணி! என் கையும் விரல்களும் எனது வாய்க்குள் மட்டுமேதான் போய் வருகின்றன. உங்கள் கத்தியும் கரண்டியும் எத்தனை பேருடைய வாய்க்குள் போய் வருகின்றன தெரியுமா?*

*வாயடைத்து நின்றார் பெண்மணி.*

◉ **சிந்தியா! ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டலாமா?**

ஜே.ரெம்சி, மன்னார்.

*காட்டலாம். ஆனால் அறைவது யார் என்பதைப் பொறுத்துத் தான் காட்டவேண்டும்.*

*அறைவது எமது பரம எதிரியாக இருந்தால் மறுகன்னத்தை பின்னிப் பெடல் எடுத்துவிட்டுப் போய்விடுவார்.*

[ 11 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## உடல் உறுப்புதானம்...

ஈரல்தானம் செய்தால் 6 மாத ஓய்வும், கிட்னி தானம் செய்தால் 3 மாத ஓய்வும் தேவை.

மூளைச்சாவை சந்திக்கும் ஒருவர் உடலில் இருந்து எடுக்கப்படும் தான உறுப்புகளால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை பிழைக்க வைக்கமுடியும்.

உதாரணத்திற்கு ஒருவரிடம் இருந்து பெறப்படும் 2 கிட்னிகளை இருவருக்கு பொருத்தலாம். ஈரலையும் இரண்டு பேருக்கு தரலாம். இதயம், கார்ணியா போன்றவைகளும் பயன்படும். ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் எடுப்பதும், தேவைப்படுகிறவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் பொருத்துவதும் மிக முக்கியமானதாக இருக்கிறது.

உடல் உறுப்புகளை தானமாகப்பெற்று, பொருத்துவதில் மிக முக்கிய சரித்திர திருப்பம் ஏற்பட்டது. 1954ஆம் ஆண்டு, அப்போதுதான் கிட்னி மாற்று அறுவைச் சிகிச்சை நடந்தது. 1966ஆம் ஆண்டு இதய மாற்று சத்திரசிகிச்சை தென் ஆபிரிக்காவில் நடந்தது. பின்பு 1980ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இதர உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சை பிரபலமானது. ஈரல் மாற்று அறுவை சிகிச்சை 1989ஆம் ஆண்டும், ஒருவரது ஈரலை இருவருக்கு பொருத்திய அறுவை சிகிச்சை 1996ஆம் ஆண்டிலும் நடந்தது.

மனித வாழ்க்கை மகத்துவம் நிறைந்தது. அதை மேலும் மகத்துவம் நிறைந்ததாக்க, உடல் உறுப்புதானம் செய்ய முன்வருவோம்!

[ 03 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## இனப் பிரச்சினையும் அரசியல்...

உரிமை மறுக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக்கொண்டு அந்த மக்களின் பிரதான பிரச்சினையின் தீர்வுக்கு எந்தக் கொள்கையும் இல்லாமல் அரசியல் நடத்துகின்ற புதுமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே காண்கிறோம். உலகில் வேறெங்கும் இல்லாத புதுமை.

மங்கள முனசிங்கவின் அறிக்கை. சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரப் பகிர்வு தீர்வுத்திட்டம், மகிந்த ராஜபக்ஷ நியமித்த நிபுணர்கள் குழுவின் 'அறிக்கை' ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த அறிக்கைகளையும் தீர்வுத்திட்டத்தையும் அவை வெளியாகிய வேளைகளில் கூட்டமைப்புத் தலைவர்கள் நிராகரித்தார்கள் என்பதுதான்.

இந்த அறிக்கைகளையும் தீர்வுத் திட்டத்தையும் அடிப்படையாக வைத்துக் கூட்டமைப்பு ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அதை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்கலாம். இன்று சர்வதேச சமூகம் பற்றி அதிகம் பேசுகின்றவர்கள் அந்தத் தீர்வுத் திட்டத்தைச் சர்வதேச சமூகத்துக்குச் சிபார்சு செய்து, அதை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தின் மீதுஅழுத்தம் பிரயோகிக்குமாறு, கோரிக்கை விடுக்கலாம்.

தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் இணைந்து அவ்வாறான ஒரு தீர்வுத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இவற்றுள் எதையும் செய்வதற்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் தயாராக இல்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருவதை அவர்கள் விரும்பவில்லை என்பதே இதற்கான காரணம். இவர்கள் குறிப்பிட்ட இரண்டு அறிக்கைகளினதும் சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தினதும் அடிப்படையில் இன்றைய அரசாங்கம் தீர்வொன்றைத் தயாரிக்காது என்பது இவர்களுக்குத் தெரியும். அதனால் அக் கோரிக்கையை முன்வைக்கின்றார்கள். சர்வதேச சமூகம் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பெரிதாக ஈடுபடாது என்பதும் இவர்களுக்குத் தெரியும். அதனால் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற போலியான நம்பிக்கையை மக்களிடம் வளர்க்கின்றார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் கூட்டமைப்புக்கு உண்மையிலேயே அக்கறை உண்டென்றால் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்துச் சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் அதற்கு ஆதரவைத் திரட்டுவதற்கு முயற்சிக்கவேண்டும்.


**மலையாள மாந்தீரீக**



காலம் கடந்த திருமணம் ஒன்று கூட, ஓடிப்போனவர் தேடி வர, நினைத்த காதல் நிச்சயம் நிறைவேற, கல்வியில் சித்தி பெற, மனப்பயம் அகல, நிம்மதியான தூக்கம் பெற, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, குழந்தை பாக்கியம் கிட்ட, குடிபோதையை நிறுத்த, நினைத்தது நினைத்தவாறு நடக்க என்னைச் சந்தியுங்கள்.



இது 48 வருட காலம் சேவை செய்யும் நிறுவனமே!

ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13.

தொ.பே: 011 2342463, 011 2342464, 011 2470615

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்

இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

இது ஒரு அரச வரிகள் செலுத்தும் நம்பிக்கையான முன்னோடி நிறுவனமே!


**வீட்டு** நிர்வாகத்திலும் சரி நாட்டு நிர்வாகித்திலும் சரி எடுக்கப்படும் தீர்மானங்கள் பொதுவாக அமுலாக்கப்படுவதில்லை என்பதுதான் நடைமுறையில் கண்ட அனுபவங்களாக இருந்து வந்திருக்கின்றது.

இந்த அனுபவத்தின் வாயிலாகப் பெற்றுக் கொண்ட படிப்பினைகளால் தான் வெறுப்பும் புரிந்துணர்வின்மையும் அதன் காரணமாக ஆக்கபூர்வமான விடயங்களுக்குப் பதிலாக அழிவு நாசவேலைகளும் இடம் பெற்று வருகின்றன.

**1972 / 07ஆவது உறுப்புரையில் 1956/ 33 சட்டத்தில் வெளியிடப்பட்ட சிங்கள மொழி அரச மொழியாக மீண்டும் யாப்பிலே சேர்க்கப்பட்டது.**

**1978 அரசியல் முறை யாப்பில் – பேதம் காட்டக்கூடாது.**

**12 (2) எந்தவொரு பிரஜையும் இனம், சமயம், மொழி, குலம், சாதி, பால் நிலை, அல்லது பிறந்த இடம், போன்ற காரணங்கள் அல்லது வேறு காரணங்களுக்காக விசேட வேறுபாட்டிற்கோ, கவனத்திற்கோ**

**நீதிமன்ற ஏற்பாடுகள்**

24 (1)உறுப்புரை - அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் (அ) முறைப்பாடு பற்றிய விசாரணையை 120 நாட்களுக்குள் அறிவிக்காதபோது (ஆ) விசாரணை நிராகரிக்கப்பட்டமை அல்லது நிறுத்தியமை பற்றி அறிவித்திருக்கும் வேளை. (இ) முறைப்பாடு நிரூபிக்கப்படாமை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளவிடத்து

25 (1) உறுப்புரை - மேல் நீதிமன்றத்தில் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் வழக்கைத் தாக்கல் செய்தல் வேண்டும்.

23 (5) அறிக்கையையும் பரிந்துரைகளையும் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவித்து 90

# கிடப்பில் போடப்படும் தீர்மானங்களால் உருவாகும் சீரழிவுகள்!

**வாகரை வாணி**

வீட்டு நிர்வாகத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படவில்லையாயின் அது ஆரம்பத்தில் அவநம்பிக்கைக்கும் பின்னர் குடும்பப் பிளவுகளுக்கு வித்திட்டு கடைசியில் விவாகரத்தில் போய் முடிந்து விடுவதுமுண்டு.

இதே போலத்தான் நாட்டு நிர்வாகத்திலும் எடுக்கப்படுகின்ற முடிவுகள் பல சந்தர்ப்பங்களில் அமுல்படுத்தப்படாமல் போக ஈற்றில் அது பிளவுகளுக்கும் பிரிவினைகளுக்கும் கடைசியில் பெரும் அழிவுகளுக்கும் இட்டுச் சென்றதுண்டு. இந்த வரலாற்றை நாம் நமது வாழும்போதான அனுபவத்திலேயே கண்கூடாகக் கண்டிருக்கின்றோம்.

இலங்கையில் மொழி உரிமை என்பது பெருத்த சவாலுக்குரியதொன்றாகவே இருந்து வந்திருக்கின்றது. ஒரு மனிதப் பிறவிக்கு பேச்சு, எழுத்து உரிமை என்பது தவிர்க்க முடியாத ஒன்று. பிறந்தது முதற்கொண்டு அழுகுரலில் தொடங்கி இறக்கும் வரையும் தனது கருத்தைச் சொல்லும் உரிமை ஒருவருக்கு உண்டு.

**உலகில் பொதுவான மொழி**

அழுகையும் சிரிப்பும்தான். இந்த இரண்டு வகையான உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு எந்தப் பாரபட்சங்களோ, தடைகளோ உலகில் எப்பாகத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், கொஞ்சக் காலம் செல்லச் செல்ல தமது சூழலிலுள்ள மொழிகளைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்தி கருமங்களை ஆற்ற முற்படும்பொழுது மொழி உரிமை என்பது அடுத்தவர்களால் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. அது பெரிய சவாலுக்குரியதொன்றாக மாறி அழிவுகளுக்கும் இட்டுச் செல்கின்றது.

துரதிர்ஷ்டவசமாக நமது நாடும் சமீபத்தில்தான் இத்தகையதொரு பேரழிவைச் சுமந்துவிட்டு இப்பொழுது இன்னும் பொறுமை காத்து நிற்கின்றது. மொழி அடிப்படையில் தொடங்கிய பாரபட்சமும் ஓரங்காட்டலும்தான் இத்தகையதொரு அழிவுநிலைக்கு நமது நாட்டை இட்டுச் சென்றது என்பதை நமது நாடு இலகுவில் மறந்துவிட முடியாது.

இத்தகைய பாரபட்சம் நமது நாட்டின் தலைவிதியாக 1944 ஆம் ஆண்டிலேயே தொடங்கிற்று. அந்த ஆண்டிலேயே மறைந்த சர்ச்சைக்குரிய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன அரச சட்டசபையில் அரச கரும மொழியாகவும், பாடசாலைகளில் போதனா மொழியாகவும் சிங்களத்தை மட்டுமே கொண்டு வரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்தப் போக்கின் தீவிரம் 1945 இல் சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இவ்வாறு பிரதிபலித்தது. "சிறுபான்மை மக்களுக்கெதிராக ஏதேனும் அநீதியான கவனிப்பு இடம்பெறுமாயின் நிர்வாக நடவடிக்கைகள் மூலமே அவ்வாறு நடைபெறும். ஏனெனில், இந்நடவடிக்கைகளை இலகுவில் கண்டுபிடிப்பதும் அம்பலப்படுத்துவதும் முடியாத காரியமாகும்."

அந்த மொழி இனவாதப்போக்கே பின்னாட்களில் வலுப்பெற்று 1956 இல் தனிச் சிங்களம் எனும் சட்டமானது.

**1972 குடியரசு யாப்பில்– அரச சமயம்.**

**1972 /06ஆவது உறுப்புரையில் பௌத்த சமயம் அரச சமயமாக வெளியிடப்பட்டது.**

**உள்ளாக்கக் கூடாது.**

**18 வது யாப்பு – அரச கரும மொழிகள்.**

**18(1) இலங்கையின் அரச– கரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும். [1972,1978 ஆகிய இரு அரசியலமைப்புகள் மேற்கூறியபடியே குறிப்பிட்ட பின்னர் 13வது திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.**

**(2) தமிழும் அரசகரும மொழி ஒன்றாதல் வேண்டும்.**

**(3) ஆங்கிலம் இணைப்பு மொழியாதல் வேண்டும். [அரசின் சகல நிறுவனங்களும் தனது நடவடிக்கைகளை சிங்களத்தில் அல்லது தமிழில் மேற்கொள்ள வேண்டும். அரசகரும மொழிகள் என்ற காரணத்தாலேயே இப்பெறுபேறு, உயர்நீதிமன்ற தீர்ப்புகளை வழங்கும் சந்தர்ப்பங்களில் இணைப்புமொழியான ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியும்.**

**19 வது உறுப்புரை– தேசிய மொழிகள்.**

**19 இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டும்.**

**23 வது உறுப்புரை– சட்டவாக்க மொழி.**

எல்லாச் சட்டங்களும் துணை- நிலைச் சட்டவாக்கங்களும் சிங்களத்திலும் தமிழிலும் இயற்றப்படுதலும் வேண்டும். அவை ஆங்கில மொழி பெயர்ப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். [23(1)]

**நீதிமன்றங்களின் மொழிகள்**

சிங்களமும் தமிழும் இலங்கை நீதிமன்றங்களின் மொழிகளாக இருத்தல் வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரதேசங்களினதும் நீதிமன்ற மொழி சிங்களமாயிருத்தல் வேண்டும். [24(1)] உறுப்புரை]

**அரசகரும மொழிகளின் அமுலாக்கம்**

கடந்த காலத்தில் பல்வேறு சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் இருந்த போதிலும், அரசகரும மொழிகள் சரியான முறையில் அமுலாக்கப்படவில்லை எனவே 2009.09.25ஆம் திகதி 1620/27 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்தும் பொறுப்பு முதன்மை அதிகாரிகளுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் விசேடமாக ஒப்படைக்கப்பட்டது.

மொழிக்கொள்கையை அமுலாக்கும் அமைச்சு இது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சாகும். இந்த அமைச்சு 2010-11-25 ஆம் திகதி அமைக்கப்பட்டு 1681/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

**அரச கரும மொழிகள் ஆணைக்குழு**

1991118 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் அரச கரும மொழிகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயற்படுத்துவது பற்றி ஆராய்வதும் மேற்பார்வை செய்வதும் இந்த ஆணைக்குழுவின் குறிக்கோளாகும்.

அதன்படி அரச கரும மொழிகள் அடிப்படை உரிமையாக செயற்படுவதையிட்டு வகை பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

நாட்களுள் மேற்படி பரிந்துரைகளுக்கு அமைய செயற்படாத முறைப்பாட்டாளர், வசிக்கும் மாகாண சபை மேல் நீதிமன்றத்தின் கட்டளையைப் பெற விண்ணப்பிக்கலாம். அதற்கமைய செயற்படுத்துமாறு மேல் நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்கலாம்.

**நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தல்**

ஒரு நடவடிக்கையைப் புறக்கணித்தமை பற்றி, குறிப்பிட்ட மொழியில் ஒரு பிரதியை வழங்குவதை வேண்டுமென்றே புறக்கணிக்கும் சந்தர்ப்பத்தில், மேற்படி அரச அதிகாரிக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அது சுருக்கமான வழக்கு விசாரணையாக அமையும். அதாவது குற்றம் செய்யப்பட்டுள்ளதா இல்லையா எனப் புலனாய்வு செய்யப்படும். இது தண்டனைச் சட்டக்கோவையின் 289வது வாசகத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் ஒரு வழக்காகும்.

**மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிவாரணங்கள் (1996/21)**

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 10 அ வாசகத்திற்கு அமைய அடிப்படை உரிமை மீறல் பற்றிய முறைப்பாடுகளை புலனாய்வு செய்து பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கலாம். முதலில் பிணக்கை இணக்கப்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒம்புட்ஸ்மனிடம் பெறக்கூடிய நிவாரணங்கள் அரசியல்

அமைப்பின் உறுப்புரை [156(1)] மூலம் இப் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. அடிப்படை உரிமை மீறல் மற்றும் வேறு அநீதியான நடவடிக்கைகள் தொடர்பாக அரச நிறுவனங்களுக்கு எதிராக ஒம்புட்ஸ்மனுக்கு முறைப்பாடு செய்யலாம்.

இவ்வளவு ஏற்பாடுகளும் தீர்மானங்களும் இருந்தும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இன்னமும் முறைப்படி அமுல்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதாலேயே இன்னமும் முரண்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்பொழுது கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவும் மொழிக்கொள்கை தொடர்பாக பல சிபார்சுகளைச் செய்துள்ளது. "மொழிக் கொள்கையை பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்துவதும் எதிர்காலச் சந்ததி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அறிவைப்பெறுவது மிக முக்கியமானதாகும். உத்தியோகபூர்வ மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற போது அதைப் புரிந்துணர்வு, பல்வகைமை, தேசிய ஒருமைப்பாடு என்பவற்றை மேம்படுத்துகின்ற உற்பத்தித் திறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும்." எல்.எல்.ஆர்.சி.யின் இந்த சிபார்சுகளும் பத்தோடு பதினொன்றாக கிடப்பில் சேர்ந்துவிடாமல் அமுலாக்கப்பட வேண்டும் என்பதே இலங்கை மாதாவின் பாதிக்கப்பட்ட புதல்வர்களினதும் புதல்விகளினதும் வேண்டுதலாகும்.

# காதில பூ

## கந்தசாமி




**வணக்கமுங்கோ! நாட்டுப்பிரச்சனை தீரவேணுமெண்டு நாங்கள் தலையில அடிச்சுக் கொண்டு திரியேக்க, வீட்டுப்பிரச்சினை ஒண்டும் தீர்ந்த பாடில்லையுங்கோ.**

போனவாரம் ஊரில இருக்கிற நண்பர் ஒருவருடைய வீட்டுக்குப் போயிருந்தேனுங்கோ. நண்பர் நல்லாத்தான் வரவேற்றார். சாப்பாடெல்லாம் தடல்புடலாக தயார் பண்ணியிருந்தாருங்கோ.

நண்பரின்ர ஊரில இப்ப மீன் நல்லா பிடிபடுகுதெண்டதாலை, மீன், இறால், கனவா எண்டு அவியலும், பொரியலுமாக அசத்திப் போட்டாருங்கோ.

என்னோடு வந்திருந்த இன்னொரு நண்பர்கூட அவ்வளவாக மீன் விரும்பிச் சாப்பிடுற ஆளில்லை. ஆனால் அண்டைக்கு தாங்கோ தாங்கோ எண்டு வாங்கி ஒரு கட்டு கட்டுனாருங்கோ.

தலைநகரில நாள் கணக்கான மீனைச் சாப்பிடுவதற்கும், நண்பரின்ர ஊரில அண்டைக்கே பிடிச்ச மீனை சமைச்சு சாப்பிடுறதுக்கும் சுவையில வித்தியாசம் இருக்கத்தான் செஞ்சுதுங்கோ.

நண்பரின்ர விருந்தை இப்ப நினைச்சுக் கொண்டு கையை மணந்து பார்த்தாலும் மீன் கறி வாசம் வருகுதுங்கோ.

பகிடி என்ன தெரியுமோ, நண்பரின்ர பக்கத்து வீட்டு வளவுக்குள்ள இருந்த ரெண்டு மூண்டு தென்னை மரங்களை நாலைஞ்சு பேர் வெட்டிச் சரிச்சுக் கொண்டு இருந்திச்சினமுங்கோ.

எனக்கு அதைப் பார்த்ததும் அப்செட்டாகப் போயிட்டுதுங்கோ. தேங்காய் விலை முப்பத்தி ஐஞ்சு, நாப்பது எண்டு நாளுக்கு நாள் எகிறிக் கொண்டு இருக்கேக்க இந்தச் சனம் ஏண்டா தென்னை மரத்தை வெட்டுது எண்டு, அயலில இருக்கிற சனத்திட்ட விசாரிச்சேனுங்கோ.

சனம் என்ன சொன்னிச்சு தெரியுமோ, தென்னை மரங்கள் வெட்டப்படுகிறதும், அதுக்கு பக்கத்தில இருக்கிறதும் அண்ண்ன் தங்கச்சியின்ர வீடாமுங்கோ.

தென்னை மரத்தில இருந்து தேங்காய் பக்கத்தில இருக்கிற தங்கச்சியின்ர வளவுக்குள்ள விழுகுதாம். அதை தங்கச்சி எடுத்துக் கொள்ளுறாராவுமுங்கோ. தங்கச்சி தேங்காயை எடுக்கிறதாலை கோபத்தில அண்ணன்காரன் தென்னை மரத்தையே வெட்டிக் கொண்டிருக்காறாமுங்கோ.

உந்தக் கதையைக் கேட்டதுமே அந்தப்பாச மலர்களை நினைச்சு கண்ணில ஆனந்தக் கண்ணீரே வந்திரிச்சுங்கோ.

உந்தக் கேசில் தங்கச்சியைக் கேக்கிறதை விடவும், வெட்டிக் கொண்டிருக்கிற அண்ணனிடமே கேப்பம் எண்டு வேலியாலை எட்டி ' என்ன அண்ணாச்சி தென்னமரத்தை வெட்டுறீங்களே' எண்டு கேட்டனுங்கோ.

'அதொண்டுமில்லையுங்கோ.. வீடு கட்டப்போறம், அதுதான் மரத்தை வெட்டுறம். இளநீ இருக்கு குடிக்கிறீங்களோ' எண்டு கேட்டாருங்கோ?.

ஆஹா..ஆஹா 'சமூகப் பொறுப்புள்ள அண்ணன்டா.. இவன் எண்டு மனசுக்குள்ள நினைச்சுக் கொண்டு, தாங்கோ குடிப்பமெண்டு வளவுக்குள்ள போயிட்டேனுங்கோ.

'தேங்காய் விலை ஒரு பக்கம் இருக்கட்டும் தென்னையை வெட்டிறது குற்றமில்லையோ' எண்டு கேட்டனுங்கோ.

அதுக்கு அந்த பாசக்கார அண்ணன் என்ன சொன்னார் தெரியுமோ, காசு கொடுத்து தேங்காய் வாங்கலாமுங்கோ, தேங்காய் கொடுத்து பிரச்சனை வாங்கலாமோ, எண்டார் பாருங்கோ.

எனக்கு குடிச்ச இளநீர் மூக்கால வெளியாகிடுமோ எண்டு ஆகிடிச்சுங்கோ. நாட்டுப்பிரச்சனை, உலகப்பிரச்சனை ஒரு பக்கம் இருந்தாலும், இது மாதிரி பாச மலர்களினதும், அபூர்வ சகோதரர்களினதும் பிரச்சனைகளும் இருக்கத்தான் செய்யுதுங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**


# அச்சுக் கலையின் தந்தை






எழுத்துக்ளைத் தனித்தனியாக நகர்த்தலாமே! இதை அறிந்த ஜோன் ஆச்சரியப்பட்டுப் போனார். தானும் அந்த முறையைப் பரிசீலிக்கலானார்.

முதலில் மரத்தில் எழுத்தைக் குடைந்து தயாரித்தார். ஆனால் அதில் மசி பிடிக்கவில்லை காகிதத்தை வைத்து அழுத்தியபோது ஈயஎடுத்துக்கள் நசுக்கிச் சப்பட்டையாகிவிட்டன. ஈயம் இப்படி இரும்பில் தயாரித்தால்? தயாரித்தான். தயாரிப்பது கடினமாக இருந்தது. ஆனால் அப்படித் தயாரித்தபோதிலும் அது காகிதத்தை வெட்டி ஓட்டையாக்கியது. ஜோன் பொறுமையை இழக்கவில்லை. எழுத்தைத் தயாரிக்க ஏற்றதோர் உலோகத்தைத் தேடிக் கொண்டிருந்தார். எந்த உலோகம் என்பதை அறிய முயற்சிசெய்து கொண்டிருந்த போதிலும் அது கிடைத்தால் ஒரு புத்தகத்தை எப்படி உருவாக்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் கட்டன் பர்க். மோல்டு செய்து. அதன்மூலம் ஒரே எழுத்தை ஆயிரக்கணக்கில் வார்த்துக் கொள்ளவேண்டும். ஒரு எழுத்துக்கு ஒரு மோல்டு. ஒரு மோல்டின் மூலம் பல ஆயிரம் எழுத்து. நேர்த்தியான உறுதியான மோல்டை உருவாக்கியாக வேண்டும்.



தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு 'ஸெண்ட்' நாணயத்தையும் தன் முயற்சிக்கான ஆயுதங்கள். உலோகங்கள் வாங்குவதிலேயே செலவிட்டார் ஜோன். 1435 இல் ஜோனின் தாயார் இறந்து. மகனுக்கு கொஞ்சம் சொத்து வைத்துப் போனார். ஜோன் தன்னுடன் மூன்று வேரைக் கூட்டுச்சேர்த்துக் கொண்டார். புத்தகம் தயாரிக்கும் முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபடலானார். கூட்டாளிகளில் ஒருவடைய சகோதரர் காகித ஆலை வைத்திருந்தார். மூன்றுபேரும் இந்தத் துறையில் முதலீடு செய்தார்கள்.

(தொடரும்....)

# இந்தவாரம் உங்கள் பலன்

(25.10.2012 தொடக்கம் 31.10.2012 வரை)

### மேடம்

திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணத் தகவல் மையங்கள் மற்றும் நண்பர்களின் உதவிகளால் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் புதிய பிரச்சினைகள்வர இருப்பதால் பயணங்களைச் சற்று தள்ளிப் போடுதல் நல்லது. பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். பெண்களிடம் கவனமாகப் பேசிப் பழகுவதால்வா இருக்கும் பிரச்சினைகளை தவிர்க்கலாம். நாட்பட்ட தீராத நோய்கள் தீரவேண்டி புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன் மூலம் நல்ல பலன் அடைவீர்கள். மனைவியின் உடல்நிலையில் சில பாதிப்புகள் ஏற்படுவன் மூலம் மருத்துவ செலவுகள் ஏற்படும்.

### இடபம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேல் அதிகாரிகளின் ஆதரவும் நினைத்த இடத்திற்கு பணிஇடமாற்றமும் ஏற்படலாம். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகி விட்டுக்கொடுத்துப் போகுவதன் மூலம் மனம் நிறைவடைவீர்கள். வராத பணம் மற்றும் பொருட்கள் பெரிய மனிதர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற விசயங்களுக்காகப் புதிய முயற்சிகளில் தலையிட்டு வெற்றிபெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். விவசாயத்தில் நல்ல இலாபம் கிடைக்கும். பெண்கள் விசயத்தில் கவனமுடன் இருக்கவும். தீராத நோய்கள் மற்றும் கடன் தொல்லைகள்தீர ஆலய வழிபாடுகளைச் செய்துவர எடுத்துக் கொண்ட முயற்சிகளில் வெற்றியைப் பெறுவீர்கள்.

### மிதுனம்

தீராத நோய்கள் தீரவேண்டி நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல முடிவுகள் வந்துசேரும். கொடுக்கல் - வாங்கல் சம்பந்தம் ஆகிய பிரச்சினைகளில் உறவினர்களின் தலைமிடுதலால் ஓரளவு மனநிம்மதி அடைவீர்கள். மனத்தைரியமுடன் எடுத்த காரியங்களைச் சற்று முயற்சியுடன் செய்துமுடிப்பீர்கள். வங்கிகளின் மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன் உதவித் தொகைகள் கிடைப்பதில் இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். கணவன் - மனைவி உறவுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும்.

### கடகம்

சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுப் பணிகளில் பங்கு கொண்டு மனநிம்மதி அடைவீர்கள். பயணங்களின் மிகுந்த கவனமுடன் இருக்கவும். புதிய வீடு, நிலம் வாங்குவதற்காகப் போட்டிருந்த திட்டங்களில் சற்று பின்னடைவு ஏற்படலாம். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். குழந்தைகளுக்காக ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும். செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர் ஏற்பட இருப்பதால் எதிலும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். வங்கிகளின் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன் உதவி தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வடமேற்குத் திசையில் இருந்து நற்செய்திகள் வந்துசேரும்.

### சிங்கம்

பழுதுபட்ட ஆலயப் பணிகளில் பங்கு கொண்டு நற்பெயர் புகழ் அடையவாய்ப்புகள் உள்ளது. கொடுக்கல், வாங்கலில் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. நண்பர்களுடன் பணப் பிரச்சினைகள் சம்பந்த மாக மனக்கசப்புகள் ஏற்படலாம். குடும்பத்தில். மருத்துவச் செலவுகளுக்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. புதிய நபர்களிடம் எச்சரிக்கையுடன் பேசிப் பழகவும். குடும்பத்தில் காரணமற்ற குழப்பங்களும் மனச்சஞ்சலமும் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வேண்டாத விசயங்களில் தலைமிட்டு வீண் சிக்கலை விலைக்கு வாங்காதீர்கள்.

### கன்னி

குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வந்துபோகும். காதலர்களுக்கு நல்ல செய்தி வந்துசேரும். நீண்ட காலமாகப் பிரச்சினைகளில் இருந்து வந்த அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். கணவன், மனைவி அன்பாக இருப்பார்கள். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும் மருத்துவச் செலவுகளும் உண்டாகலாம். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நன்மையைத் தரும். விவசாயம் செய்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த அரசு சம்பந்தமான உதவிகள் கிடைக்கும். பணத் தேவைகளுக்காக பூர்வீகச் சொத்துக்கள் சிலவற்றை விற்பதன் மூலம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

### துலாம்

குழந்தைகளுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கும் காலமாகும். குடும்பத்தில் காரணமில்லாத மனக்கசப்புகளும் மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நல்லது. பழைய கொடுக்க வேண்டிய கடன்களால் மீண்டும் தொல்லைகள் வந்துசேரும். விட்டுப்போன கணவன் - மனைவி உறவுகளில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி மீண்டும் ஒன்று சேருவார்கள். பூமி, நிலம் சம்பந்தமான வழக்குகள் மற்றும் பிற வழக்குகளில் இருந்து விடுதலை கிடைக்கும் காலமாகும். மாணவர்கள் கல்வியில் மிகவும் கவனமுடன் பயின்று வருதல் நல்லதாகும். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடுதல் நல்லது.

### விருச்சிகம்

மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் மனதிருப்தி அடைவீர்கள்.விட்டுப் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்குவதன் மூலம் சில மனக்கவலைகள் வந்து நீங்கும். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய விவசாயங்களின் மூலம் எதிர்பாராத நல்ல இலாபம் அடைவீர்கள். உடம்பில் உஷ்ணம் மற்றும் சூம் போன்ற உபாதைகள் வந்துபோகலாம். காதல் போன்ற பெண்களின் விசயங்களில் மற்றவர்களின் உதவிகள் கிடைக்கும். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் பொருள் வரவும் மனமகிழ்ச்சியும் வந்துசேரும். பொருளாதாரத்தில் இதுவரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி மனநிம்மதியும் சந்தோசமும் அடைவீர்கள்.

### தனுசு

மற்றவர்களை நம்பிப் பணம் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். சகோதர சகோதரிகளால் சிற்சில நன்மைகள் வந்துசேரும். குடும்பச் சொத்து விசயங்களில் வழக்கு சம்பந்தமான முயற்சிகளைச் சற்றுத் தள்ளி போடுதல் உகந்ததாகும். இதுநாள் வரையில் தடைப்பட்டு வந்த காரியங்களை மனத்தைரியமுடன் சற்றுப் பிரயாசையுடன் செய்து முடிப்பீர்கள். கணவன் - மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்துள்ள கருத்துவேறுபாடுகள் இன்னும் சற்று நீடிக்கும்.

### மகரம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவீர்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக வெகுதூர உல்லாசப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். இதுவரையில் நெருக்கடியில் இருந்து வந்த பணத் தட்டுப்பாடுகள் நீங்கிப் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் செய்து ஏமாற்றம் அடையாதீர்கள். தந்தை - மகன் உறவுகளில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் தீரும். கணவன் - மனைவி சந்தோசமாக இருப்பர். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். விவசாயிகள் நன்மை அடைவார்கள். பொதுவாக இது ஒரு மன நிம்மதி நிறைந்த வாரமாகும்.

### கும்பம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதற்கான முயற்சிகளில் தடைகள் ஏற்படலாம். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. பொதுக் காரியங்களில் தலையிட்டு நற்பெயர் புகழ் அடைய வாய்ப்பு உள்ள காலமாகும். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு நல்ல பலன்களைக் கொடுக்கும். கடன்கொடுத்து இருந்த நீண்டகாலமாக வராத பணம் திரும்பக் கை வந்துசேரும் தாயின் உடல் பாதிப்புக்களால் மனஉளைச்சலும் பொருட்செலவுகளும் உண்டாகலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

இது உங்களுக்கு நன்மை தரும் வாரமாகும். உடல்நிலையில் கண், காதுகளில் கவனம் தேவை. புதிய கடன்களை வாங்கினால் திருப்பி செலுத்த இயலாமல் போகவாய்ப்பு உள்ளதால் கடன் வாங்குவதை தவிர்க்கவும். தேவையில்லாத புதிய நண்பர்களின் தொடர்புகளால் வீண் பிரச்சினைகளில் மாட்டிக்கொள்ள வேண்டாம். மஹான்களின் தரிசனங்கள் மூலம் மனநிம்மதி அடைவீர்கள். மிகநீண்டகாலமாக நினைத்துக்கொண்டு இருந்த தீர்த்த யாத்திரைகள் சென்றுவர வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் சகோதர சகோதரிகளால் பொருள் வரவும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

**ஹஜ் பெருநாளைக் கொண்டாடும்
அனைத்து முரசின் வாசக
நெஞ்சங்களுக்கும் முரசின்
ஹஜ் பெருநாள்
வாழ்த்துக்கள்!**

# மகிழ்வூட்டும் 'ஹஜ்'

**வேதத்தை மதிக்கும்
விவேகத்தைக் காட்ட
மக்கள் கூட்டம்
மக்கா நகரில்.**


**ஹாஜிகள் அங்கு
நீரால் உடல் கழுவி
நெற்றியால் நிலம் தழுவி
அல்லாஹ்வை வணங்கி
அறநெறி முழக்கம்.**

**நெஞ்சுருகி இங்கு
நேர்ச்சியாய் ஹாஜிகள்
பரிசுத்தமாய் இருந்து
பாவமீட்சி பெறுவர்.**

**இதய சுத்தியோடு
இறை வுணர் வோடு
இனியோராய் இவர்கள்
ஈருலக ஈடேற்றமடைவர்.**

**உயர்மிகு இஸ்லாத்தின்
உன்னத கடமை
மனிதரைப் புனிதராக்கி
மகிழ்வூட்டும் 'ஹஜ்'**

எம்.சி.கலீல், கல்முனை-05.




நடிகை த்ரிஷா, தனது குழந்தைப் பருவத்தில் தனது தந்தை கிருஷ்ணின் கரத்தில் தாவி இருப்பதையே படத்தில் காண்கிறீர்கள். ஐதராபாத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் மேலாளராக பணியாற்றி வந்த நடிகை த்ரிஷாவின் அப்பா கிருஷ்ணனுக்கு அண்மையில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டது. அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

த்ரிஷா அம்மா உமா, ஒரு ஹோட்டலில் சிகை அலங்கார நிலையம் நடத்தி வந்தார். அதே ஹோட்டலில் மேலாளராக இருந்த கிருஷ்ணனுக்கும் அவருக்கும் காதல் ஏற்பட்டு இருவரும் திருமணம் செய்துகொண்டனர்.


இருப்பினும் த்ரிஷா பிறந்த சில வருடங்களிலேயே கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்தனர்.

**(தொடர்ந்து வாசிக்க சினி விசிட்டைப் புரட்டுங்கள்...)**




வெப்பத்தை அளக்க பயன்படுத்தும் தெர்மா மீற்றரை விஞ்ஞானி டேனியல் கபிரீயேல் பாரன்கீட் என்பவர் கண்டுபிடித்தார். இவை 300 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது.

பித்தளையினால் தயாரிக்கப்பட்ட இந்த தெர்மா மீற்றர் லண்டனில் உள்ள கிறிஸ்ட்ஸ் நிறுவனத்தில் வைத்து ஏலம் விடப்பட்டது. தற்போது அந்த தெர்மா மீற்றர் ரூ.47 இலட்சத்துக்கு ஏலம் போயுள்ளது. கடந்த 40 ஆண்டுகளாக வேறு ஒரு நபருக்கு சொந்தமாக இருந்த தெர்மா மீற்றர் தற்போது ஏலம் மூலம் இன்னொருவர் கைக்கு மாறியுள்ளது. ஆனால், ஏலம் எடுத்த அந்த நபரின் பெயர் அறிவிக்கப்படவில்லை.



இலங்கைக் கிரிக்கெட்டின் புதுவரவுகளில் இவரும் ஒருவர். 1989 ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்த டில்சான் முணவீரவை பண்பட்ட கிரிக்கெட் வீரனாக புடம்போட்டது. நாளந்தாக் கல்லூரி. வலது கை துடுப்பாட்ட வீரனான இவர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் உள்ளூர் போட்டிகளில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வந்து கிரிக்கெட் ஆர்வலர்களை ஆச்சரியப்பட வைப்பதில் கில்லாடியானவர்.

அண்மையில் நடந்துமுடிந்த SLPL போட்டிகளில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பில் பட்டையைக் கிளப்பி இலங்கைக் கிரிக்கெட் தேர்வாளர்களையும் கவர்ந்துவிட்டார்.

அதனால் 20-20 அணியிலும் இடம் கிடைத்துவிட்டது. எனினும் சர்வதேச அறிமுகம் கொடுத்த பெரிய தொடர் போன்றவற்றால் ஏற்பட்ட பதட்டம் சறுக்கலை ஏற்படுத்திவிட்டது. எனினும் எதிர்காலம் பிரகாசமாகவே இருக்கின்றது. கிரிக்கெட் ஆர்வலங்களைக் கவர்ந்திருக்கும் டில்சான் முணவீரவை கவர்ந்திழுத்த காரிகைதான் இங்கே படத்தில் டில்சானின் தோள்சாய்ந்து போஸ் கொடுக்கின்றார்.





இங்கிலாந்தை சேர்ந்த 6 வயது சிறுமி உலகிலேயே சிறிய டிஸ்க் ஜாக்கி என்று கின்னஸ் சாதனை படைத்திருக்கிறாள்.

விருந்து நிகழ்ச்சிகள், கலை விழாக்கள், பார்ட்டிகள், விடுதிகளில் இசை ரசிகர்களின் அல்பங்களை ஒலிக்க தொகுப்புகளை தொகுத்து எதிர்பார்ப்புக்கேற்ப பாட்டு மற்றும் செய்பவர் டிஸ்க் ஜாக்கி. (சவுண்ட் சர்வீஸ்). ஸ்டார் ஓட்டல்களில் நடக்கும் பார்ட்டிகள், டிஸ்கொதேக்களில் இவருக்கு மவுசு அதிகம். இங்கிலாந்தின் வொர்சஸ்டர்ஷயர் பகுதியில் உள்ள பெர்ஷோர் நகரை சேர்ந்தவர் ஸ்டீவ் ஜாப்ஸ், டிஸ்க் ஜாக்கியாக இருக்கிறார். டி.பி.எப்.எம் ஒன்லைன் என்ற இணையத்தளத்தில் டிஜேயாக இருந்தார். இவரது 6 வயது மகள் அம்பர் ஜேக்கப்ஸ். கடந்த 6 மாதம் முன்பு அப்பாவுடன் சேர்ந்து ஒன்லைன் ஸ்டேஷனில் இவரும் பாட்டுகளை தொகுத்தளிக்க ஆரம்பித்தார். இவருக்கும் ரசிகர்கள் குவியவே நம்பர் ஒன் டிஜேயாகிவிட்டார் சுட்டிப் பெண் அம்பர். உலகிலேயே குறைந்த வயது டி.ஜே என்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்திருக்கும் அம்பருக்கு இங்கிலாந்து முழுவதும் வாழ்த்துகள் குவிகின்றன.



உலகிலேயே பெரிய 7 நட்சத்திர ஹோட்டல்களில் ஒன்றான 4 ஆவது பெரிய ஹோட்டல் துபாயில் அமைந்துள்ளது. இந்த ஹோட்டலின் பெயர் Burj Al Arab என்பதாகும்.

இந்த நட்சத்திர ஹோட்டலில் 1000 அடி உயரமும், 415 சதுர மீற்றர் கொண்ட டென்னிஸ் மைதானம் காணப்படுகிறது. இந்த மைதானமே உலகின் மிக உயரமான டென்னிஸ் மைதானமாகும்.

